Volume-11
Issue-6

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

ஜூன்-2018 (ரமழான்-ஷவ்வால்-1439)

விலை ரூ. 20/-




## தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை
## தமிழக அரசின் பயங்கரவாதம்

## காணாமற்போன தமிழ்நாட்டு முஸ்லிம் வாக்காளர்கள் 12 லட்சம்..?



## கவிக்கோ ஒரு போராளி..!



## ஈரான்-இஸ்ரேல் போர்?
## வெல்லப்போவது யார்?



## முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர்
## சுல்தான் நூருத்தீன் ஸங்கி (ரஹ்)

بسم الله الرحمن الرحيم

"

மார்க்கத்திலிருந்து
நூஹூக்கு எதனை
அவன் உபதேசித்தானோ
அதனையே
உங்களுக்கும் அவன்
மார்க்கமாக்கியுள்ளான்.
(நபியே!) உமக்கு நாம்
வஹீ அறிவித்தோமே
அதுவும், இன்னும்
எதனை இப்ராஹிமுக்கும்,
மூஸாவுக்கும், ஈஸாவுக்கும்
நாம் உபதேசித்தோமோ
அதுவும் என்னவெனில்
"இம்மார்க்கத்தை
நிலை நாட்டுங்கள் ;
இதில் நீங்கள் பிரிந்து
விடாதீர்கள்" என்பதாகும்.
(அல்குர்ஆன் - 42:13)

"


தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை
தமிழக அரசின் பயங்கரவாதம் - 6

தூத்துக்குடி படுகொலைகளின் பின்னணியில்
உறைந்திருக்கும் உண்மை! - 15

முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர்
சுல்தான் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) - 18

ஈரான்-இஸ்ரேல் போர்? வெல்லப்போவது யார்? - 29

பாலியல் வன்கொடுமை செய்வதற்கு பா.ஜ.
கட்சியினருக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளதா? - 39

கவிக்கோ ஒரு போராளி! - 44

சிலுவைப் போர் 2.0 - 46

இஸ்லாமிய வங்கி முறை! - தகாபுல் - 49

காணாமற்போன தமிழ்நாட்டு
முஸ்லிம் வாக்காளர்கள் 12 லட்சம்..? - 50

எது முதலில்? - 53

இஸ்லாம், அரசியல், அதிகாரம்
அரபுலக எழுச்சி - 56

வெயிலால் ஏற்படும் உடல் ரீதியான
பாதிப்புகளுக்குத் தீர்வு - 58

இதுதான் இந்துத்துவா கல்வியோ! - 61

கல்வி அறியாமையை போக்கி
ஆற்றலை வளர்க்க வேண்டும் - 64



ஜூன்-2018

# வைகறை
## வெளிச்சம்

ரமழான்-ஷவ்வால்-1439

ஆசிரியர்
**மு. குலாம் முஹம்மது**, M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
**கே.எம். இலியாஸ் ரியாஜி**, M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 8148129887



All disputes arising out of any publication in this monthly
will come under the jurisdiction of Chennai courts.



**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

http:/www.facebook.com/vaigarivelicham

## அன்பார்ந்த வாசகர்களே!

மே-14 ஆம் நாள் பாலஸ்தீனில் 64 அப்பாவி முஸ்லிம்கள் யூதர்களால் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு அல்லாஹ் சுவர்க்கத்தை வழங்கிடுவானாக!

அவர்களுக்காக துஆ செய்யுங்கள். அதேபோல் இந்தியாவின் வட மாநிலங்களில் பல்வேறு போலி காரணங்களின் அடிப்படையில் தினமும் பல முஸ்லிம்கள் கொலை செய்யப்படுகின்றார்கள். அவர்களுக்காகவும் அல்லாஹ்விடம் துஆச் செய்யுங்கள்.

அமெரிக்காவின் ஐரோப்பிய நாடுகளின் இஸ்லாமோ ஃபோபியா - இஸ்லாத்தின் மீதுள்ள பயத்தால் - பல லட்சம் அப்பாவிகள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களுக்காகவும் துஆச் செய்யுங்கள்.

இந்த அட்டூழியங்கள் ஒழியவும், பாசிசம் மாயவும், உலக மக்கள் அனைவரும் நல்வாழ்வு வாழவும் துஆ செய்யுங்கள்.

இந்த இதழில் பாலஸ்தீன படுகொலைகள் பற்றிய தகவல்கள், அதிகமாக இடம் பெறவில்லை.

**- இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் அதிகமாக இடம்பெறும்.**

**வாசகர்கள் அனைவருக்கும் இனிய ரமழான் நல்வாழ்த்துகள்....**

நாம் தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் என்பதை நிறுவி இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணியை செய்து வருகின்றோம்.

இந்தப் பணிகள் கடந்த 38 ஆண்டுகளாகத் தொடர்ந்து வருகின்றன. இவற்றைப் பற்றிய விரிவானதொரு கள அறிக்கையை சென்ற இதழில் விளக்கமாக குறிப்பிட்டிருந்தோம்.

இந்தப் பணிகளுக்கு இந்த ரமழான் மாதத்தில் மட்டுமே நிதி வசூல் செய்கின்றோம். இதில் வைகறை வாசகர்கள் தங்கள் பங்களிப்புகளைத் தாராளமாக வழங்கிட வேண்டுகின்றோம்.

**உங்கள் நிதி உதவிகளை**

Please draw your cheques / **DD in Favour of**
**DARUL ISLAM FOUNDATION TRUST**
**Canara Bank A/c. 1287101017301 IFSC Code : CNRB0001287**
Branch St.Mary's Road, R.A.Puram, Chennai. and send to :
52/1, Mannadi Street, 4th Floor, Room No.7, Mannadi, Chennai - 600 001.
**Mobile : 81481 29887,** Email : darultrust@yahoo.com, website : www.darulislam.in

இவண்,

**"வைகறை வெளிச்சம் ஆசிரியர் குழுக்கள்"**
**தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்**
**நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம்**

# அன்பகத்தின்

## அன்பான வேண்டுகோள்!

**அன்பார்ந்த வாசகர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)**

**எமது இஸ்லாமியப் பிரச்சாரப் பணிகள் 37 ஆண்டுகளைக் கடந்து, 38 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றன. அல்ஹம்துலில்லாஹ்.**

ஒரு நீண்ட நெடும்காலம் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும், எங்கள் பிரச்சாரங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. அல்லாஹ், எங்கள் வழி பல பிரபல்யங்களுக்கு, நேர்வழியைக் காட்டினான் அல்ஹம்துலில்லாஹ்.

அப்படி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கு இஸ்லாத்தின் செயல்முறை களையும் இஸ்லாத்தின் அனைத்துப் பகுதிகளையும் கற்றுத் தருவதற்கென மூன்று கல்வி நிறுவனங்களை நிறுவியுள்ளோம். அல்ஹம்துலில்லாஹ்.

இந்த மூன்று நிறுவனங்களிலும் பல்லாயிரக்கணக்கானோர் மார்க்க கல்வியை கற்று சென்றுள்ளார்கள். அவ்வாறு நிறுவப்பட்ட மூன்றாவது கல்விக்கூடமே அன்பகம். அதுவும் தன் 10 ஆம் ஆண்டை நிறைவு செய்கின்றது. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கல்வி கற்றுச் சென்றிருக்கின்றார்கள். அன்பகம் கடந்த 10 ஆண்டுகளாக ஒரு வாடகைக் கட்டடத்தில் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இதையும் அடிக்கடி மாற்றிட வேண்டிய நிலை.

**இன்ஷா அல்லாஹ்** அதனை ஒரு சொந்தக் கட்டடத்திற்கு மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். அதற்கு உங்கள் நிதி உதவிகளை தாராளமாக வழங்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

**அல்லாஹ் உங்களுக்கு அளப்பரிய கூலிகளை வழங்கிடப் போதுமானவன்.**

இவண்,

**மு. குலாம் முஹம்மது,** பேராசிரியர் **இல்யாஸ் ரியாஜி**

ஹாஜி. **அப்துல் ரவூஃப்**

**செக், டி.டி. அனுப்புவோர்**

**DARUL ISLAM FOUNDATION TRUST**

என்ற பெயருக்கு எடுத்து பின்வரும் முகவரிக்க அனுப்பவும்

51/1, மண்ணடி தெரு, 4-வது மாடி, அறை எண்.7, மண்ணடி, சென்னை - 600 001.

website : www.darulislam.in, Email : darultrust@yahoo.com,

Please draw your cheques / **DD in Favour of DARUL ISLAM FOUNDATION TRUST**

**Canara Bank A/c. 1287101017301** Branch St.Mary's Road, R.A.Puram, Chennai.

and send to : 52/1, Mannadi Street, 4th Floor, Room No.7, Mannadi, Chennai - 600 001.

**Mobile : 81481 29887,** Email : darultrust@yahoo.com, website : www.darulislam.in

# தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை

# தமிழக அரசின் பயங்கரவாதம்




- **ஸ்டெர் ஆலையால் கான்சர் நோய் வந்து இறந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை எட்டின.**
- **மே 22, 2018 அன்று நடந்த முதல் துப்பாக்கிச் சூட்டில் 13 பேர்தான் இறந்தார்கள் என்பதை தூத்துக்குடி வாழ் பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இன்னும் பலர் இறந்திருக் கலாம், அது மறைக்கப்பட்டி ருக்கின்றது என்கின்றனர் பொதுமக்களின் பொதுவான கருத்து இது.**
- **சிறை பிடிக்கப்பட்டவர்களை வெளியே விட்டால் தான் காணாமற்போனவர்களின் முழு எண்ணிக்கையும் தெரியவரும் என்றும் மக்கள் கருதுகின்றனர்.**
- **இதற்கு முன்பும் பலமுறை ஸ்டெர்லைட் ஆலையை மூடிவிட்டதாகக் கூறினார்கள். ஒருமுறை மாவட்ட ஆட்சியர், எங்களிடம் ஒரு கொத்து சாவியைக் காட்டி, இது ஸ்டெர்லைட் ஆலையின் சாவிகள் மூடிவிட்டேன் என்றார். ஆனால் உண்மையில் மூடவில்லை. (பேராசிரியர் பாத்திமா ஸ்டெர்லைட் ஆலை எதிர்ப்பு போராட்ட இயக்கத் தலைவி)**
- **இறந்தவர்களின் உடலை வைத்து அரசு நடத்தும் அரசியல்.**

*(ஆதாரம் : பல்வேறு தொலைக்காட்சிகளுக்கும் மக்கள் தந்த பேட்டிகள்)*

ஸ்டெர்லைட் காப்பர் என்ற ஆலையை மூடிட வேண்டும் என அந்த ஆலையால் அழிந்து கொண்டிருக்கும் தூத்துக்குடி வாழ்மக்கள் போராடி வருகின்றார்கள். இந்தப் போராட்டங்கள் பல ஆண்டுகளாக நடந்து வருகின்றன. அதற்கான எதிர்ப்பு வலுத்து வருகின்றது.

இறுதிகட்ட உறுதிமிக்க நடவடிக்கையாக கடந்த 100 நாட்களாக இந்தப் போராட்டம் தொடர்ந்து நடந்து வருகின்றது. நூறாவது நாள் 22-5-2018 அன்று போராட்டக்காரர்கள் வன்முறையில் இறங்கிவிட்டார்கள் என்றொரு பெரும் புரளி கிளப்பிவிடப்பட்டது.

எடுத்த எடுப்பில் காட்சி ஊடகங்களைப் பார்ப்பவர்களுக்கு போராட்டக்காரர்கள் கல் வீச்சில் இறங்கி வன்முறைக்கு இடந்தந்து சேதங்களை உண்டு பண்ணிக்கொண்டிருக் கின்றார்கள் என நம்பிடத் தோன்றும்.

ஏனெனில் உடைந்த கலெக்டர் அலுவலகம், எரிந்த சில வாகனங்கள், கரிந்து கிடக்கும் பைக்குகள் இவையெல்லாம் அடிக்கடி காட்சி தந்து இவற்றையே நமக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கின்றன.

ஆனால் 13 உயிர்களை இழந்தபின் தான் நமக்குத் தெரியவந்தது இவையெல்லாம் அரசின் உள்ளிருப்பு வேலைகள் என்பது. அரசின் அதீத

மூளையில் தோன்றிய தீவிரவாத சதிகளின் அரங்கேற்றம் அவை. இதை ஊடகங்கள் நமக்குப் பின்னரே தெளிவுபடுத்தின.

99 நாள் அறவழியில் போராடிக் கொண்டிருந்த மக்கள் ஒரே நாளில் அதாவது 100 ஆவது நாளில் எப்படிக் கலவரக்காரர்களாக மாறினார்கள்? என்ற கேள்விக்கான விடையையும் இதில் தெரிந்திட முடிந்தது.

காவல்துறையை, சீருடை இல்லாமல் ஏவி விட்டு, அறப் போராட்டத்தைக் கலவரப் போராட்டமாக வன்முறை வெறியாட்டமாக மாற்றிவிட்டிருக்கின்றார்கள் ஆட்சியில் அமர்ந்திருப்பவர்கள்.

**மெரீனா - சாட்சி**

சரி சீருடையில் இருந்து கொண்டே இந்தக் கலவரத்தைச் செய்திருந்தால்தான் என்ன செய்திட இயலும்? அப்போதும் ஒன்றும் செய்திட இயலாது. மெரினாவில் தன்னெழுச்சியாக ஏற்பட்ட ஜல்லிக்கட்டுப் போராட்டத்தில் சீருடை அணிந்த காவல்துறைதான் அனைத்தையும் செய்தது.

அப்போது சீருடை அணிந்த காவல் துறையினர் ஆட்டோக்களை கொளுத்தினார்கள். அன்று சீருடை அணிந்த காவல்துறையினர் குடிசைகளுக்குத் தீ வைத்தனர்.

இவற்றையெல்லாம் காரணமாகக் காட்டி கடற்கரையில் வாழும் மீனவர்களை அடித்துத் துவைத்தார்கள். அவர்கள் மருத்துவ உதவிகளைக் கூடப் பெற்றிட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். தன்னார்வ குழுக்கள் தாம்




அந்த மருத்துவ உதவிகளையும் செய்தார்கள்.


ஜல்லிக்கட்டுப் போராட்டத்தின்போது சீருடையில் கபளீகரங்களைச் செய்தவர்கள் மேல் எந்த நடவடிக்கையும் இல்லை. அவர்கள் தட்டிக்கொடுக்கப்பட்டு உற்சாகப்படுத்தப் பட்டார்கள்.

இப்போது கலவரங்களைச் செய்து, துப்பாக்கிச் சூட்டையும் நடத்திய காவலர்கள் மீது எடுக்கப்போகும் நடவடிக்கையும் "எதுவுமாக" இருக்கப்போவதில்லை. இது உறுதி!

ஒரு வேளை எடப்பாடி அரசால் அவர்களுக்குப் பதவி உயர்வும், சிறப்புச் சலுகையும் வழங்கப்பெற்று, அவர்கள் தனிப்படையாக அமைக்கப்படலாம். இந்தத் தனிப்படைகள் இனி மக்கள் போராடும் போதெல்லாம் போராட்டத்தை கலவரப்படுத்தி மக்களை கொலை செய்யப் பயன்படுத்தப்படலாம்.

அறப்போராட்டங்களை அத்துமீறியப் போராட்டங்களாக மாற்றிடவும், மக்களை அரசே கொலை செய்யவும், அத்தோடு ஸ்டெர்லைட் காப்பர் பெரு பண முதலாளிகளைப் பாதுகாக்கவும் பயன்படுத்தலாம்.





விடக்கூடாது. மத்திய அரசின் நேரடிப் பார்வையின் கீழும் கிடுக்கிப்பிடியின் கீழும் நடக்கும் ஆட்சிதான் இன்றைய தமிழக ஆட்சி!.

இவர்கள் ஸ்டெர்லைட் நிறுவனத்திற்காக என்னவேண்டுமானாலும் செய்வார்கள். காரணம் இந்த நிறுவனமே மோடிக்கு வேண்டிய நிறுவனம்.

ஆகவே இவர்கள் காவலர்கள் பெரு பண முதலைகளுக்கும், அநியாயக்காரர்களுக்கும் ஆதரவாக செயல்படத் தொடங்கி உள்ளனர். இந்தக் காட்டேரி காவலர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிய காவலர்களையே சுட்டுக் கொன்றுள்ளார்கள். கொலை செய்யப்பட்ட பலர் இந்தப் போராட்டத்தில் அறவே கலந்து கொள்ளாதவர்கள். ஒருவர் திருமண அழைப்புக் கொடுக்க சென்றவர்.

இதில் முழுமையான பாடம் படித்திட வேண்டியவர்கள், இது ஜனநாயக நாடு. இங்கே இந்த ஜனநாயகப் போராட்டங்கள் வழி அனைத்தையும் சாதித்துவிடுவோம் எனக் கொக்கரிப்பவர்கள்தாம்,

**மத்திய அரசு!**

இங்கே இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். அது, போராட்டக்காரர்களோ, அல்லது அவர்களை போராட்டத்தின் 100 ஆவது நாளில் கண்டுகொண்ட எதிர்க் கட்சிகளோ மத்திய அரசின் தலையீட்டைக் கோரவில்லை. காரணம், இந்தப் பொல்லாதப் புத்தியைப் படித்துக் கொடுத்தவர்களே இந்த மத்திய அரசு மைனர்கள்தாம். இன்னும் சொன்னால் இந்த ஸ்டெர்லைட் ஆலை மத்திய அரசின் ஆசி பெற்ற ஆலைதான். அதற்காக மத்திய அரசிற்கு போதிய அளவில் லஞ்சம் தந்திருக்கின்றார்கள்.

மத்தியிலே ஆட்சியில் இருப்பவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் குண்டு வெடிப்புகளை நடத்தி, அந்தப் பழியை அப்பாவி முஸ்லிம்கள் மேல் போட்டு ஆட்சியைப் பிடித்தவர்கள் என்பதை நாம் மறந்து

**சட்டத்திருத்தங்கள்**

மோடி அரசால் பாதுகாக்கப்பட்ட நிறுவனம், இந்த ஸ்டெர்லைட் காப்பர் நிறுவனம். இந்த ஸ்டெர்லைட் நிறுவனத்தின் உரிமையாளர்களை வேதாந்தம் குழுமம் என அழைப்பார்கள். இந்தக் குழுமத்தினர் மோடிக்கு மிகவும் வேண்டியவர்கள். மோடியின் பாரதீய ஜனதா கட்சிக்கு மிகவும் அதிகமாகப் பணம் தருபவர்கள்.

இந்த நிறுவனம் அந்நிய செலவாணியில் சிக்கலில் சிக்கிக்கொண்டபோது இவர்களுக்காக அந்நிய செலவாணி சட்டத்தை (FCRA) முன் தேதியிட்டு திருத்தினார்கள். இன்றைக்கு ஆட்சியிலிருக்கும் மோடி வகையறாக்கள்.

இதுபோன்ற நிறுவனங்கள் அள்ளி வழங்கிடும் நன்கொடைகளை மனதில் வைத்துக் கொண்டுதான் மோடியின் அரசு பண முதலைகள், கார்ப்பரேட் நிறுவனங்கள், அரசியல் கட்சிகளுக்கு வழங்கிடும் நன்கொடைகளுக்கு வரையறை கிடையாது என்ற சட்டத்தைக் கொண்டு வந்தது.

அதேபோல் இந்த பணங்கள் பற்றிய தகவல்களை வெளியே சொல்ல வேண்டாம் எனவும் சட்டம் இயற்றி சட்டத்தின் பாதுகாப்பை வழங்கினார்கள்.

பசுமைத் தீர்ப்பாயம் Green Tribunal-என் சட்டத்தை 2014 டிசம்பர் முதல் பலமுறை மோடி அரசு இந்த ஸ்டெர்லைட் ஆலைக்காக மாற்றியுள்ளது (Business Standard)

இப்படி மோடி வகையறாக்களுக்கு வேண்டிய நிறுவனமாக இருப்பதால் எத்தனை உயிரை வேண்டுமானாலும் பலிகொடுப்பார்கள். ஆனால் அந்த நிறுவனத்தைப் பாதுகாப்பார்கள்.

செய்தி ஆதாரம் - TOI : May 24, 2018

### ஸ்டெர்லைட் ஆலையை ஏன் மூட வேண்டும்

இந்த ஆலையிலிருந்து வெளிவரும் கழிவுகள் சுற்றுப்புறச் சூழலைப் பெரிதாகப் பாதிக்கும். இதனால் காற்று மாசுபடும். இந்தக் காற்றைத்தான் மக்கள் சுவாசிக்க வேண்டும் என்ற நிலையில் மக்கள் காசநோய் (TB), புற்று நோய் (Cancer) போன்ற நோய்களுக்கு உள்ளாவார்கள். பல ஆயிரம் பேருக்குமேல் புற்று நோயால் பீடிக்கப்பட்டுள்ளார்கள்.

குடி தண்ணீரும் இந்த ஆலையிலிருந்து வெளிப்படும் நச்சுப் பொருட்களால் நாசமாகி விடும்.

காலப்போக்கில் இந்த ஆலையைச் சுற்றி வாழும் மக்கள் அனைவரும் பல்வேறு விதமான நோய்களுக்கு உள்ளாகியுள்ளனர். சிறுவர்களுக்கு ஏற்படும் பாதிப்பு சொல்லி மாளாது. இந்த நச்சு நிறைந்த காற்றைச் சுவாசிப்பதால், கர்ப்பத்திலிருக்கும் சிசுக்களும் கடுமையான பாதிப்புகளுக்கு உள்ளாகும். குழந்தைகள் பிறக்கும்போது Deformed உறுப்புகள் பாதிக்கப்பட்ட நிலையில் பிறக்கின்றன.

### மூன்று மாநிலங்கள் மறுத்த நிறுவனம்

இந்த நிறுவனத்தால் ஏற்படும் பாதிப்புகளை ஆய்வு செய்த "Centre for Science and Enviornment" அறிவியல் மற்றும் சுற்றுப்புறச் சூழலுக்கான ஆய்வு மையம் இந்த நிறுவனம் மிகவும் ஆபத்தானது என அறிவித்தது.

இந்த அறிவிப்பை மையமாகக் கொண்டு, கோவா, குஜராத், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் இந்த நிறுவனத்தைத் தங்கள் மாநிலத்தில் அனுமதிக்க மறுத்துவிட்டன.

### இளிச்சவாயன் தமிழ்நாடு

இப்படி மூன்று மாநிலங்கள் மறுத்து விட்டதால் இந்த நிறுவனம் பல தகிடு தத்தங்களைப் பொய்களைச் சொல்லித்தான் தமிழ்நாட்டில் அனுமதியைப் பெற்றது.

அந்தப் பொய்கள். இந்த நிறுவனத்தை இயங்க விடுவதால், சுற்றுப்புறச் சூழலில் எந்த பாதிப்பும் ஏற்படாது என அறிக்கையைத் தயார் செய்து சமர்ப்பித்தார்கள்.

*1995*-இல் இந்த நிறுவனம் சமர்ப்பித்த பொய்களையும், புனைந்துரைகளையும் அப்படியே ஏற்றுக்கொண்டு தமிழ்நாடு அரசு இந்த நிறுவனத்திடம் பெற வேண்டியதைப் பெற்றுக் கொண்டு அனுமதி வழங்கியது. இதையே வேறு சொற்களால் சொன்னால்



தமிழக மக்களின், தூத்துக்குடி வாழ் மக்களின் வாழ்க்கையில் மண்ணை அள்ளிப்போட்டு விட்டது.

இப்படி பொய்களைச் சொல்லித்தான் தமிழகத்தில் அவர்கள் அனுமதியைப் பெற்றார் கள் என்பதை நாம் முன்னர் குறிப்பிட்ட "Centre for Science and Envionment" என்ற விஞ்ஞான ஆய்வு மையம் அடித்துக் கூறுகின்றது.

(ஆதாரம் : TOI :24/5/18)

**25 கிலோ மீட்டர்**

மக்கள் வாழுமிடங்களிலிருந்து 25 கிலோ மீட்டருக்கு அப்பால்தான் இந்த நிறுவனத்தை நிறுவுவோம் என்ற உத்திரவாதம் வழங்கியுள் ளார்கள். ஏனெனில் அதுவே விதி!.

ஆனால் இந்த விதிகளைப் பற்றியும், அவர்கள் கிஞ்சிற்றும் கவலைப்படவில்லை. மக்கள் அடர்த்தியாக வாழும் Munner Marine Park- வுக்குப் பக்கத்தில் வைத்திருக்கின்றார்கள்.




இதுபோன்ற நிறுவனங்கள் தாங்கள் நிறுவப் படுவதற்கு முன்னால், EIA என்ற Enviornment Impact Assesment (எ) சூழ்நிலையில் ஏற்படுத் தும் தாக்கம் பற்றிய சான்றிதழ் ஒன்றையும் தாக்கல் செய்திட வேண்டும். இதையும் பொய் யாகத் தயாரித்து தாக்கல் செய்திருக்கின்றது. இந்த கோல்மால்களை ஏற்றுக்கொண்டு EC என்ற Enviornmental Clearance சுற்றுப்புறச் சூழலுக்கு பாதிப்பில்லை என்ற நன்சான்றித ழையும் பெற்றிருக்கின்றது.

இத்தனை தகிடுத் தத்தங்களையும் செய்கின்றது என்றால் எந்த தைரியத்தில் அது இவற்றைச் செய்கின்றது?

நம்மிடம் கை நீட்டிப்பணம் வாங்கிடும் மத்திய மாநில அரசுகள், நம்மை எதுவும் செய்திட மாட்டா என்ற தைரியத்தில்தான் இவற்றையெல்லாம் செய்கின்றது.

இப்படி விதிகளை மீறுவதில் அவர்களுக்கு எந்தப் பயமுமில்லை. ஏனெனில் அவர்களின் சட்டைப் பைக்குள் அரசாங்கங்கள்.

**விரிவாக்கம்**

மக்களை மெல்ல மெல்ல கொல்லும் இந்த நிறுவனத்தை விரிவாக்கம் செய்திட விண்ணப்பத்தை அண்மையில் சமர்ப்பித்துள் ளது இந்த நிறுவனம். அதனை இப்போது நமது உயர் நீதிமன்றம் தடுத்து வைத்திருக்கின்றது.

**முதல்வர் எடப்பாடியின் புறட்டு**

13 உயிர்களை பலி வாங்கியப் பின்னணியில் எழுந்துள்ள மக்களின் கோபக் கனலைத் தணித்திட எடப்பாடி அரசு, ஸ்டெர்லைட் ஆலையை மூடுவோம் எனக் கூறியுள்ளது. ஆனால் ஸ்டெர்லைட் நிறுவனத்தின்

தலைமைச் செயலாளர் "நாங்கள் 500 கோடிகளை முதலீடு செய்துள்ளோம். அதனால் சட்டத்தின் உதவி யோடு அங்கேயே செயல்படுவோம்" எனக் கூறுகின்றார்.

செய்தி ஆதாரம் : The Hindu, English 25/5/18

### அரசின் கொலைகள் ! அபார ஜனநாயகம்

இவர்கள் திட்டம் போட்டு நிராயுத பாணி களைக் கொலை செய்கின்றார்கள். இதனால் தான் அன்று இந்தியாவுக்கு விடுதலையை இப்போது வழங்கிட வேண்டாம் என அன்றைய ஆங்கில நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் வின்ஸ்டன் சர்ச்சில் வாதாடினார். அவன் இதைப் போன்ற வன்முறையாளர்களிடம் இந்தியத் திருநாட்டின் அப்பாவி மக்கள் சிக்கிக் கொள்வார்கள் என எண்ணி அஞ்சினான். அது அணுவும்பிசகாமல் அப்படி உண்மை யாகிவிட்டது. இரவில்தான் பெற்றோம் விடுதலையை. ஆனால் பெற்றது விடுதலையைத் தானா? என்ற வினா இப்போது எழுகின்றது.

### மூடுதல் நாடகம்

எடப்பாடி அரசு 24/5/2018-இல் ஸ்டெர் லைட் ஆலையை மூடிட நடவடிக்கை எடுக் கின்றோம் எனக் கூறிய அடுத்த நாள், "தி இந்து" ஆங்கில நாளிதழுக்கு பேட்டித் தந்த ஸ்டெர் லைட் ஆலையின் தலைமை நிருவாகி பி.இராம்நாத் என்பவர்

"எங்கள் ஆலை கடந்த 6 ஆண்டுகளாக மூடித்தான் கிடக்கின்றது. பராமரிப்புப் பணி களுக்காவே மூடி வைத்திருக்கின்றோம் எனக்கூறி இருக்கின்றார். இந்தப் பராமரிப்புப் பணிகளின் போது அந்த ஆலையின் மொத்த கழிவையும் காற்றிலே கலந்துவிட்டுவிட்டார்கள்.

கடந்த பல ஆண்டுகளாகத்தான், காற்றிலே கலந்த இந்த கழிவின் விஷத் தன்மையை மக்கள் அதிகமாக உணர்ந்தார்கள். அதனால் தான் அண்மைக்காலமாக இந்த ஸ்டெர்லைட் ஆலைக்கெதிரான எதிர்ப்புகளும் போராட்டங் களும் வலுவடைந்து வருகின்றன.

இந்தச் சந்தடி சாக்கில் அவர்கள் ஆலையை விரிவாக்கிடும் பணிகளையும் செய்து வருகின்றார்கள். எப்படி இருக்கின்றது அரசின் நயவஞ்சகம்?

### இடமாற்றம்

கலெக்டரும், காவல்துறை தலைமை கண் காணிப்பாளரும் தூத்துக்குடியிலிருந்து மிகவும் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள் ளார்கள். இது அரசின் இன்னொரு ஏற்பாடு.

### விசாரணை கமிஷன்

அரசு உடனேயே ஓர் விசாரணை கமிஷனை நியமித்துள்ளது. இதற்கு முன்னால் மெரினா போராட்டம் ஜல்லிக்கட்டுப் போராட்டம் அதில் காவல்துறையின் அத்துமீறல் இவற்றை யெல்லாம் விசாரிக்க போட்ட விசாரணை கமிஷன் என்னவாயிற்று?

இந்த விசாரணை கமிஷன்தான் அரசுகள் தப்பிக்க வழிவகை செய்யும். எடப்பாடி அரசு மட்டுமல்ல எல்லா அரசுகளும் விசாரணை கமிஷன்களை இப்படித்தான் வைத்து தப்பித்துக் கொண்டிருக்கின்றன.

அரசு சொல்வதை எழுதித்தரும் இந்த விசாரணை கமிஷன் அறிக்கைகள் வெளிவரும் போது குற்றவாளிகள் அத்தனை பேரும் பதவி உயர்வு, ஒய்வு, ஓய்வூதியம் எல்லாம் பெற்று பெருவாழ்வு வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

தப்பித் தவறி ஏதாவது ஒரு நீதிபதி விசாரணையில் உண்மையைச் சொன்னால் அதனை அப்படியே அமுக்கிவிடுவார்கள். இல்லையேல் அவர் விசாரணையின் போது மாயமான முறையில் இறந்து போவார்.

விசாரணை கமிஷன்களின் விவகாரத்தில் நாம் கவனிக்க வேண்டியது. இந்த விசாரணை கமிஷனின் அறிக்கை அரசைக் கட்டுப்படுத் தாது. அவை பரிந்துரையாகவே கருதப்படும். இந்தப் பரிந்துரைகள் ஏற்கப்படலாம். அல்லது நிராகரிக்கப்படலாம்.

விசாரணைக் கமிஷன்கள் பயனில்லை என்பது குறித்து எழுந்த போரில் - விசாரணை கமிஷன் அறிக்கைகளை சட்ட மன்றத்தில், நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்திட வேண்டும். அதிலும் ATR என்ற Action Taken Report கமிஷனின் அறிக்கையை அடியொற்றி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையும் இடம்பெற வேண்டும் என ஒரு விதியை வகுத்தார்கள்.

அரசு தனக்குச் சவ்கரிய படாதபோது நடவடிக் கையை எடுக்காது. விசாரணை கமிஷன் அறிக்கையை தாக்கல் செய்யாது.




**2002 ஆம் ஆண்டில்**

கோத்ராவில் சபர்மதி எக்ஸ்பிரசின் ரயில் பெட்டி களை முஸ்லிம்கள்தாம் எரித் தார்கள் எனப் பழியைப் போட்டுத்தான் குஜராத்தில் லட்சக்கணக்கான முஸ்லிம்களின் உயிரைக்குடித்தார்கள். ஆனால் அதுகுறித்து நடந்த விசாரணை கமிஷன் அறிக்கை இன்னும் மக்களவைகளில் வைக்கப் படவில்லை.

ஆக ஸ்டெர்லைட் ஆலை விவகாரத்தில் ஆகப்போவது எதுவுமில்லை. வேண்டுமானால் பொறுத்திருந்து பார்ப்போம்.

**துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களின் பிணத்தை வைத்து அரசியல்**

இறந்தவர்கள் பிணங்களை இப்போது பெற்றோர்களிடம் ஒப்படைக்க வேண்டாம் என உத்தரவிட்டது உயர் நீதிமன்றம். அத்தோடு அந்தப் பிணங்களைப் பதப்படுத்தி பாதுகாத்திட வேண்டும் என்றும் கூறியது.

காரணம் பிரேத பரிசோதனைகள் முறையாக நடத்தப்பட்டுள்ளனவா? அவை உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின் வழி நடத்திருக்கின்றனவா? என்பனவற்றை அறிந்திடவும், உறுதி செய்திடு வதுமே!

ஆனால் எடப்பாடி அரசின் நிருவாக இயந்திரம் இதிலும் ஒரு கீழறுப்பு வேலையைச் செய்தது அது இறந்தவர்களில் ஒருவரின் தந்தையிடமிருந்து கடிதத்தைப் பெற்றது. அதில் அவர் தனது மகனின் உடலை உடனேயே தந்திட வேண்டும். இறுதி சடங்கு களை நிறைவேற்றிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதாக இருந்தது.

இந்தத் தந்தைக்கு நீதிமன்றம் வந்த பின்னர்தான் தெரிந்தது. தன்னிடம் அதிகாரிகள் பெற்றக் கடிதத்தில் பலப் பொய்களை எழுதி இருந்தார்கள். அதனை இறந்த மகனின் தந்தை நீதிமன்றத்தில் இப்படிக் கூறினார்.

நான் மகனை இழந்த சோகத்தில் மூழ்கித் தவித்தேன். நான் என் பெயரில் எழுதப் பட்டக் கடிதத்தை முழுமையாகப் படிக்கவில்லை. நான் என் கையெழுத்தை அதில் பதித்தேன். இப்போது தான் எனக்குப் புரிகின்றது. அந்தக் கடிதத்தில் என் மகன் ஸ்டெர்லைட் நிறுவனத்திற்கு எதிராக நடந்த மே *22, 2018* போராட்டத்தில் கலந்து கொண்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது.

நான் இந்த நீதிமன்றத்தில் அறுதியிட்டு கூறுகின்றேன் எனது மகன் எந்தப் போராட் டத்திலும் கலந்துகொள்ளவில்லை. ஆனால் காவல் துறையின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானான். காரணம் அவன் தவறான நேரத்தில், தவறான இடத்தில் இருந்தான் என்பதுதான். ஆதாரம் : ஜிபி/ *26/5/2018*

**தந்தை**

நீதிமன்றத்தில் தந்த வாக்குமூலத்திலிருந்து தந்தையை கட்டாயப்படுத்தித்தான் கடிதத்தை எடப்பாடி அரசின் அதிகாரிகள் பெற்றுள்ளார் கள் என்பது தெளிவு. இப்படி இருக்க, ஏன் அரசு அந்தப் பிணங்களை மீட்பதிலும் புதைப் பதிலும் அவசரம் காட்டுகின்றது என்பது புலப் படுகின்றது.

அது முறையான பிரேதப் பரிசோதனை நடந்தால் அரசு சிக்கிக் கொள்ளும் என்பதால் தான். ஆக பிரேத பரிசோதனை முடிந்து பிணங்கள் வெளியே வரும்போது பல அதிர்ச்சி தகவல்களும் வெளிவரும்.

**கொலை செய்யப்பட்டவர்கள்**

அரசால் கொலை செய்யப்பட்டவர்களுள் ஒருவர் ATM ஏ.டி.எம். இல் பணம் எடுக்க சென்றவர். இன்னொருவர் திருமணத்திற்கு

அழைப்புக் கொடுக்கச் சென்றவர். இவர் களெல்லாம் கொலை செய்யப்பட்டதற்குக் காரணம், சிலரை பிணமாக்கிக் காட்டினால் தான் போராட்டக்காரர்கள் இனி எந்த நிலை யிலும், எதற்கும் போராட வீதிக்கு வர மாட் டார்கள் என்ற நினைப்பே!.

ஆக நடந்தது அரசு பயங்கரவாதம்.

## சுற்றுப்புறசூழல் கேடுகளும், ரமழான் மாதமும்

சுற்றுப்புறச் சூழல் விவகாரம் ஒன்று ஒவ்வொரு ரமழான் மாதத்திலும் மோடி வகையறாக்களால் எழுப்பப்படும். அது "Cone" கூம்பு வடிவ குழாய்களால் ஏற்படும் சுற்றுப்புற சூழல்கேடு.

இதற்காக மோடி வகையறாக்கள் 2005-இல் வழங்கப்பெற்ற உச்ச நீதிமன்ற தீர்ப் பொன்றைக் காட்டி, பாங்கு சொல்வதை நிறுத்த வேண்டும் என்பார்கள். உடனேயே நமது நீதிபதிகள், தங்களுக்கே உரிய பாணியில் ஓர் அறிவிப்பைச் செய்வார்கள்.

"ஆமாம் கடவுளுக்கு காதுகேளாதா?" என்றெல்லாம் கூட நையாண்டி செய்தார்கள்.

"பாங்கு" மனிதர்களை தொழுகைக்கு அழைப்பதற்கே அல்லாமல், பாங்கு கடவுளை அழைப்பதற்கல்ல என்பதைக் கூட அறிந்திட இயலாதவர்கள். உடனேயே தடை உத்தரவு என்றெல்லாம் அல்லோல கல்லோலப்படுத்து வார்கள் பள்ளிவாசல்களை.



பள்ளிவாசல்களில் அனுமதிக்கப்பட்ட 50 டெசிபல் அளவுக்கே ஒலி எழுப்பப்படுகின்றது. இதையறியாத சில இந்துத்துவ இன்ஸ்பெக் டர்கள் தாங்களே குழல் வடிவ குழாய் ஒலி பெருக்கிகளை கழற்றிட சுவர் ஏறி குதிப்பார்கள். ஒரு விதமான சண்டைக்குப் பின் அது ஓய்ந்தது.

இதில் நம் சார்பில், பசுமை தீர்ப்பாய்வு மையத்தில் ஒரு மனுவை RTI என்ற தகவல் பெறும் உரிமையின் கீழ் தாக்கல் செய்தோம். அதில், நீங்கள் நீதிமன்றத்திற்கு அல்லது அரசிற்கு எத்தனை டெசிபல் வரை ஒலியெழுப் பலாம் என அறிக்கைத் தந்திருக்கின்றீர்கள். (பாங்கு சொல்லும் போது) எனக் கேட்டோம். அதற்கு நாங்கள் அப்படி எந்த அறிக்கையும் தரவில்லை எனப் பதில் தந்தார்கள்.

ஆனால் நமது நீதிமன்றங்களில் ஒலித்தக் குரல்கள் ஏதோ மஸ்ஜித்களில் இத்தனை டெசிபல் வரைதான் ஒலியெழுப்ப வேண்டும் என்பதற்கான உறுதியான ஆணை இருப்பது போல் ஒலித்தன. நாம் நீதிமன்றத்தை அணுகு வதற்குள் கடையை மூடிவிட்டு ஓடி விட்டார்கள்.

இதில் அன்றைய தமிழ்நாடு தலைமை நீதிபதி S.K. கவுல் அவர்கள் உச்ச நீதிமன்றத் திற்கு தகுதியான வராகி விட்டார். இப்போது உச்ச நீதிமன்றத்தில் கோலோச்சுகின்றார்கள்.

ஆனால், இங்கே ஸ்டெர்லைட் ஆலை கேன்சர் போன்ற கொடிய நோய்களைப் பரப்பி பல அப்பாவி கிராம மக்களையும் காவு கொண்டி ருக்கின்றது. ஆயிரம் கொலைகள் செய்தாலும் அதனை காப்பாற்றியே தீருவோம் என அடம்பிடிக்கின்றது அரசு.

நீதிமன்றம் அதனை மூட ஆணை பிறப் பிக்கவில்லை. மாறாக அதன் விரிவாக்கத்தை தடுத்திடவே ஆணைப் பிறப்பித்துள்ளது.

கோன் வடிவ குழாய்களால் சுற்றுப்புறச் சூழல் எல்லாம் கெட்டுப் போகின்றது எனக் கூக்குரலிட்ட மோடி வகையறாக்கள் இப்போது இருக்குமிடம் தெரியவில்லை. ஏனெனில் இந்த ஆலையே, மோடி வகையறாக்களுக்கு லஞ்சம் தந்து கொண்டிருக்கும் "வேதாந்தம்" குழுமத்தால் நடத்தப்படுவது.

**துப்பாக்கிச்சூடு - கஷ்மீரான தூத்துக்குடி**

மக்கள் மனங்களில் கனன்று கொண்டிருக்கும் பிரிதொரு ஆதங்கம். ஒரு ஆலையை மூடுவதற்கே இத்தனை பேரை பிணமாக ஆக்குகின்றார்கள் நமது காவல்துறையினர் என்றால் கஷ்மீர் மக்களின் அவலத்தை என்ன வென்பது.

அங்கே "அப்சா" வின் பாதுகாப்பில் பாதுகாப்புப் படையினர் - நமது இராணுவத்தினர் எப்படிப்படுகொலைகசை செய்வார்கள்...

அங்கே தீவிரவாதிகள், கலவரக்காரர் என்பவர்கள் எல்லாம் நமது இராணுவத்தினர் தனிப் பிரிவினர் தாம் என்பதை இப்போது மிகவும் எளிதாகப் புரிந்துகொள்ள முடிகின்றது. அங்கே இராணுவத்தினரின் இரகசியப் பிரிவினர் செய்வதை இங்கே மப்டியில் - சீருடை அணியாத காவலர்கள் செய்திருக்கின்றார்.

**யாரால்? யாரால்? எப்போது?**

ஆமாம், இன்றளவும் தூத்தக்குடி துப்பாக்கிச் சூட்டுக்கு உத்தரவு பிறப்பித்தது யார்? எப்போது பிறப்பிக்கப்பட்டது என்பவை இன்னும் தெளிவாக வில்லை. கொலைகார வேதாந்த குழுமம்.

தென் ஆப்பிரிக்காவில், இந்த வேதாந்தம் குழுமத்திற்கு ஓர், ஆலை இருக்கின்றது. அந்த ஆலை தொழிலாளர்கள், தங்களது குறைகளை கேட்கவும், தீர்க்கவும் போராடிய தொழிலாளர்களில் 34 பேரை தென் ஆப்பிரிக்கா அரசை ஏவிவிட்டது.

அதே மாதிரி ஒரு கொலையைத்தான் இப்போது தூத்துக்குடியில் நிறைவேற்றி இருக்கின்றது. இது ஒரு கொலைகார குழுமம், அத்தோடு மோடி வகையறாக்களின் ஆசி பெற்றது, இதனால் இதை எதுவும் செய்துவிட முடியாது.



**இஸ்லாத்தோடு தொடர்புடைய மே மாத நிகழ்வுகள்...**

மே - 4, திப்புசுல்தான் ஆங்கிலேயர்களே நடத்திய விடுதலைப்போரில் ஷஹீதான நாள்.

**மே 14/2018**

பாலஸ்தீனில் 64 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட நாள். இவர்கள் ஜெருசலத்தை அமெரிக்காவும் பிரகுவே, நாடும் இஸ்ரேலின் தலை நகர் என அறிவித்ததை எதிர்த்து அமைதியா ஊர்வலம் சென்றவர்கள். இதனை மே 14 படுகொலைகள் May 14th Massace என அழைக்கின்றார்கள்.

**மே-15, 1948**

இஸ்ரேல் என்ற யூதர்களுக்கான நாடு, தீவிர வாதத்தால், ஏற்படுத்தப்பட்ட நாள். இதனை "நக்பா நாள்" "பேரழிவு நாள்" எனப் பாலஸ்தீன மக்கள் - உலக முஸ்லிம்கள் அழைக்கும் நாள்.

இந்த வருடம் இந்த நாளில்தான் பாலஸ்தீனில் / இஸ்ரேல் பகுதியில் அமைதியாக ஊர்வலம் சென்றார்கள் என்பதற்காக யூத அரசால் கொலை செய்யப்பட்ட 56 முஸ்லிம் களில் 56 ஷஹீதுகளாக நல்லடக்கம் செய்தார்கள்.

**மே-15, 1171**

முதல் சிலுவைப் போரில் (1095-1247) சிலுவை அணிந்து வந்த படகளை தடுத்து நிறுத்தி ஆக்கிரமிக்கப்பட்ட பல பகுதிகளை மீட்ட வரலாறு நாயகன் (இமாதுத்தீன் கெங்கியின் மகன்) நூருதீன் ஜெங்கி மரணமடைந்த நாள்.

மே-19, 1925 மால்கம்-X பிறந்த நாள். இந்த நாளைத்தான் அமெரிக்கர்கள் மால்கம்-X நாளக அறிவித்துள்ளார்கள். ஆனால் நாம் மால்கம்-X ஷஹீதான பிப்ரவரி-21 தான்

**மே-29, 1453**

இந்த நாளில்தான் பெருமானார் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுள் ஒன்று செயலில் வந்த நாள், அது கான்ஸ்டாண்டிநோபுள் என்ற உலகின் நடுநாயகமான இடம் வெற்றிக் கொள்ளப்பட்ட நாள். அன்றைய கான்ஸ்டாண்டி நோபுள்தான் இன்றைய வரலாற்றில் இஸ்தான்புல்.





## தூத்துக்குடி

# படுகொலைகளின் பின்னணியில் உறைந்திருக்கும் உண்மை!

தூத்துக்குடி, கன்னியாகுமாரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் இன்டர்நெட் இணைப்பு எதிர்வரும் 27 ம் திகதி வரை தமிழக அரசால் தடை செய்யப் பட்டுள்ளது. முக்கிய செயற்பாட்டாளர்கள் தமிழகம் முழுவதும் கைது செய்யப்படு கிறார்கள்.

தூத்துக்குடி, கன்னியாகுமரி திருநெல் வேலி உட்பட்ட மாவட்டங்கள் காவல் துறையின் முற்றுகைக்கு உள்ளாகியிருக்கிறது. நகரங்கள், கிராமங்களில் அரச படைகளின் வன்முறை அப்பாவி மக்கள் மீது கட்ட விழ்த்துவிடப்பட்டுள்ளது. மூன்று மாவட்டங் களிலும் வெளியுலகுடனான தொடர்புகளை முற்றாகத் துண்டித்து சாட்சிகளின்றி நடத் தப்படும் அரச பயங்கரவாதம் உலகத்தை நச்சாக்கும் வேதாந்தா என்ற நிறுவனத்தின் இலாப வெறிக்காகவே நடத்தப்படுகிறது.

இந்து பாசிசக் கட்சியான பாரதீய ஜனதாவினதும் அதன் அடியாள் படைகளதும் ஆக்கிரமிப்புற்கு எதிராக மக்கள் தற்காப்பு யுத்தம் ஒன்றைத் திட்மிடுவதற்கான புறச் சூழல் உருவாகி யிருக்கிறது என்பதே தமிழக மற்றும் பாரதீய ஜனதா அரசுகள் மக்களுக்குக் கற்றுக் கொடுக்கின்றன.

இந்தியா முழுவதும் இயற்கை வளங்கள் சூறையாடப்பட்ட போதும் தமிழ் நாட்டில் குறிப்பாக தூத்துக்குடி சார்ந்த மக்களின் போராட்டம் இன்று முக்கியத்துவம் வாய்ந்தது.

2013 ஆம் ஆண்டு நியாம்கிரி மலைப் பகுதியிலிருந்து கனிமங்களை அகழ்ந்தெடுத்து ஒரிசா பழங்குடி மலை வாழ் மக்கள் வாழும் பகுதியில் சுத்திகரிப்பு ஆலை நடத்துவதற்காக அனில் அக்ரவாலின் வேதாந்தா குழுமம் முதலீடு செய்திருந்தது. மலை வாழ் பழங்குடி மக்களின் தொடர்ச்சியான போராட்டத்தால் 5000 கோடி இந்திய ரூபாய்களை முதலீடைக் கைவிட்டு அங்கிருந்து வேதாந்தா


நியாம்கிரி மக்களின் போராட்டம்

தின் தலைமை நிர்வாக அதிகாரியாகச் செயற்பட்ட வெங்கடகிரிஷ்ணன் அந்த நிறுவனத்தின் தலைமை நிதி நிர்வாகியாகப் பதவி வகித்த காலப்பகுதியிலேயே மரிக்கான தங்கச் சுரங்கத் தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

வெளியேறியது. ஒரிசாவில் நிறுவனத்திற்கு ஏற்பட்ட பின்னடைவை விட தூத்துக்குடி போராட்டங்கள் வேதாந்தா குழுமத்தையே மூடும் நிலையைத் தோற்றுவிக்கும் என்பதே இன்றைய சூழல்.

கடந்த சித்திரை மாதம் 18ம் தேதியன்று, முதலீடு மற்றும் தர நிர்ணைய வங்கியான கோல்ட்மன் சாஷ் (goldman shchs) வேதாந்தா நிறுவனத்தின் பங்குகளை தரக் குறைப்புச் செய்வதாக அறிவித்திருந்தது. அதற்கான காரணமாக தூத்துக்குடி ஆலை செயற்பட இயலாத சூழல் காணப்படுவதாகவும் மக்கள் போராட்டங்கள் நடைபெறுவதாகவும் சுட்டிக்காட்டியிருந்தது.

மக்களின் போராட்டங்களால் 11.5 பில்லியன் டாலர் முதலீட்டில் உருவாக்கப் படத் திட்டமிட்டிருந்த தூத்துக்குடி ஸ்டெர் லைட் ஆலையின் விரிவாக்கம் தடைப் பட்டி ருந்தமையே இதற்கான காரணமாக குறித்துக் காட்டியிருந்தது.

கோல்ட்மன் சாஷ் இன் அறிக்கைக்குப் பதிலளித்த வேதாந்தா, தூத்துக்குடி மக்கள் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன் வைப்பதாக குறிப்பிட்டிருந்தது.

கோட்ல்மன் சாஷ் இன் தரக்குறைப்பைத் தொடர்ந்து தமிழ் நாட்டு பிராமணரான சிறீனிவாசன் வெங்கட கிரிஷ்ணன் என்பவர் வேதாந்தாவின் தலைமை நிர்வாக அதிகாரி யாகநியமிக்கப்பட்டார். தென்னாபிரிக்காவில் தலைமையகத்தைக் கொண்டிருக்கும் ஆங்கிலோ கோல்ட் லிமிடட் என்ற நிறுவனத்


வெங்கட கிருஷ்ணன்

அமைதியாகப் போராட்டம் நடத்திய தொழிலாளர்கள் மீது தென்னாபிரிக்க அரசு தனது படைகளை ஏவி 34 நிராயுதபாணியான அப்பாவிகளைக் கொலை செய்தது. 2012 ஆம் ஆண்டு வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களைப் ஆங்கிலோ கோல்ட் நிறுவனம் பதவி நீக்கம் செய்ததன் பின்னரே தொழிலாளர்கள் போராட ஆரம்பித்தனர்.

படுகொலைகள் நிகழ்த்தப்பட்ட பின்னர் ஆங்கிலோ கோல்ட் நிறுவனத்தின் மீது எந்தக் குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட வில்லை. இக் கொலைகள் நடத்தப்பட்டு ஓராண்டிற்கு உள்ளாகவே அந்த நிறுவனத்தின் தலைமை அதிகாரியாக வெங்கடகிருஷ்ணன் நியமிக்கப்படுகிறார்.

கோல்ட்மன் சாஷ் இன் தரக்குறைப்பின் பின்னர் வேதாந்தாவின் தலைமை நிர்வாக அதிகாரியாக வெங்கடகிருஷ்ணன் நியமிக்கப்

பட்டதும் அதனைத் தொடர்ந்து தூத்துக்குடிப் படுகொலைகள் நிகழ்த்தப்பட்டதும் தற் செயலான சம்பவங்கள் அல்ல. படுகொலை களை இந்திய மற்றும் தமிழ் நாடு அரசுகளின் ஊடாக நடத்துவதற்காகவே வெங்கட கிருஷ்ணன் நியமிக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகங்கள் நியாயமானவையே.

கோல்ட்மன் சாஷ் இன் தர மதிப்பீட்டின் அடிப்படையில் வேதாந்தா ஏற்கனவே பங்கு சந்தையில் நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறது. அதன் பங்குகளின் விலை 3.45 வீதம் சரிவைச் சந்தித்தது. தூத்துக்குடியில் ஸ்ரெலைட் ஆலை நிரந்தரமாக மூடப் படுமானால் வேதாந்தா நிறுவனம் பெரும் சரிவைச் சந்திக்கும். உலகளாவிய அதன் நிறுவனங்களின் பங்குகளில் வீழ்ச்சி ஏற்படும். ஆக, எவ்வளவு பணத்தை வேண்டுமானாலும் விதைத்து தனது இருப்பைக் காப்பாற்ற வேதாந்தா நிறுவனம் முயற்சிக்கும்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி யுடனும் பாரதீய ஜனதாக் கட்சியுடனும் நெருக்கமான உறவைப் பேணும் அனில் அக்ரவாலை தனது மாநிலமான குஜராத்தில் அலுமினிய ஆலையை அமைத்துக்கொள் ளுங்கள் என அழைப்புவிடுத்தவரே நரேந்திர


அனில் அக்ரவால்

மோடி தான். பாரதீய ஜனதாக் கட்சிக்கு அதிக நிதிவழங்கும் பல் தேசிய நிறுவனங் களுள் வேதாந்தா முதலிடத்தை வகிக்கிறது.

இந்த நிலையில் அனில் அக்ரவாலின் நிறுவனத்தைப் பாதுகாக்கும் முயற்சியில் பாரதீய ஜனதாவும் அதன் அடியாள் அரசான தமிழக அரசும் தம்மாலான அனைத்தையும் கையாளத் தயங்காது.மேலும் படுகொலைகள் நடத்தவும் தமிழகம் முழுவதையும் போர் களமாக்கவும் தயக்கம்காட்டாது.

தமிழக மக்கள் அரசபடைகளின் வன் முறையிலிருந்து தம்மைத் தற்காத்துக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஆயுதம் தாங்கிய அரசபடைகளின் வன் முறைக்கு எதிரான தற்காப்பு மக்கள் யுத்தத்திற்கு எதிர்காலத்தில் தயாராக வேண்டிய நிலையை அரச படைகள் மக்களுக்கு உணர்த்தி வருகின்றன.


மரிக்கான படுகொலைகள்



வேதாந்தாவின் வளச் சுரண்டலால் பாதிக்கப்படும் கர்நாடக மக்களையும், ஏனைய மாநிலங்களைச் சார்ந்தவர்களையும் இணைத் துக்கொண்டு பலம் மிக்க போராட்டம் ஒன்று நடத் தப்படுமானால் மட்டுமே அழிவுகளிலிருந்து தற்காத்துக்கொள்ளலாம்.

- நன்றி inioru.com

- அபூ அஃப்ரஹ்



இதை தாண்டி இந்த தடை நபி (ஸல்) அவர்கள் காலத்தில் போடப்பட்டது அல்ல. ஷாம் தேசத்தை (சிரியாவை) ஆண்ட மன்னர் சுல்தான் நூருத்தீன் ஜங்கி (ரஹ்) அவர்கள் காலத்தில் போடப்பட்ட தடை.

போப் சிக்ஸ்டஸ் (Sixtus IV) என்பவன் ஒரு சதித்திட்டம் தீட்டினான். நபி (ஸல்) அவர்களின் உடலை தோண்டி எடுத்து ரோமுக்கு கொண்டு வந்து செயின்ட் பீட்டர்ஸ் ஸ்கொயரில் வைத்து அசிங்கப்படுத்த வேண்டும் என்பது அவனது திட்டம்.

இதற்காக இரண்டு மத குருமார்களை அரபிகள் போல் வேடமிட்டு இதற்காக அவன்

# முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி (ரஹ்)

**என்னுரை**

சமீபத்தில் முகநூலில் ஒரு கேள்விக்கு பதிலளிக்க கோரப்பட்டிருந்தேன். மக்கா மதீனாவில் முஸ்லிமல்லாதவர்கள் ஏன் அனுமதிக்கப்படுவதில்லை என்பதே அந்த கேள்வி? இதற்கான என்னுடைய பதில் பின்வருமாறு இருந்தது,

“ஒவ்வொரு நாட்டிற்கும் பாதுகாக்கப்பட்ட பகுதி என்று சில இருக்கும். அதில் குறிப்பிட்ட சிலரை மட்டுமே அனுமதிப்பார்கள்.

நம் சொந்த நாட்டில் கூட நாம் எல்லா இடத்திலும் சென்று விட முடியாது. அதற்கான அனுமதி பெற வேண்டி இருக்கும். இதில் முக்கியமாக பார்க்கப்பட வேண்டியது பாதுகாப்பு அம்சம் மட்டுமே.

அது போல மக்கா, மதீனா பகுதிகள் முஸ்லிம்கள் ஒன்றாக கூடும் பகுதி. பல இலட்சம் முஸ்லிம்கள் ஒன்றாக கூடும் பகுதியில் பாதுகாப்பு என்பது மிக முக்கியமானது. எனவே, முஸ்லிம்கள் அல்லாதவர்கள் அனுமதிக் கப்படுவதில்லை.

மதீனாவிற்கு அனுப்பினான். அவர்கள் மஸ்ஜிதுல் நபவிக்கு அருகில் தங்கி ஒரு சுரங்கம் தோண்டி நபி(ஸல்) அவர்களின் உடலை எடுத்து கடத்தி செல்வது அவர்களின் திட்டம். திட்டம் போல அவர்கள் தங்கவும் செய்தார்கள்.

இது கனவு வடிவில் மன்னர் நூருத்தீன் ஸங்கிக்கு (ரஹ்) தெரிய வந்தது. அவர்கள் மதீனா வந்து மதீனாவின் கவர்னரிடம் மதீனா மக்கள் அனைவரையும் தன் முன் வர செய்து பார்த்தார்கள்.

ஆனால் கனவில் கண்டவர்கள் அதில் இல்லை. வேறு யாராவது நகரில் உள்ளனரா? என்று மன்னர் கேட்ட போது மேற்கத்தைய நாட்டை சேர்ந்த இரண்டு முதியவர்கள் உள்ளனர். பகலில் தண்ணீர் விநியோகிப்பதும் இரவில் பள்ளிக்கருகில் தொழுவதும் அவர்களின் வேலை என்று கூறப்பட்டது.

அவர்களை உடனடியாக தன் முன் அழைத்து வர மன்னர் உத்தரவிட்டார். அவர் களை கண்டவுடன் அவர்கள் தான் கனவில்

கண்டவர்கள் என மன்னர் கண்டு கொண்டார். அவர்களை விசாரித்த போது அவர்கள் எதையும் ஒப்புக்கொள்ளவில்லை. பின்னர் அவர்கள் தங்கியிருந்த இடத்தை ஆய்வு செய்தபோது அவர்களின் விரிப்புக்கு கீழே ஒரு சுரங்கம் நபி (ஸல்) அவர்களின் அடக்கஸ் தலம் வரை தோண்டப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப் பட்டது. இதன் பின்னர் அவர்கள் தாங்கள் போப்பால் அனுப்பப்பட்டவர்கள் என்பதை ஒப்புக் கொண்டனர். அவர்கள் அவ்விடத்தி லேயே கொல்லப்பட்டனர்.

இதன் பின்னர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள் வேற்று மதத்தவர்கள் மக்கா மதீனா விற்குள் வரக்கூடாது என்று உத்தரவிட்டார். அது இன்று வரை தொடர்கிறது.

இதைத்தவிர்த்து வேறு எந்த மஸ்ஜிதுக் குள்ளும் சென்று வர எந்த முஸ்லிமல்லாதவ ருக்கும் தடையில்லை, பாதுகாப்பு காரணங் களை தவிர்த்து.

இதுபோன்ற கேள்வி கேட்பவர்கள் பல்வேறு கோயில்களில் முஸ்லிம்கள் அனுமதிக் கப்படுவதில்லையே ஏன் என்ற கேள்விக்கும் பதில் சொல்ல முன்வர வேண்டும்.

மக்கா மதீனாவாவது வேறு நாடு, இந்தியா விற்குள் உள்ள கோயில்களிலேயே இந்திய முஸ்லிம்கள் அனுமதிக்கப்படுவதில்லையே. குறிப்பாக பூரி பத்மநாபாஸ்வாமிகள் கோயிலில், திருப்பதி கோயிலில் அனுமதிக்கப் படுவதில்லை. இந்து பெண்கள் கூட கேரள சபரிமலையில் அனுமதிக்கப்படுவதில்லை.

இவ்வளவு ஏன் பல கோயில்களில் இந்து மதத்தை சேர்ந்தவன் என்று கூறப்படும் தலித்கள் அனுமதிக்கப்படுவதில்லை. அது ஏன் என்று அவர்களால் பதில் சொல்ல முடியுமா?

மக்காவிற்கும் மதீனாவிற்கும் செல்ல ஒரே ஒரு நிபந்தனை தான். கலிமாவை முன் மொழிந்தால் போதும். அவன் எந்த நிறத் தவனோ அவன் எந்த சாதியோ எல்லா தீட்டும் நீங்கி அவன் தாராளமாக சென்று வரலாம்.

இதைத்தாண்டி மக்காவையும் மதீனாவையும் குறிப்பிட்ட பாதுகாப்புடன் அனுமதி பெற்று முஸ்லிம் அல்லாதவர்கள் வரலாற்றாளர்கள் பார்வையிட அனுமதிக்கப்பெறுவதாக நாம் அறிகிறோம்."

இதுவே என் பதிலாக இருந்தது.

இந்த பதிவுக்கு பின்னர் அந்த நண்பர் என்னை மீண்டும் மெஸஞ்சரில் அணுகி நூருத் தீன் ஸங்கி என்பவர் யார்? இந்த வரலாற்றுக்கு ஆதாரம் என்ன? என மீண்டும் கேட்டிருந்தார்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. முகநூலில் பல்வேறு விஷயங்கள் குறித்து ஆழமாக விவாதிப்பவர் அவர். அவர் நூருத்தீன் ஸங்கியை பற்றிய விவரங்களை கோரியது எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ஏனெனில் நூருத்தீன் ஸங்கி அவர்கள் சிலுவைப்படை வீரர்களின் முற்றுகைகளை முறியடித்தவர். சிலுவைப்படை வீரர்களை சின்னாபின்னப்படுத்தியவர்.

இன்று சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) அவர்களை தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள் என்றே நினைக்கிறேன். ஆனால் சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் குருவாக, வழிகாட்டியாக இருந்தவர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

சுல்தான் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள் பிறந்தது கி.பி. 1117 இல். சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் பிறந்தது கி.பி 1137 இல். இருவருக்கும் இடையே 20 வருடங்கள் வித்தியாசம்.

சுல்தான் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள் இறந்தது கி.பி. 1173இல். சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் இறந்தது கி.பி 1193இல். இருவரும் 60க்கும் குறைவான வருடங்களே வாழ்ந்தனர்.

நேர்வழி நின்று ஆட்சி செய்த சொர்க் கத்திற்கு நன்மாராயம் கூறப்பட்ட நான்கு கலீஃபாக்கள், அவர்களுக்கு பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள், இவர்களுக்கு பின்னர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களை தான் இந்த பெருமக்களுக்கு இணையாக கூறமுடியும். அத்தகைய பெருமை கொண்ட ஒருவர் நம்மிட மிருந்து மறக்கடிக்கப்பட்டிருப்பதுவேதனையே.

எனவே, என்னுடைய கள ஆய்வை நான் விரிவுப்படுத்த விரும்பினேன்.

இன்னும் எத்தனை மக்களுக்கு நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களை பற்றி தெரியும் என என் நண்பர்களை அணுகி விசாரித்தேன்.

பலருக்கு நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களைப் பற்றி தெரியவில்லை.

வரலாறு தெரியாதவர்கள் வரலாறு படைக்க முடியாது என்பது எனக்கு கற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பாடம்.

இதன் விளைவே நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றுத் தொடர்.

**புகுமுன்**

நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களின் தந்தை இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களும் இவருக்கு இணையானவரே.

இமாதுத்தீன் ஸங்கி கொலைக்குப் பின்னர் நூருத்தீன் அவர்களும் அவருடைய சகோதரர் சைஃபுத்தீன் காஸி 1 அவர்களும் ஆட்சி அதிகாரத்தை பகிர்ந்து கொண்டார்கள். நாட்டை இரண்டாக பிரித்து ஆண்டு வந்தார்கள்.

நூருத்தீன் அவர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாம் அலெப்போவையும் சைஃபுத்தீன் அவர்கள் மொசூலையும் ஆண்டு வந்தார்கள்.

நூருத்தீன் அவர்களும் தன் தந்தையை போன்றே சிறந்த போர் வீரர்.

நூருத்தீன் அவர்கள் வசம் இருந்த எடெஸ்ஸா என்ற பகுதியை கைப்பற்ற ஜோஸ்லின் 2 என்பவர் தொடுத்த போரில் வெற்றி கொண்டவர்.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் ஆட்சியாளர்களுடன் குறிப்பாக வடக்கு ஈராக் போன்ற நாடுகளுடன் இணைந்து ஒரு திறமையான இஸ்லாமிய தடுப்பு படையை உருவாக்கியவர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள்.

1147ல் அவர் டமாஸ்கசிஸ் ஆளுனர் மொய்னுத்தீன் என்பவருடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். அந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக மொய்னுத்தீன் அவர்களின் சகோதரி இஸ்மத்துத்தீன் காதூன் என்பவரை திருமணம் செய்து கொண்டார்.

பின்னர் மொய்னுத்தீனும் நூருத்தீன் அவர்களும் இணைந்து பஸ்ரா, சல்காத் போன்ற பகுதிகளை முற்றுகையிட்டனர். அது அப்போது குழப்பவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது.

1148-இல் இரண்டாவது சிலுவைப்போர் வீரர்கள் சிரியாவை முற்றுகையிட்டனர். அதற்கு பிரான்சின் லூயிஸ் 7ம் ஜெர்மனியின் கான்ராட் 3ம் தலைமை தாங்கினர். மொய்னுதீன் அவர்கள் நூருத்தீன் அவர்களின் உதவியை நாடினார். 4 நாட்கள் நீடித்த இந்த முற்றுகை நூருத்தீன் அவர்கள் வருவதற்குள் முடிவடைந்தது.

அதன் பின்னர் நூருத்தீன் அவர்கள் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடாமல் மேற்கத்திய உலகை எதிர் சென்று தாக்கத் தொடங்கினார்கள். அதன் ஒரு பகுதியாக ஹாரிம் கோட்டையை தாக்கி வெற்றி கொண்டார். அதன் பின்னர் இனாப் கோட்டையை முற்றுகையிட்டார்.

அந்தியோக்கியாவின் இளவரசர் ரெய்மாண்ட் என்பவர் அந்த முற்றுகைக்கு எதிராக நூருத்தீன் அவர்களை எதிர்த்து போர் செய்ய வந்தார். அப்போரில் தோற்று ரெய்மாண்ட் கொல்லப்பட்டார்.

இனாப் கோட்டை முற்றுகை போரில் இஸ்லாமிய இராணுவம் சிலுவைப்படை வீரர்களை சின்னாபின்னப்படுத்தியது. போரில் நூருத்தீன் அவர்கள் வெற்றி கொண்டார்கள்.

1150இல் நூருத்தீன் அவர்கள் ரூமின் சுல்தான் மசூத் அவர்களுடன் இணைந்து ஜோஸ்லின் 2 என்பாரை இறுதியாக வெற்றி கொண்டார். ஜோஸ்லின் சிறை பிடிக்கப்பட்டு அலெப்போவில் உள்ள சிறைச்சாலையில் 1159-ல் மரணித்தார்.

திரிபோலியில் ரெய்மாண்ட் 2ன் கொலைக்கு பின்னர் 1152ல் சுல்தான் நூருத்தீன் அவர்கள் தர்தௌஸ் (இப்போதைய சிரியாவின் இரண்டாவது பெரிய கடற்படை தளம்) எனும் பகுதியை குறுகிய காலத்தில் வெற்றி கொண்டார்கள்.

சுல்தான் நூருத்தீன் அவர்களின் கனவு ஒன்று தான்.

ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப்போர் வீரர்களுக்கு எதிராக ஓர் ஒருங்கிணைந்த இஸ்லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே.

1149-இல் ஸைஃபுத்தீன் காஸி இறந்தார். அதன் பின்னர் அவருடைய இளைய சகோதரர்



குத்புதீன் ஆட்சிக்கு வந்தார். அவர் நூருத்தீன் அவர்களின் தலைமையை ஏற்றுக்கொண்டார். இதன் மூலம் மொசூலும் அலெப்போவும் ஒருங்கிணைந்தன.

ஆனால் டமாஸ்கஸ் மட்டும் இந்த இணைப்பில் பங்கேற்காமல் வெளியே நின்றது.

*1153*-ல் அஸ்கலான் சிலுவைப்படை வீரர்களால் கைப்பற்றப்பட்டது. அப்போது முஜிருத்தீன் என்பவர் அதன் ஆட்சியாளர். சிலுவைப்படை வீரர்களின் பாதுகாப்பின் கீழ் கப்பம் கட்ட முஜிருத்தீன் ஒப்புக்கொண்டு கப்பம் கட்டி வந்தார். டமாஸ்கஸ் முஜ்ருத்தீன் அவர்களின் கீழ் பலஹீனப்படுவதை கண்ட நூருத்தீன் அவர்கள் அதனை மக்கள் ஒத்துழைப் புடன் *1154*-ல் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார்.

இதன் மூலம் வடக்கில் எடஸ்ஸாவையும் தெற்கில் ஹவ்ரானையும் கொண்டு சிரியா ஒருங்கிணைந்த ஒரே பகுதியாக சுல்தான் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களின் ஆளுமையின் கீழ் வந்தது.

*1157*-இல் அவர் நைட்ஸ் ஹாஸ்பிடலர் Knights Hospitaller எனப்படும் சிலுவைப்போர் வீரர்களை முன் சென்று தாக்கினார். ஆனால் அந்த வருடம் அவர் நோய்வாய்பட்டதனால் சிலுவைப்படை வீரர்கள் அந்த வருடம் அவரிடமிருந்து தப்பி பெருமூச்சு விட்டனர்.

*1174* மே மாதம் *15*ம் நாள் அவர் நோய் வாய்பட்டு இறந்தார்.

**பகுதி -1**

அவருடைய முழுப்பெயர் நூருத்தீன் அபூ அல் காசீம் மஹ்மூத் இப்னு இமாதத்தீன் அதா பேக் (அபூ ஸைத் ஸங்கி) இப்னு காசிம் அத்தெளலா அக்சுன்கூர் அத் துர்கி.

அவரை ஸங்கி என்றும் இப்னு அல் காசீம் என்றும் அழைப்பார்கள்.

அறிஞர் அபூ அல் காசீம் (இப்னு அஸாகிர்) அவர்கள் தன்னுடைய புத்தகத்தில் நூருத்தீன் (ரஹ்) பிறந்தது கி.பி. *1119* இல் என்று குறிப் பிட்டுள்ளார்கள்.

அவருடைய பாட்டனார் அக்சுன்குர் (AqSunqur) அவர்கள் அலேப்போவையும் (Aleppo) லெவான்தையும் (Levant) ஆண்டு வந்தார்.

நூருத்தீன் அவர்களுடைய தந்தை இமாதுத் தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள் ஈராக்கில் வளர்ந் தவர். அதன் பின்னர் அவர் மொசூலையும் லெவான்தையும் ஆண்டு வந்தார்.

இமாதுத்தீன்ஸங்கி (ரஹ்) அவர்கள் அதன் பின்னர் எடஸ்ஸாவையும் அல் முஆராவையும் கஃப்ர் தப் எனும் இடத்தையும் இன்னும் பல நகரங்களையும் இறை மறுப்பாளர்களிடமிருந்து வெற்றி கொண்டார்கள்.

இமாதுத்தீன்ஸங்கி அவர்கள் இறந்ததன் பின்னர் அந்த பதவிக்கு கி.பி*1146*ல் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள் வந்தார்கள். நூருத்தீன் (ரஹ்) அவர்கள் அலெப்போவையும் பல நகரங்களையும் வெற்றி கொண்டார். அவர்

வெற்றி கொண்ட இடங்களிலெல்லாம் நபி (ஸல்) அவர்களின் நடைமுறைகளை அமல்படுத்தினார். அவர் பல கல்வி நிலையங்களையும், அறக்கட்டளைகளையும் நிறுவினார். நீதியை நிலைநாட்டினார்.

அவர் திமிஷ்கஸ் எனப்படும் டமாஸ்கஸை 2 முறை முற்றுகையிட்டு 3வது முறை வெற்றி கொண்டார். அங்கும் சட்டதிட்டங்களை உருவாக்கி கல்வி நிலையங்கள், மஸ்ஜித்கள், நடைபாதை சாலைகள், பெரிய சந்தைகள் போன்றவற்றை உருவாக்கினார். அநியாயமாக விதிக்கப்பட்டிருந்த பல வரிகளை நீக்கினார். மது அருந்துவதை தண்டனைக்குரிய குற்றமாக்கி தண்டனைகள் வழங்கினார். பல மதில்சுவர்களை உருவாக்கி அரணமைத்து எல்லைப்புற நகரங்களை பாதுகாத்தார்.

**இறையச்சம் கொண்ட போர்வீரர்**

நூருத்தீன் (ரஹ்) அவர்கள் மிகச்சிறந்த போர் வீரர். சரியாக குறிபார்த்து அம்பு எய்துவதில் அவருக்கு நிகர் அவரே.

போர் களத்தில் அனைவருக்கும் முன்னே நின்று போர் வீரர்களுக்கு ஷஹீத் எனும் உயிர் தியாகத்தின் அந்தஸ்து குறித்து எடுத்து கூறி போர் வீரர்களை ஆர்வப்படுத்துவார்கள் நூருத்தீன் அவர்கள். அப்போதெல்லாம் ஷஹீதாக வேண்டும் என்று கண்ணீருடன் இறைவனிடத்தில் மன்றாடுவார்கள். இதன் பின்னர் தங்கள் இன்னுயிரை இறைவனுக்கு அளிக்க போர்வீரர்கள் அனைவரும் தயாராகி விடுவர். இது அவருடைய பல வெற்றிகளுக்கு முக்கியமான காரணமாக அமைந்தது.

இறையச்சத்துடன் இந்த உயிர் என்னதல்ல என் இறைவனுடையது என்ற எண்ணத்துடன் இறைவனுக்காக போர் செய்ய முன்வரும் போது உலகமே எதிர்த்து நின்றாலும் இவர்கள் முன்னால் தோற்று போகிறது.

அவருடைய ஆட்சியில் பலஹீனமானவர்களுக்கும் சித்திரமொழி எழுத்தாளர்களுக்கும் (calligraphers) குர்ஆன் ஆசிரியர்களுக்கும் மக்கா, மதீனா வாசிகளுக்கும் மானியம் வழங்க வழிவகை செய்யப்பட்டிருந்தது.

மக்கா யாத்ரீகர்களுக்கு வரியை ஏற்றா வண்ணம் மிகப்பெரிய நிலத்தை அரபு இளவரசிக்கு வழங்கியிருந்தார் நூருத்தீன் ஸங்கி அவர்கள். மதீனாவை சுற்றி ஒரு சுவர் எழுப்பவும் உஹுத் களத்தில் ஒரு கிணறு வெட்டவும் உத்தரவிட்டிருந்தார்.

அவர் மேம்பாலங்களையும் பல கணவாய்களையும் கட்டி இருந்தார். டமாஸ்கசில் அவர் என்னென்ன வசதிகளை செய்திருந்தாரோ அவை அனைத்தையும் அவர் ஆண்ட வெற்றி கொண்ட மற்ற பகுதிகளிலும் செய்திருந்தார். இதன் காரணமாக அனைத்து பகுதி மக்களும் அவரை நேசித்தனர்.

அவர் ரோமானியர்களையும் பிரான்க்ஸ் களையும் (பழைய ஜெர்மானியர்கள் ஒட்டு மொத்தமாக) அலெப்பாவில் உள்ள ஹாரீம் என்ற கோட்டையில் வைத்து வெற்றி கொண்டார்.

அதன் பின்னர் அவர் ஆட்டியோச் என்னுமிடத்திலுள்ள பல கிராமங்களை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார்.

அவர் இறைமறுப்பாளர்களால் கைப்பற்றப்படக்கூடும் என்ற நிலையில் இருந்த எகிப்தின் நகரங்களையும் வெற்றி கொண்டு அந்த இடங்களில் எல்லாம் இஸ்லாத்தையும் நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகளையும் நடைமுறைப்படுத்தினார். இஸ்லாத்திற்கு முரண்பட்ட எல்லாவிதமான ஷைத்தானிய செயல்களையும் துளி அளவும் தயக்கமின்றி விரட்டியடித்தார்.

நூருத்தீன் அவர்கள் ஒரு நல்ல சித்திரமொழி எழுத்தாளர். சித்திர மொழி என்பது சாதாரண எழுத்துகளை ஓவிய வடிவில் எழுதுவது. மேலும் அவர் சிறந்த மார்க்க அறிஞர். குர் ஆன் சுன்னாவை தவறாமல் பின்பற்றக்கூடியவர்.

நூருத்தீன் (ரஹ்) அவர்கள் தொழுகையை ஜமாஅத்துடன் தொழுவதை வழக்கமாகக் கொண்டவர்கள். குர்ஆனை மிக அழகாக ஓதக்கூடிய திறன் படைத்தவர். லஞ்ச லாவண்யங்களுக்கு அப்பாற்பட்டவர். நன்னடத்தை கொண்டவர்.

எந்த நிலையிலும் ஆபாசமாக நடந்து கொண்டவரில்லை நூருத்தீன் அவர்கள். அல்லாஹ்வின் பெயர் சொல்லிக்கூறப்பட்டால் அல்லது நபி வழியில் கூறப்பட்டால் அதை அவர் மறுத்ததில்லை.

## சிறந்த மன்னர்

"நான் இஸ்லாத்திற்கு முந்தைய வரலாறு, இஸ்லாமிய வரலாறு மற்றும் நவீன வரலாற்றை படித்திருக்கிறேன். ஆனால் நேர்வழி பெற்ற கலீஃபாக்கள் அதன் பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸ் இவர்களுக்கு பின்னர் நூருத்தீன் அவர்களுக்கு இணையானதொரு சிறந்த ஒழுக்க முள்ள ஆட்சியாளரை பார்க்க இயலவில்லை.

மற்றவர்கள் இஸ்லாமிய விழுமியங்களை பின்பற்றுவதில் சிறந்திருந்தாலும் யாரையும் நூருத்தீன் அவர்களுக்கு இணையாக ஒப்பிட இயலாது.

அவர் இறைவணக்கத்திற்காக தன்னை அர்ப்பணித்து கொண்டவர், நீதியை நிலை நாட்டியவர், நீதியை ஜிஹாதின் வழியாக மற்ற பகுதிகளுக்கு பரப்பியவர், ஜிஹாத் என்னும் இறைப்போருக்கு மக்களை தயார்படுத்தியவர், தீமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தவர், தர்மத்தை ஊக்கப்படுத்தியவர், பலஹீனமானவர்களுக்கும் செவிசாய்க்கக்கூடியவர் என்று இவரைப்பற்றி சொல்லிக்கொண்டே போகலாம்", என்று அபுல் அசன் இப்னு அசீர் என்ற வரலாற்றாசி ரியர் நூருத்தீன் அவர்களை பற்றி கூறுகிறார்.

அவருடைய பரந்து விரிந்த சாம்ராஜ்யம் மற்றும் சொத்துக்கள் இவை எதுவும் அவரு டைய இஸ்லாமிய உணர்வை மழுங்கடிக்க வில்லை. அவருடைய இறையச்சத்தை குறைக் கவும் இல்லை.

மன்னர்கள் மதுமயக்கத்தில் அடிமைப் பட்டிருந்த காலத்தில் அவர் குடிக்கவோ பொது சொத்தில் இருந்து அநியாயமாக உண்ணவோ செய்ததில்லை.

நூருத்தீன் அவர்கள்அவருக்காக ஃபகீஹ் களால் (ஃபிக்ஹ் கலை நிபுணர்கள்) அளவிடப் பட்டிருந்த ஒதுக்கப்பட்டிருந்த பொருளையே தன் தேவைக்காக எடுத்திருந்தார். ஃபிக்ஹ் கலை நிபுணர்களின் ஆலோசனையின் படியே நடந்து வந்தார்.

அவர் தன் வாழ்நாளில் பட்டுத்துணியையோ தங்கத்தையோ அவர் எப்போதும் அணிந்த தில்லை. சுல்தான் என்ற முறையில் இந்த ஆடை அணிகலன்களை அணிந்து கொள்ள மற்றவர்கள் பரிந்துரைத்த போதெல்லாம் இவை



அனைத்தும் மார்க்கத்தில் விலக்கப்பட்டவை என அவர் தொடர்ந்து கூறி மறுத்து அவர்களை கடிந்து வந்தார்.

அவர் தன்னுடைய ஆட்சிக்கு உட்பட்ட அனைத்து இடங்களிலும் மது விலக்கை அமல்படுத்தினார். சந்தையில் மது விற்பது தண்டனைக்குரிய குற்றம். மது அருந்தியவர் களுக்கு சாட்டையடி இஸ்லாமிய சட்டப்படி வழங்கப்பட்டது.

இஸ்லாமிய குற்றவியல் சட்டங்களை நிறைவேற்றுவதிலும் அவருக்கு நிகர் அவரே. அவருடைய ஆட்சியில் அனைத்து மக்களும் சமமாக நடத்தப்பட்டனர்.

## தஹஜ்ஜத் தொழுகை

நூருத்தீன் அவர்கள் எப்போதெல்லாம் வீட்டிற்கு வருவாரோ அப்போது அவர் தனக்கு பிடித்தமான இடத்தில் அமர்ந்து கொள்வார். அவருடைய மனைவி அவருக்கு உணவுகள் பரிமாறுவார். பின்னர் அவர் தன் மறைவிடத் திற்கு சென்று விடுவார். அதன் பின்னர் நூருத்தீன் அவர்கள் அதிகாரிகளால் தோல்களில் எழுதி அனுப்பப்பட்டவற்றை படித்து அவற்றிற்கு பதில் எழுதுவார். கடிதங்களையும் படித்து பதில் எழுதுவார்.

பொதுவாக அவர் தொழுகையில் நீண்ட நேரம் நின்று தொழக்கூடியவர். இரவு வந்ததும் இஷா தொழுகையை ஜமாஅத்துடன் தொழுது விட்டு சிறிது நேரம் உறங்கி விடுவார். இரவின் மத்தியில் எழுந்து ஒளு செய்து தஹஜ்ஜத் எனும் இரவுத் தொழுகையை தொழ ஆரம்பித்து விடுவார். இந்த தொழுகை ஃபஜ்ர் எனும் காலைத் தொழுகை வரை நீடிக்கும்.

**மனைவியின் கோரிக்கை**

அவர் அவருடைய மனைவிக்கு குடும்ப தேவைகளை நிறைவேற்ற ஒரு தொகையை கொடுத்து வந்தார். அது அவருடைய மனைவிக்கு போதுமானதாக இல்லை. நேரிடையாக நூருத்தீன் அவர்களிடம் கூடுதலாக பணம் கேட்க அவருடைய மனைவிக்கு தைரியம் இல்லை.

இதனால் நூருத்தீனுக்கு நெருக்கமான ஒருவரை அனுப்பி வீட்டு செலவிற்கு சற்று கூடுதலான தொகையை தரும்படி கேட்கச் சொன்னார். அவ்வாறே அந்த நபரும் நூருத்தீன் அவர்களிடம் வீட்டு நிலவரத்தை எடுத்து கூறி கூடுதலாக பணம் ஒதுக்கும் படி கோரினார்.

நூருத்தீன் அவர்களுக்கு கடும் கோபம் வந்துவிட்டது, "நான் எங்கிருந்து கொண்டு வந்து தருவது?

நான் கொடுத்துள்ள பணத்தை கொண்டு அவர் திருப்திகொள்ளவில்லையா?

அல்லாஹ்வின் மீது சத்தியமாக என் மனைவியுடைய தேவைகளை நிறைவேற்று வதன் காரணமாக நான் நரகத்திற்கு செல்ல விரும்பவில்லை.

இப்போது நான் என்னிடம் வைத்துள்ள முஸ்லிம்களின் பொதுச்சொத்தெல்லாம் என்னு டையது என்று அவள் நினைத்து கொண்டாளா?

எவ்வளவு மோசமான மனைவி இவள்? இந்த பணம் எல்லாம் முஸ்லிம்களின் நன்மைக் காக செலவிடப்பட வேண்டியது, இது போர்க் களத்தில் இஸ்லாத்தின் எதிரிகளை எதிர் கொள்ள வேண்டி ஒதுக்கப்பட்டது. நான் இவற்றை செயல்படுத்த வேண்டிய ஒரு நபர் அவ்வளவு தான். நான் இந்த பணத்திற்கு பாதுகாவலன் அவ்வளவு தான்.

நான் ஒரு போதும் இதற்கு நம்பிக்கை துரோகம் இழைக்க மாட்டேன். எனக்கு மூன்று கடைகள் ஹிம்சில் உள்ளன. வேண்டுமானால் நான் அவற்றை என் மனைவிக்கு கொடுத்து விடுகிறேன்" என்று கூறி விட்டார்.

எப்படியாவது எடுத்துரைத்து கூடுதலாக பணம் பெற்று தந்து விடலாம் என்று நினைத்து சிபாரிசுக்கு வந்த நபர் முகத்தை தொங்கப் போட்டுக்கொண்டு போய் விட்டார். அவருடைய மனைவி அதன் பின்னர் யாரையும் இவ்விஷயத்தில் சிபாரிசு கோரவில்லை. அதே



எளிமையோடே அவர்களின் குடும்பம் நடந்து வந்தது. இது தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

### வீணாக போலோ விளையாட்டு

நூருத்தீன்ஸங்கி அவர்கள் போர்குதிரைகளை கையாளுவதில் சிறந்தவர். அதனை எப்போதும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும், பயிற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நினைப்பவர்.

நூருத்தீன் அவர்கள் ஓர் இறை நம்பிக்கை யாளரிடத்தில் தொடர்ந்து ஆலோசனை கேட்கும் வழமையுடையவராக இருந்தார். அவரோ அந்த தீவில் இருந்த சிறந்த பக்திமான்.

நூருத்தீன் அவர்கள் இப்போது போலோ என அழைக்கப்படும் குதிரையிலிருந்து பந்தை இலக்கை நோக்கி விரட்டி செல்லும் விளை யாட்டை விளையாடுவதை வழமையாக கொண்டிருந்தார்கள்.

இது அந்த ஊரில் இருந்த சிலருக்கு சரியாகப்படவில்லை. அலுவல்கள் பல இருக்க, நூருத்தீன் ஸங்கி அவர்கள் இப்படி விளை யாடிக்கொண்டிருக்கலாமா என்பது அவர் களுடைய எண்ணம்.

இதன் காரணமாக அவர்கள் அந்த இறை நம்பிக்கையாளரிடத்தில் நூருத்தீன் அவர்கள் வீணாக போலோ விளையாட்டு விளையாடி நேரத்தை போக்குவதைப் பற்றி கூறி அதை தடுக்க வேண்டும் என்று கூறினார்கள்.

உடனே அந்த இறை நம்பிக்கையாளர் நூருத்தீன் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்.

அதில், நூருத்தீன் அவர்களே நீங்கள் விளையாடுவது பற்றியும் எந்த ஒரு இலக்கில் லாமலும் இஸ்லாமிய தேவையின்றியும் குதிரை களை கொடுமைப்படுத்துவதை பற்றியும் எனக்கு தெரியாது என கிண்டலாக குறிப்பிட்டிருந்தார்.

உடனே பதறிப்போன நூருத்தீன் அவர்கள் அந்த இறை நம்பிக்கையாளருக்கு பின் வருமாறு பதிலளித்தார்கள்.

“அல்லாஹ்வின் மீது சத்தியமாக விளை யாட்டிற்காகவோ பொறுப்பின்றியோ நான் போலோ விளையாட்டை விளையாடவில்லை. நாம் இருப்பதோ எல்லைப்புறத்தில். எதிரி களோ அருகில் ஒளிந்து கொண்டு எந்த நேரம் வேண்டுமானாலும் நம்மை தாக்க தயாராக இருக்கிறார்கள். நாம் ஓய்ந்திருப்பது எதிரி களுக்கு தெரிந்து விட்டால் அவர்கள் எல்லா திசைகளில் இருந்தும் நம்மை தாக்க தொடங்கி விடுவார்கள்.

இரவு பகல் எல்லாம் ஜிஹாத் செய்ய நமக்கு இப்போது போதிய திறன் இல்லை. நமக்கு கண்டிப்பாக ஓய்வு தேவை. நாம் குதிரைகளை லாயங்களில் விடுவோமேயானால் அவை சோம்பேறிகளாகிவிடும். பலஹீனமாகி விடும். அவற்றால் போர்களத்தில் வேகமாக முந்திக்கொண்டு ஓட இயலாது. போர்வீரனின் கட்டுப்பாட்டிற்குள் இருக்காது.

இந்த விளையாட்டின் மூலம் அவற்றை கட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியும். மேலும் போர்குதிரைகள் இங்கும் அங்குமாக ஓடி பயிற்சி மேற்கொள்ளப்படும் செய்திகள் எதிரிகளை சென்றடையும். அவர்களை அச்சுறுத்தும். அல்லாஹ்வின் மீது சத்தியமாக இதற்காகத்தான் நான் போலோ விளையாடினேன்” என்று பதில் கூறினார்.

நூருத்தீன் ஸங்கி அவர்கள் மிகப்பெரிய ஆட்சியாளர். பல தேசங்களின் மன்னர். அவர் இந்த பதிலை சொல்ல கடமைப்பட்டவர் அல்ல. ஆனாலும் ஓர் இறைநம்பிக்கையாளர் முன் எவ்வளவு பணிந்து பதில் கூறியுள்ளார் என்பதன் மூலம் அவருடைய இறையச்சத்தை அளவிடலாம்.

அவர் யாரையும் உதாசீனப்படுத்தியதில்லை. விளையாட்டைக்கூட அல்லாஹ்விற்காக இறை வனின் மார்க்கத்திற்காக விளையாடிய ஒரே நபராக இவரை வரலாற்றில் காணலாம்.

இதன் மூலம் அவர் இலக்கோ இலட்சியமோ இல்லாமல் எதையும் செய்ததில்லை என்பதை அறியலாம்.

இது தான் நூருத்தீன் ஸங்கி அவர்களின் பலம்.

### தங்கத்தலைப்பாகை

நூருத்தீன் ஸங்கி அவர்களுக்கு தங்கமுலாம் பூசப்பட்ட தலைப்பாகை ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பட்டது.

நூருத்தீன் அவர்கள் அதற்கு எந்த முக்கியத் துவமும் அளிக்கவில்லை. அதை அவர் வீட்டிற் கும் எடுத்து செல்லவில்லை.



ஒருமுறை எடஸ்ஸா என்ற இடத்தில் போர் களத்தில் நூருத்தீன் அவர்களுடன் பஹா அத்தீன் அவர்களும் இருந்தார்.

அப்போது காலை நேரம். சூரியன் அவர்களுக்கு பின்னால் இருந்தது.

அவர்கள் முன்னே செல்ல செல்ல அவர்கள் நிழலும் முன்னே சென்று கொண்டிருந்தது. பின்னர் திரும்பி வந்தபோது அவர்கள் நிழல் அவர்களுக்கு பின்னால் இருந்தது. அவர் தன் குதிரைகளை வேகமாக செலுத்திக்கொண்டே இளவரசரை பார்த்து கேட்டார், நான் ஏன் வேகமாக குதிரைகளை ஓட்டிக்கொண்டே பின்னே பார்க்கிறேன் என்று தெரியுமா?

அதற்கு இளவரசர் தெரியவில்லை என்று கூறினார்.

நூருத்தீன் கூறினார், இளவரசே இது நம் வாழ்க்கையை சுட்டிக்காட்டுவதாக உள்ளது. யார் அதை தேடி ஓடுகிறார்களோ அது அவர்களை விட்டு ஓடுகிறது. யார் அதை விட்டு ஓடுகிறார்களோ அது அவர்களை தேடி அடைய முற்படுகிறது.

வாழ்க்கை குறித்து சுல்தான் நூருத்தீன் அவர்களுக்கு இருந்த தெளிவின் அடையாளம் இது. வாழ்க்கையை இந்த அளவிற்கு இவ்வளவு எளிதாக யாரும் எடுத்து கூறியதில்லை என்றே கூறலாம்.

இது குறித்து அவரிடம் பலமுறை எடுத்து சொல்லப் பட்டது. பின்னர் பலரும் இந்த தலைப்பாகை குறித்து பேச ஆரம்பித்து விட்டனர்.

அப்போது ஓர் ஏழை அவரிடம் வந்தார். உடனே நூருத்தீன் அவர்கள் அந்த தலைப் பாகையை அந்த ஏழையிடம் கொடுத்துவிடுமாறு ஆணையிட்டார்கள்.

அவருடைய பணியாட்கள் அதிர்ச்சி யடைந்து இது அவருக்கு பொருத்தமானதில்லை. உங்களுக்கு தான் பொருந்தும். தயவு செய்து இதை தர வேண்டாம், நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று கோரினார்கள்.

ஆனால் நூருத்தீன் ஸங்கி அவர்கள் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

இதனை அவருக்கே கொடுத்து விடுங்கள். இதற்கு பிரதி பலனை நான் மறுமையில் இறைவனிடத்தில் எதிர்பார்க்கிறேன் என்று கூறிவிட்டார்கள். அதன்படி அந்த ஏழையிடமே அந்த தலைப்பாகை கொடுக்கப்பட்டது.

அந்த ஏழை அதனை பாக்தாத் கொண்டு சென்று 700 தினார்களுக்கு விற்றுவிட்டார். ஆடம்பரமான பொருட்களை சுல்தான் நூருத் தீன் அவர்கள் தன் வாழ்நாளில் உபயோகப்படுத் தியதே கிடையாது.

**குதிரையின் நிழல்**

இளவரசர் பஹாவுத்தீன் அலி இப்னு அஸ் சுக்கரி அவர்கள் சுல்தான் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களின் நண்பர்.

**யார் சொத்து?**

சுல்தான் நூருத்தீன் அவர்கள் அடிக்கடி கூறுவதுண்டு, நாம் படைக்கப்பட்டதும் பணிக் கப்பட்டிருப்பதும் இஸ்லாமிய ஷரீயத் சட்டங் களை நடைமுறைப்படுத்தத்தான் என்று.

ஒரு முறை நூருத்தீன் அவர்கள் டமாஸ் கஸில் வழக்கம் போல் போலோ விளையா டிக்கொண்டிருந்தார்.

அப்போது ஒரு மனிதன் இன்னொருவரிடம் நூருத்தீன் அவர்களை சுட்டிக்காட்டி ஏதோ சொல்லிக்கொண்டிருந்தார்.

இதனை நூருத்தீன் ஸங்கி அவர்கள் கவனித்து விட்டார்கள்.

நூருத்தீன் அவர்கள் தன்னுடைய பணியாள் ஒருவரை அனுப்பி அவர்களுக்கு என்ன பிரச்சனை என்று கேட்டு வரச்சொன்னார்.

அந்த மனிதன், பணியாளிடம், "இந்த நாட்டு மன்னருக்கும் எனக்கும் இடையே ஒரு சொத்து விஷயத்தில் பிரச்சனை உள்ளது. அது குறித்து தான் பேசிக்கொண்டிருந்தோம்" என்று கூறினான்.

அந்த பணியாள் நூருத்தீனிடம் திரும்பி விவரங்களை கூறினார்.

உடனடியாக நூருத்தீன் அவர்கள் விளையாட்டு களத்தை விடடு விறுவிறுவென வெளியேறினார். அந்த பகுதியின் அப்போதைய நீதிபதி கமாலுத்தீன் அஷ்ஷஹ்ரசூரி அவர்கள்.

சுல்தான் நூருத்தீன் நேராக அவரிடம் சென்றார்.

மன்னரே வந்து விட்டதை கண்ட நீதிபதி அவருக்கு மரியாதை செலுத்த நினைத்தார்.

அப்போது நூருத்தீன் அவர்கள் "நான் இந்த இடத்திற்கு மற்ற மனிதர்களை போலவே விசாரணைக் கோரி வந்துள்ளேன். எனவே என்னை மற்ற சாதாரண மனிதர்களைப் போலவே நடத்துங்கள்" என்று கூறினார்.

பின்னர் குற்றச்சாட்டு கூறிய நபர் வர வழைக்கப்பட்டு அவரும் சரிசமமாக நூருத்தீன் அருகில் அமர்த்தப்பட்டார்.

குற்றசாட்டும் விசாரிக்கப்பட்டது. நீதிபதி விசாரித்துப்பார்த்ததில் அந்த நபர் சொன்னது பொய் குற்றச்சாட்டு என தெரிந்தது.

இப்போது நூருத்தீன் அவர்கள் எழுந்து நீதிமன்றத்தையும் பொது மக்களையும் பார்த்து "நான் இவருடைய சொத்துகளை அபகரித்தேனா?" என்று கேட்டார்.

அவர்கள் "இல்லை, இல்லை" என பதிலளித்தார்கள்.

"எது அவருடையது என்று பொய் வழக்கு தொடர்ந்தாரோ அந்த சொத்துக்களை இப்போது நான் அவருக்கே வழங்கி விட்டேன். இதற்கு தயவு செய்து நீங்களே சாட்சி" என்று கூறினார்.

"அந்த சொத்துக்கள் என்னுடையது தான் என்று எனக்கு தெரியும். அவருக்கு அதில் எந்த உரிமையும் இல்லை என்பதும் எனக்கு தெரியும். இதை நான் முன்னரே அவருக்கு கொடுத்திருக்கலாம்."

"இதை நான் ஏன் உங்கள் முன் செய்கிறேன் என்றால் வருங்காலத்தில் நான் அவரை அடக்கு முறைக்கு உட்படுத்தி அவருடைய சொத்துக்களை பறித்துக்கொண்டேன் என்று நினைவில் கூட யாரும் எண்ணிவிடக்கூடாது."

இப்போது எல்லா விஷயங்களும் தெளிவாகிவிட்டன. அதற்கு மேல், நான் அந்த சொத்துக்களை அவருக்கு கொடுத்தும் விட்டேன். எனவே, என் புறம் தெள்ளத் தெளிவாகி விட்டது" என்று கூறினார்.

ஊர் மக்கள் அனைவரும் அப்படியே அதிர்ச்சியில் உறைந்து போயினர்.

இத்தகைய நீதி செலுத்துதலுக்கு மேலே வேறொன்றை வரலாறெங்கும் தேடினாலும் கிடைக்காது என்று சொல்லலாம்.

சந்தேகத்தின் அடிப்படையில் அவர் யாரையும் தண்டித்தது கிடையாது.

ஆனால் சரியான ஆதாரங்களுடன் குற்றம் நிரூபிக்கப்படுமானால் அவரை இஸ்லாமிய தண்டனை சட்டங்களைக் கொண்டு தண்டிக்க தயங்கியது கிடையாது.

இதன் காரணமாக அவருடைய ஆட்சி மிகவும் பாதுகாப்பான ஆட்சியாக மாறியது. அவருடைய ஆட்சியில் குற்றங்கள் வெகுவாக குறைந்தன.

### இறந்த பின்னரும் நீதி

நூருத்தீன் அவர்கள் காலத்தில் அவருடைய நியாயமான ஆட்சியின் காரணமாக டமாஸ் கஸில் ஒரு மனிதன் வந்து குடியேறினான். அவருடைய ஆட்சியின் மாண்பின் காரணமாக நிரந்தரமாக அவன் அங்கேயே தங்கி விட்டான்.

நூருத்தீன் அவர்கள் இறந்துவிட்ட பிறகு அரச படை வீரர்களில் ஒருவன் அந்த மனிதனின்



இடத்தை ஆக்கிரமித்துக்கொண்டான். அந்த மனிதன் நீதிமன்றத்தில் புகார் அளித்தும் எந்த பலனும் கிட்டவில்லை. அவன் தன்மீதான அடக்குமுறையை கண்டு தாளாமல் நீதிமன் றத்தை விட்டு அழுது கொண்டே தன் ஆடை களை கிழித்துக்கொண்டு வெளியேறினான். பின்னர் வாய்விட்டு கதற தொடங்கினான்.

"நூருத்தீன் அவர்களே எங்கிருக்கிறீர்கள்?

நீங்கள் நிச்சயமாக எங்கள் மீது நீதி செலுத்தி னீர்கள். எங்கள் மீது கருணை கொண்டிருந்தீர்கள். உங்களுடைய நியாயமான ஆட்சி எங்கே போனது?" என்று அரற்றினான்.

பின்னர் அவன் அழுதுக்கொண்டே நூருத் தீன் அவர்களின் அடக்கஸ்தலத்தை நோக்கி சென்றான். பொது மக்களும் அழுகையும் கோஷ முமாக கூட்டமாக அவனுடன் சென்றார்கள்.

இந்த விவரங்கள் சுல்தான் சலாஹூத்தீன் அய்யூபி அவர்களுக்கு தெரிய வந்தது. அவர்கள் இதனை கூர்மையாக ஆய்வு செய்து இதனை முறையாக கையாளும்படி அப்பகுதி நீதிபதிகளுக்கு அறிவுறுத்தினார்கள்.

இதன்மூலம் சுல்தான் ஸலாஹூத்தீன் அவர்கள் புரட்சி எதுவும் ஏற்படாமல் பாதுகாத் துக்கொண்டார்கள்.

பின்னர் ஸலாஹூத்தீன் அவர்கள் அந்த மனிதனை தன்னிடம் அழைத்து வரச்செய் தார்கள். அவனுடைய சொத்துக்களை அவனிடமே ஒப்படைத்தார்கள். கூடவே சில வெகுமதிகளையும் தந்தனுப்பினார்கள்.

அந்த மனிதன் இப்போது ஏற்கனவே அழுததை விட சத்தமாக அழ ஆரம்பித்து விட்டான்.

ஸலாஹூத்தீன் அவர்கள் அவனிடம் "ஏன் இன்னும் அழுது கொண்டிருக்கிறாய்?, உன் சொத்துக்கள் தான் உன்னிடம் ஒப்படைக் கப்பட்டு விட்டனவே" என்று கேட்டார்கள்.

அதற்கவன் நீதி செலுத்திய அரசர் ஒருவர் அவருடைய நீதியின் காரணமாக அவர் இறந்த பின்னரும் மற்ற அரசர்களையும் நீதி செலுத்தும் படி ஆளுமை செய்வதை கண்டு அழுகிறேன் என்று கூறினான்.

சலாஹூத்தீன் அவனிடம்," ஆம், நீ சொல்வது சரியே, நூருத்தீன் அவர்கள் எங்களுக்கு தலைவர், எப்படி நீதி செலுத்த வேண்டும் என்பதை அவரிடமிருந்தே நாங்கள் கற்றுக்கொண்டோம்" என்று கூறினார்.

இந்த நிகழ்ச்சி சுல்தான் நூருத்தீன் அவருடைய இறப்புக்கு பின்னரும், அவர் செலுத்திய நீதியின் தாக்கம் தொடர்ந்ததை பறை சாற்றும்.

- இன்ஷாஅல்லாஹ் தொடரும்.



# ஈரான்-இஸ்ரேல் போர்? வெல்லப்போவது யார்?

*ஈரான் இஸ்ரேல் போர்? யார் பலசாலி?*

கடந்த மே மாதம் 9ம் தேதி அல் கிஸ்வா என்ற இடத்தில் உள்ள சிரியாவின் இராணுவ தளத்தை இஸ்ரேல் ஏவுகணைகளைக் கொண்டு தாக்கியது.

அமெரிக்கா ஈரானிடம் செய்து கொண்ட அணு ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறியவுடன் இந்த தாக்குதல் நடந்தது.

ஈரான் அதற்கு அடுத்த நாள் 20 ஏவுகணைகளை கோலன் ஹைட்ஸ் என்ற இடத்தை நோக்கி ஏவி இஸ்ரேலை தாக்கி பதிலடி கொடுத்தது.


இதில் நான்கு ஏவுகணைகளை மட்டுமே இஸ்ரேலின் ஐயர்ன் டோம் (இரும்பு தடுப்பு) சிஸ்டத்தால் தடுக்க முடிந்தது. மற்ற 16 ஏவுகணைகள் இலக்கை சரியாகத் தாக்கி பேரழிவை இஸ்ரேலுக்கு ஏற்படுத்தின.

இந்த தாக்குதலுக்கு பின்பு இஸ்ரேல் தடுமாறியது.

இஸ்ரேலின் போக்குவரத்து மற்றும் உளவுத் துறை அமைச்சர் "இஸ்ராயில் கட்ஸ்" என்பவர் செய்தியாளர்களிடம் இப்படி புலம்பினார், "நாங்கள் சிரியாவை ஆக்கிரமிக்க விரும்ப வில்லை, ஆனால் அதே சமயம் ஈரான் இங்கே தளங்கள் அமைக்காமல் பின்வாங்க வேண்டும் என்பதையே விரும்புகிறோம்.

நாங்கள் நேரிடையாக எந்த போரிலும் ஈடுபட விரும்பவில்லை, ஆனால் ஈரான் சிரியாவில் எங்களுக்கு எதிராக இராணுவ தளங்களை அமைப்பது தான் எங்கள் பிரச்னை" நாங்கள் எங்கள் குறிக்கோளை அடைந்துவிட்டோம்.

"நாங்கள் எங்கள் குறிக்கோளை அடைந்து விட்டோம்" என்று கூறியிருப்பதன் மூலம் இஸ்ரேல் இத்துடன் இந்த போரை நிறுத்தி கொள்ள விரும்புகிறது என்றே எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கு மேல் போர் செய்ய இஸ்ரேலுக்கு திராணியில்லை.



https://www.aljazeera.com/news/2018/05/israel-opened-front-syria-war-180510122121138.html

ஒருவேளை இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் நேரிடையான போர் ஏற்பட்டால் யார் வெற்றி பெறுவார் என்பதை பார்ப்போம். அதற்கு முன் இந்த நாடுகளைப்பற்றிய ஒரு வரலாற்றுப் பார்வை.

**ஈரான்**

தற்போதைய ஈரான் முன்னாளில் பாரசீக நாடு.

வரலாற்று காலம் தொட்டு மிக முக்கியமான இடத்தை பெற்று வருவது பாரசீகம்.

பெர்சியா என்ற பாரசீகத்தை தவிர்ததொரு வரலாற்றை நாம் காண முடியாது.

இத்தகைய முக்கியத்துவத்தை பெற்ற பாரசீகம் இஸ்லாத்தை பின்பற்ற தொடங்கியதன் பின்னர் இன்னும் முக்கியத்துவத்தை பெற்றது.

கி.பி.637இல் பாரசீகத்தை உமர் (ரலி) அவர்கள் வெற்றி கொண்டார்கள். அப்போது குரேசான் என்பது அந்த பகுதிகளுக்கு பெயராக இருந்தது. அப்போதைய குரேசான் தற்போதைய ஈரானின் குரேசான் பகுதிகளையும் ஆப்கானிஸ்தானின் பகுதிகளையும் மத்திய ஆசிய பகுதிகளையும் (உஸ்பெஸ்கிஸ்தான், கஜகிஸ்தான், தஜகிஸ்தான், கிக்கிஸ்தான் போன்ற பகுதிகள்) உள்ளடக்கியது.

எனவே, உமர் (ரலி) அவர்கள் காலத்திலேயே இஸ்லாம் இங்கே நிலைநாட்டப்பட்டு விட்டது. அதன் பின்னர் அங்கு இஸ்லாமே தொடர்ந்து மக்களால் பின்பற்றப்பட்டு வருகிறது.

**1979**ம் ஈரானில் இஸ்லாமியப் புரட்சி ஏற்பட்டது. மன்னர் முஹம்மது ரஸா ஷா பெஹ்லவி ஆட்சியில் இருந்து தூக்கி எறியப் பட்டு ஏப்ரல் **1 1979**இல் இஸ்லாமிய குடியரசு ஏற்படுத்தப்பட்டது. அயாத்துல்லாஹ் கொமேனி அவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள்.

தன்னை இஸ்லாமிய குடியரசாக பிரகனடப் படுத்திய பின்னர் ஈரான் தொடர்ந்து மேற்கத்திய நாடுகளின் அழுத்தத்திற்கு ஆளாகி வருகிறது. ஆனால் அதைப்பற்றி சற்றும் கவலைப்படாமல் அதன் ஆட்சியாளர்கள் தொடர்ந்து அதனை இஸ்லாமிய குடியரசாக நடத்தி வருகின்றனர்.

பல்வேறு கட்டங்களில் ஈரானுக்கு நெருக்கடி தர பொருளாதார தடை போன்ற தடைகளை ஈரான் மீது கொணர்ந்து மகிழ்ந்து கொண்டனர் அமெரிக்கா போன்ற நாடுகள்.

ஈரான் பெட்ரோல் எண்ணெய் வளம் மிக்க நாடு. உலகப்போரில் ஈரான் அணி சேரா நாடாக இருந்த போதும் அதன் எண்ணெய் வளம் காரண மாக அதன் மீது ஆங்கில, ரஷ்ய படைகள் போர் தொடுத்து ஆக்கிரமித்தன.

எனவே, அதன் எண்ணெய் வளம் மேற்கத்திய நாடுகளின் கண்ணை உறுத்தும் விஷயமாக உள்ளது. இன்று உலகின் எண்ணெய் உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

**சிலுவைப்போர்கள்**

சிலுவைப்போர்களின் போது சிலுவைப் படை வீரர்களுக்கு சிம்மசொப்பனமாக விளங்கி யவர்கள் இமாதுத்தீன் ஸெங்கி (ரஹ்), நூருத்தீன் ஸெங்கி (ரஹ்) மற்றும் ஸலாஹூத்தீன் அய்யூபி (ரஹ்) போன்றோர். இவர்கள் ஆட்சி செய்த பகுதிகள் குறிப்பாக தற்போதைய சிரியாவின் அலெப்போ, மொசூல், டமாஸ்கஸ் மற்றும் ஜெருசலேம்.

சிலுவைப்போர்களின் காலத்தில் இருந்தே இந்த பகுதிகளுக்காக பலமுறை முஸ்லிம்களுக் கும்கிறித்தவர்களுக்குமிடையே போர்கள் நடந்து வந்தன.



பிரெஞ்சு படை தளபதி
ஹென்றி ஜோசப் ஈகுவின் கௌராட்

இதில் கிறித்தவர்கள் ஒட்டு மொத்தமாக தோற்கடிக்கப்பட்டு சிதறடிக்கப்பட்டது மேற் சொன்ன மூவரின் ஆட்சியின் போது தான்.

இது கிறித்தவ உலகத்தை நிம்மதியாக தூங்க விடவில்லை. அவர்கள் அதன் இரணத்தை மனதிலேயே சுமந்து வந்தனர்.

முதல் உலகப்போரின் போது பிரெஞ்சு படைகள் ஜூலை 25, 1920ல் டமாஸ்கஸை முற்றுகையிட்டது.

அப்போது பிரெஞ்சு படைகளின் தளபதியாக இருந்த ஹென்றி ஜோசப் ஈகுவின் கொளராட் என்பவன் சலாஹூத்தீன் அய்யூபி அவர்களின் அடக்கஸ்தலத்தின் மீது தன்னுடைய கால்களை தூக்கி வைத்து கொண்டு அகந்தையோடு சொன்னான்,"ஸலாஹூத்தீனே, பார், நாங்கள் மீண்டும் வந்து விட்டோம்".

இப்படி பல நூற்றாண்டுகளாக தங்களுக்குள் தேக்கி வைத்து கொண்டிருந்த பகை உணர்வை தீர்க்க மேற்கத்திய உலகம், எப்படியாவது சிரியாவை தங்கள் வசம் கொண்டு வந்து விட வேண்டும், அங்குள்ள முஸ்லிம்களை கொன் றொழித்து விட வேண்டும் என்று விரும்புகிறது.

எனவே, வரலாற்று காலம் தொட்டு சிரியாவும் மிக முக்கியமானதொரு நாடு, ஏனெனில் சிரியா நேர்வழி பெற்ற சத்திய சஹாபாக்கள் காலம் தொட்டு முஸ்லிம்களின் இராணுவ கேந்திரமாக விளங்கிய நாடு.

கிலாஃபத் வீழ்த்தப்பட்ட (1926 பிப்ரவரி 23) பின்பு அந்த நிலைமை இல்லை என்றாலும், உலக இஸ்லாமியர்களின் இராணுவ கேந்திரமாக விளங்கிய நாடு என்ற வரலாற்று உண்மையை வஞ்சகமாக நெஞ்சில் சுமந்து கொண்டு திரிந்த மேற்கத்திய நாடுகள் அதனை அழிக்க தலைப்பட்டன. அதன் விளைவே தற்போதைய சிரியா போர்.

சிரியாவின் தற்போதைய நிலைமையை வெறும் உள்நாட்டுப்போர் என்ற கண்ணோட் டத்தில் மட்டும் பார்ப்பது மேற்சொன்ன பல வரலாற்று உண்மைகளை நாம் மறைத்து மறந்து விட்டு போவதற்கு சமமாகும். சிரியாவை தற்போது எந்தெந்த நாடுகள் தாக்கிக் கொண்டி ருக்கின்றன என்பதை உற்று நோக்கும் போது இந்த விஷயங்கள் உங்களுக்கு விளங்கிவிடும்.

அமெரிக்கா ஒருபுறம், இஸ்ரேல் இன்னொரு புறம், இரஷ்யா மற்றொரு புறம் என்று சிரியாவை தாக்கி சின்னாபின்னமாக்கி கொண்டிருக்கின்றன.

சிரியாவின் ஒரு பகுதியான கோலன் ஹைட்ஸ் எனப்படும் பகுதியை இஸ்ரேல் கைப்பற்றி வைத்துள்ளது.

**இஸ்ரேல்**

இரண்டாம் உலகப்போருக்கு பின்னால் 1949-ல்பாலஸ்தீன மக்களுக்கு சொந்தமான பகுதிகளை யூதர்கள் வசம் தந்து சொந்த மக்களை அகதிகளாக்கி ஒரு புதிய நாட்டை உருவாக்கி தந்தனர் மேற்கத்திய உலகத்தினர். அதன் பெயர் இஸ்ரேல். இதற்கு முக்கிய காரணம் நாம் மேற்சொன்னவை.

முஸ்லிம்களின் நிலமான பாலஸ்தீனத்தை பிரித்து வந்தேறிய யூதர்களுக்கு வழங்கியதன் மூலம் சுற்றியிருந்த இஸ்லாமிய நாடுகளை நிம்மதியின்றி வைத்திட வேண்டும் என்ற எண்ணமே அதற்கு முக்கிய காரணம்.

அதுவரை சொந்தநாடு என்று ஒன்றில்லாத வந்தேறிகளான யூதர்கள், இந்த உரிமை கிடைக்க பெற்றவுடன் அந்த நிலத்தின் சொந்த மக்கள் மீது பல்வேறு அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விட்டனர்.

இன்றுவரை தங்களுடைய கொடுமைகளை அந்த மக்கள் மீது தொடர்ந்து வருகின்றது இஸ்ரேல்.

இஸ்ரேல் உருவாக்கப்பட்டவுடன் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து 1948இல் அரபு நாடுகளான எகிப்தும் லெபனானும் சிரியாவும் (ஈராக், ஜோர்டான், சவூதி அரேபியா, யெமன் போன்ற நாடுகளும் சிறிய படைகளை அனுப்பின) இஸ்ரேலுக்கு எதிராக போர் தொடுத்தன.

இதில் மீதமிருந்த பாலஸ்தீன பகுதிகளையும் தன் ஆக்கிரமிப்புக்குள் கொண்டு வந்தது இஸ்ரேல். கிட்டதட்ட 7,50,000 பாலஸ்தீனர்கள் மேலும் அகதிகளாகினர்.

இதன் பின்னர் இதுவரை பல போர்கள் இஸ்ரேலுக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ளன. ஆனாலும் மேற்கத்திய நாடுகளின் ஆயுத பலத்தோடு தன் அடக்குமுறைகளை இதுவரை

தொடர்ந்து வருகிறது இஸ்ரேல்.

**பாலஸ்தீனம்**

ஈரான் *1979*-ல் புரட்சி ஏற்பட்டு கொமைனி ஆட்சி ஏற்பட்டவுடன் அது இஸ்ரேலுடனான தன் போக்கை மாற்றிக்கொண்டது.

அது பி.எல்.ஓ என்று சொல்லப்படுகிற பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு தன்னுடைய ஆதரவை தெரிவித்தது. பாலஸ்தீன விடுதலை இயக்கம் யாசர் அரஃபாத் தலைமையில் ஆயுத போராட்டம் நடத்திய காலமது.

அதிகாரபூர்வமாக இஸ்ரேலுடைய தூதர கத்தை மூடி அந்த இடத்தை பாலஸ்தீனர்களிடம் தந்து பாலஸ்தீன தூதரகமாக அறிவித்தது ஈரானின் கொமைனி அரசு.

"பாலஸ்தீனியர்களுக்கு ஏன் உதவு கிறீர்கள்? அதன் மூலம் இஸ்ரேலை ஏன் பகைத்து கொள்கிறீர்கள்?" என்று கொமைனியிடம் கேட்ட போது அவர் "ஒடுக்கப்பட்ட அடக்கு முறைக்கு உட்பட்ட மக்களுக்கு உதவுவது இஸ்லாமிய குணம். அடக்கு முறைக்கு ஆட்பட்டவர்கள் உதவி கோரும் போது உதவாமல் இருப்பவன் உண்மையான முஸ்லிம் அல்ல" என்று பதிலளித்தார்கள்.

பாலஸ்தீன விடுதலை இயக்கம் தன் போராட்ட குணத்தை நீர்த்துக்கொண்ட போது பாலஸ்தீனர்களில் சிலர் வேறு இயங்கங்களை கண்டனர். அதில் ஒன்று தான் ஹமாஸ்.

ஹமாஸ் (ஹர்கதுல் முகவ்வமல் இஸ்லா மியா) என்ற இயக்கம் முதல் இன்திஃபாதாவிற்கு பிறகு *1987*ல் உருவானது. எகிப்தில் இருந்த இஸ்லாமிய சகோதர இயக்கத்தின் (இஃவானுல் முஸ்லிமூன்) பாலஸ்தீன பிரிவு இது. கஸ்ஸாம் படை வீரர்கள் என்பது இதன் இராணுவப்பிரிவு.

*2002*ல் ஈரான் *50* டன் எடை கொண்ட ஆயுதங்களை கரைன் ஏ (Karine A <https://en.wikipedia.org/wiki/Karine_A> ) (நூஹ் கப்பல்) என்ற கப்பல் மூலம் பாலஸ்தீனியர்களுக்கு அனுப்பி வைத்தது. ஆனால் இஸ்ரேல் அதனை கைப் பற்றியது.

ஹமாசுக்கு பெரிய அளவில் பண உதவி செய்வதும் நெருக்கடி ஏற்படும் போதெல்லாம் ஆயுத உதவி செய்வதும் ஈரானின் வழமையான செயல்.

ஹமாசுக்கு ஃபஜ்ர்-*5*, எம்-*75*, எம்-*302* ரக ராக்கெட்டுகளின் தொழில்நுட்பங்களை அவர்களே தயாரித்து கொள்ளும் வகையில் ஈரான் அளித்துள்ளது.

இந்த உதவிகள் அனைத்தையும் ஈரான் எந்த விதமான எதிர்பார்ப்பும் இன்றி பாலஸ் தீனியர்கள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மக்கள் என்ற வகையில் அளித்து வருகிறது.

இது ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே பகை ஏற்பட முதல் காரணம்.



இதுமட்டுமன்றி *1985*இல் இஸ்ரேலை எதிர்த்து தெற்கு லெபனானில் உருவாக்கப்பட்ட ஹிஸ்புல்லாஹ் என்ற ஆயுதந்தாங்கிய போராட்ட குழுவினருக்கு ஈரான் பெரும் பக்க பலமாக இருந்து வருகிறது. இதுவும் இஸ்ரே லிடையே பகை ஏற்பட முக்கிய காரணம்.

**சிரியா**

சிரியாவும் பாலஸ்தீன மக்களுக்காக நேரிடையாகவும் மறைமுகமாகவும் இஸ்ரே லுடன் போர் செய்துள்ளது. அதன் காரணமாக அது இஸ்ரேலிடம் கோலன் ஹைட்ஸ் (golan heights) என்ற பகுதிகளை இழந்துள்ளது. கிட்டத்தட்ட *1800* கி.மீ அளவுள்ள பகுதி அது.

கொமைனி அவர்கள் ஈரானின் தலைவரான வுடன் சிரியாவின் வரலாற்று முக்கியத்துவத்தை உணர்ந்து அந்நாட்டுடன் பல போர் ஒப்பந்தங் களை செய்தார்கள்.

தற்போதைய சிரியாவின் சூழ்நிலைகளை பயன்படுத்திக்கொண்டு அந்நாட்டை இஸ்ரே லும் அமெரிக்காவும் பலமுறை தாக்குதல் நடத்தின. உள்நாட்டு போரில் சிக்குண்டு தவிக்கும் சிரியா இதற்கு தக்க பதிலடி கொடுக்க இயலாமல் உள்ளது. இந்த சூழ்நிலைகளை அமெரிக்காவும் இஸ்ரேலும் சாதகமாக பயன்படுத்திக்கொண்டன.

**ஈரானின் போர் தந்திரம்**

ஈரானின் தலைநகருக்கும் இஸ்ரேலுக்கும் இடையே *2361* கிலோமீட்டர் தூரம் உள்ளது. ஈரானின் எல்லைப்புற நகரங்களில் இருந்து இஸ்ரேல் கிட்டத்தட்ட *1789* கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

இந்த தூரம் தான் ஈரானுக்கு சாதகமான ஒன்று.




என்னத்தான் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை கைவசம் இருநாடுகளும் வைத்திருந்தாலும் ஒரு நாட்டுடன் இன்னொரு நாடு போரிடும் போது அதற்கு அருகாமையில் இராணுவ தளங்கள் இருப்பது அவசியம். அப்போது தான் தரைப்படைகள் உள்ளே நுழைய ஏதுவாகும். தரைப்படைகளை முற்றுகை யிடும் போது தான் வெற்றி உறுதி செய்யப் பட்டு அந்த பகுதி கைவசப்படும். அப்படி நோக்கும்போது ஈரான் இஸ்ரேலிடமிருந்து பாதுகாப்பான தூரத்தில் உள்ளது.

ஆனால் இஸ்ரேலின் நிலை அப்படி பாது காப்பானதாக இல்லை. ஏனெனில் இஸ்ரேலை சுற்றி ஈரான் தன் இராணுவ தளங்களை அமைத்துக்கொண்டுள்ளது.

எப்படி சிரியாவின் சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொண்டு அமெரிக்காவும் இஸ்ரேலும் சிரியாவை தாக்கி வந்தனவோ, அதே சூழ்நிலைகளை பயன்படுத்திக்கொண்டு சிரியாவை பாதுகாப்பதாக கூறி போதுமான இராணுவ தளங்களை ஈரான் சிரியாவில் உருவாக்கி விட்டது. இதன் மூலம் இஸ்ரேலின் எல்லைக்கு அருகாமையில் வந்து விட்டது ஈரான்.

அது மட்டுமன்றி லெபனானிலும் ஜோர் டானிலும் ஈரானுக்கு போதுமான இராணுவத் தளங்கள் உள்ளன. குறிப்பாக தெற்கு லெபனானில் ஹிஸ்புல்லா இயக்கத்தினர் ஈரானின் போர்படை வீரர்களாகவே செயல் பட்டு வருகின்றனர். இதுவும் இஸ்ரேலின் மற்றொரு எல்லைப்பகுதி.

இது மட்டுமன்றி பாலஸ்தீனமும் சமயம் கிட்டும் போது இஸ்ரேலை தாக்க தங்கள் பகுதியை ஈரானின் இராணுவ தளமாக பயன்படுத்த ஈரானை அனுமதிக்கக் கூடும். ஆனால் இப்போது ஈரானுக்கு பாலஸ்தீனத்தில் எந்த இராணுவ தளமும் கிடையாது.

துருக்கி இதுவரை இஸ்ரேலை எதிர்த்து எந்த போரிலும் நேரிடையாக ஈடுபடவில்லை என்றாலும் மறைமுகமாக அது இஸ்ரேலுக்கு எதிரான போராளிகளை ஆதரித்து வருகிறது. இஸ்ரேலை எல்லாப்புறங்களில் இருந்தும் தாக்கும் ஒருங்கிணைந்த இஸ்லாமியப்படை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று சமீபத்தில் துருக்கி அதிபர் எர்துகான் அவர்கள் வெளிப் படையாகவே அழைப்பு விடுத்திருந்தார். அது இச்சமயத்தில் முக்கியத்துவம் பெறுகிறது.

https://www.express.co.uk/news/world/936954/World-War-3-Turkey-Erdogan-army-of-Islam-Israel-war-attack-all-sides-latest-news

இஸ்ரேலுக்கும் துருக்கிக்கும் இடையே *879* கி.மீட்டர்கள் எல்லைத்தூரம் உள்ளது. இது ஈரானை ஒப்பிடுகையில் மிகக்குறைவு. மேலும்

துருக்கியும் தன் இராணுவத்தளங்களை சிரியா வில் வைத்துள்ளது.

https://www.memri.org/reports/studies-arab-researchers-distribution-foreign-bases-across-syria

எனவே, இஸ்ரேல் தன்னை சுற்றி தன் எதிரி களின் இராணுவத்தளங்களை வைத்துக்கொண்டு பாதுகாப்பற்ற நிலையில்தான் உள்ளது.

**இஸ்ரேல் தனித்து விடப்பட்ட நாடு**

அது மட்டுமன்றி உலக அரங்கில் இஸ்ரேல் தனித்து விடப்பட்ட நாடு. இஸ்ரேலுக்கு மறைமுகமாக வேண்டுமானால் சில நாடுகள் உதவலாமே தவிர அது போரிடும் போது தன் சொந்த இராணுவத்தை மட்டுமே நம்பி போரிட வேண்டி இருக்கும்.



இதை இப்படி சொல்லலாம். இஸ்ரேலுக்கு எதிராக இப்போது ஒரு போர் மூளுமானால் ஒட்டுமொத்த இஸ்லாமிய உலகமும் அதற்கு எதிராக அணி திரளும், சில மேற்கத்தைய நாடுகளின் அடிவருடிகளைத்தவிர.

ஈரானின் இராணுவம் மட்டுமின்றி சிரியா இராணுவம், லெபனானின் ஹிஸ்புல்லாஹ், பாலஸ்தீன போர்வீரர்கள் குறிப்பாக ஹமாஸ், அதன் பின் ஜோர்டான், ஈராக் போன்ற நாடுகளில் உள்ள ஈரான் ஆதரவாளர்கள் என பலர் இஸ்ரேலுக்கு எதிராக அணி திரள்வர்.

இதற்கான காரணம் இஸ்ரேல் பல்லாண்டு காலங்களாக அப்பாவி முஸ்லிம்களின் மீது காட்டுமிராண்டித்தனமான கொடுமைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளது. இதன் காரணமாக அந்நாட்டை வெறுத்து பழிவாங்க உள்ளத்தால் துடித்துக் கொண்டுள்ளனர் பலர்.

இது இஸ்ரேலால் எதிர்த்து நிற்க நினைத்தும் பார்க்க இயலாத அளவிற்கான பலம்.

இதுமட்டுமன்றி சிரியாவின் உள்நாட்டு போர் விவகாரத்தில் ஈரானின் நிலைப்பாட்டை துருக்கி எதிர்த்தாலும் இஸ்ரேலுக்கு எதிராக என்று வரும் போது துருக்கி ஈரானை ஆதரிக்கும். இதை நாம் ஆதாரமில்லாமல் சொல்லவில்லை. இஸ்ரேலை எதிர்க்கும் நிலைப்பாடுகளில் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக ஈரானும் துருக்கியும் பலமுறை இணைந்து செயல்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலும் இதைத் தான் நம்புகிறது. 2012-ல் இஸ்ரேல் காசா பகுதியில் வாழ்ந்த பாலஸ்தீன் முஸ்லிம்களை தாக்கியபோது ஈரான், துருக்கி, கத்தார் ஆகிய நாடுகள் இணைந்து இஸ்ரேலை மண்டியிட வைத்தது வாசகர் களுக்கு நினைவிருக்கலாம்.

https://www.jpost.com/Middle-East/Conflicting-interests-Iran-confronts-Turkey-in-Syrias-Afrin-region-543202

https://www.timesofisrael.com/liveblog_entry/iran-turkey-discuss-uniting-against-israel-and-us/

எனவே, எல்லை ரீதியாகவும் இஸ்ரேல் பலவீனப்பட்டு கிடக்கிறது. இஸ்ரேலுக்கு எதிரான உலக மக்களின் மன உணர்வு காரணமாகவும் இஸ்ரேல் தனிமைப்பட்டு பலவீனப்பட்டு கிடக்கிறது.

இப்போது நம் முன் உள்ள கேள்வி. இஸ்ரேலின் போர் தளவாடங்கள் ஈரானை வெற்றி கொள்ள உதவுமா என்பதே.

**ஈரானா? இஸ்ரேலா?**

இஸ்ரேல் அரபு நாடுகளை தடுத்து நிறுத்தியதன் மூலம் தன்னை பெரிய வல்லமை கொண்ட நாடாக காட்டிக்கொண்டு வந்தாலும் ஈரானை ஒப்பிடுகையில் உண்மையில் அதன் பலம் என்ன என்பதை இப்போது பார்க்கலாம்.

பல்வேறு காரணங்களின் அடிப்படையில் உலக நாடுகளின் இராணுவபலம் வரிசைப் படுத்தப்பட்டுள்ளது. அதில் ஈரான் 13வது இடத்தை பெற்றுள்ளது.

**இஸ்ரேல் 16வது இடத்தை பெற்றுள்ளது.**

இதைத்தவிர்த்து ஈரானுக்கு நேரிடையாக

Army weaponry

| | Iran | Israel |
|---|---|---|
| Tanks | 1,613 | 3,501 |
| Towed artillery | 2,010 | 456 |
| Self-propelled guns | 865 | 620 |
| Multiple rocket systems | 200 | 138 |
| Mortars | 5,000 | 750 |
| Anti-tank weapons | 1,400 | 900 |
| Anti-aircraft weapons | 1,701 | 200 |
| Logistical vehicles | 12,000 | 7,684 |

உதவும் நாடுகளான துருக்கி 9வது இடத்தையும் சிரியா 49வது இடத்தையும் பெற்றுள்ளது.

https://www.globalfirepower.com/countries-listing.asp

இராணுவத்தில் உள்ள மொத்த படைவீரர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பார்த்தால் இஸ்ரேல் ஒரு சுண்டைக்காய். அதில் ஈரான் 17வது இடத்திலும் துருக்கி 18வது இடத்திலும் உள்ளது. இஸ்ரேல் அதில் 89வது இடத்தில் உள்ளது.

ஈரான் தங்கள் இராணுவத்திற்காக வருடந் தோரும் செலவழிக்கும் பணம் 12.3 பில்லியன் அமெரிக்க டாலர்கள். இஸ்ரேல் செலவழிக்கும் பணம் 17.8 பில்லியன் அமெரிக்க டாலர்கள்.

https://www.globalfirepower.com/total-population-by-country.asp

http://armedforces.eu/compare/country_Iran_vs_Israel

ஈரானில் தயாராக உள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கை 5,50,000. இஸ்ரேல் தயாராக வைத்துள்ள இராணுவம் 1,76,500.

கையிருப்பில் ஈரானிடம் 18,00,000 வீரர்கள் உள்ளனர். இஸ்ரேலிடமோ 4,45,000 வீரர்கள் மட்டுமே உள்ளனர்.

இதைத் தவிர்த்து இராணுவத்தில் சேர்ந்து போரிட தயாராக உள்ளவர்கள் ஈரானில் 2,36, 19,215 நபர்கள் உள்ளனர். ஆனால் இஸ்ரேலிடமோ 17,97,960 நபர்கள் மட்டுமே உள்ளனர்.

**கவச வாகனங்கள்**

இராணுவ கவச வாகனங்களை பொறுத்தவரை ஈரானிடம் 2569 டாங்கிகள் உள்ளதாக ஆர்ம்ட் போர்சஸ் இணையதளம் கூறுகிறது. அல்ஜசீரா போன்ற இணையதளங்கள் 1613 கவச வாகங்களே ஈரானிடம் உள்ளதாக கூறுகின்றன.

இழுவை பீரங்கிகள் ஈரானிடம் 2010 உள்ளதாக அல்ஜசீரா கூறுகிறது. இஸ்ரேலிடம் 456 பீரங்கிகளே உள்ளன.



பீரங்கிகளை பொறுத்தவரை 5383 பீரங்கிகள் ஈரானிடம் உள்ளதாகவும் 1522 மட்டுமே இஸ்ரேலிடம் உள்ளதாகவும் ஆர்ம்ட் போர்சஸ் இணையதளம் கூறுகிறது.

ராக்கெட் பீரங்கிகள் ஈரானிடம் 1493 இஸ்ரேலிடம் 48 உள்ளன.

சிறு பீரங்கிகள் ஈரானிடம் 5000 இஸ்ரேலிடம் 750,

இராணுவ கவச வண்டிகளுக்கு எதிரான ஆயுதங்கள் ஈரானிடம்ட 1400, இஸ்ரேலிடம் 900.

விமானங்களுக்கு எதிரான ஆயுதங்கள் ஈரானிடம் 1701, இஸ்ரேலிடம் 200.

எஸ்.பி.ஜி எனப்படும் சுய உந்துதல் துப்பாக்கி (இவை பார்ப்பதற்கு கவச வண்டிகள் போலவே இருக்கும்) ஆயுதங்கள் ஈரான் வசம் 865 இஸ்ரேலிடம் 620,

எனவே, இவை அனைத்திலும் ஈரானே பலம் வாய்ந்ததாக உள்ளது.

### கப்பற் படை

கப்பற்படையை பொறுத்தவரை உலக அளவில் ஈரான் நான்காவது இடத்தில் உள்ள தாக குளோபல் ஃபயர் என்ற இணையதளம் மதிப்பீடு அளித்துள்ளது.

இரஷ்யாவை பின்னுக்கு தள்ளி அந்த இடத்தை ஈரான் பெற்றுள்ளது.

Navy

| | Iran | Israel |
|---|---|---|
| Total naval: | 406 | 74 |
| Aircraftcarriers: | 0 | 0 |
| Destroyers: | 0 | 0 |
| Frigates: | 6 | 0 |
| Corvettes: | 3 | 3 |
| Submarines: | 40 | 5 |

https://www.globalfirepower.com/navy-ships.asp

406 கப்பல்கள் அதில் 40 நீர்மூழ்கி கப்பல்கள் என ஈரானின் கப்பற்படை பிரம்மிப் பூட்டுகிறது.

கப்பற்படையை ஒப்பிடுகையில் இஸ்ரேல் ஒன்றுமே கிடையாது எனும் அளவிற்கு இஸ்ரேல் 65 கப்பல்களுடன் 37வது இடத்தில் உள்ளது என குளோபல் ஃபயர் இணையதளம் கூறுகிறது.

ஆர்ம்ட் போர்சஸ் இணையதளம் இஸ்ரேலிடம் 74 கப்பல்கள் உள்ளதாகவும் அதில் 5 நீர்மூழ்கி கப்பல்கள் என கூறுகிறது.

இத்துடன் துருக்கியிடம் 194 கப்பல்கள் உள்ளன. அது கப்பற்படையில் 12வது இடத்தில் உள்ளது.

சிரியா 56 கப்பல்களுடன் 48வது இடத்தில் உள்ளது.

### விமானப்படை

விமானப்படையை பொறுத்தவரை 883 விமானங்களுடன் ஈரான் முன்னிலை வகிக்க 772 விமானங்களுடன் அதிலும் பின் தங்கி உள்ளது

Air Forces

| | Iran | Israel |
|---|---|---|
| Total aircraft: | 883 | 772 |
| Fighter aircraft: | 151 | 52 |
| Multirole aircraf: | 88 | 352 |
| Attack aircraft: | 49 | 25 |

இஸ்ரேல். ஈரான் 151 போர் விமானங்கள் இஸ்ரேல் 52 போர் விமாங்கள்,ஈரான் 49 தாக்குதல் விமாங்கள் இஸ்ரேல் 25 தாக்குதல் விமாங்கள், ஈரான் 324 ஹெலிகாப்டர்கள் இஸ்ரேல் 177 ஹெலிகாப்டர்கள் என ஈரான் இஸ்ரேலை பின்னுக்கு தள்ளி ஈரான் முன்னிலை வகிப்பதாக ஆர்ம்ட் ஃபோர்சஸ் இணையதளம் கூறுகிறது.

இதற்கு மாற்றமாக குளோபல் ஃபயர் இணையதளம் இதில் மட்டும் இஸ்ரேல் 596 விமானங்களுடன் 18வது இடத்திலும் 505 விமானங்களுடன் ஈரான் 24 இடத்தை வகிப்பதாக கூறுகிறது.

### ஈரான்

| Total Aircraft Strength | Fighter Aircraft | Attack Aircraft | Transport Aircraft |
|---|---|---|---|
| 505 | 150 | 158 | 192 |
| Trainer Aircraft | Total Helicopter Strength | Attack Helicopters | |
| 101 | 145 | 12 | |

### இஸ்ரேல்

| Total Aircraft Strength | Fighter Aircraft | Attack Aircraft | Transport Aircraft |
|---|---|---|---|
| 596 | 252 | 252 | 95 |
| Trainer Aircraft | Total Helicopter Strength | Attack Helicopters | |
| 152 | 147 | 48 | |

ஆனால் ஈரானுக்கு துணை வரக்கூடிய நாடான துருக்கியோ இதில் 10வது இடத்தில் உள்ளது. அது மொத்தம் 1056 விமானங்களை தன் வசம் வைத்துள்ளது.

| Total Aircraft Strength | Fighter Aircraft | Attack Aircraft | Transport Aircraft |
|---|---|---|---|
| 1,056 | 207 | 207 | 445 |
| Trainer Aircraft | Total Helicopter Strength | Attack Helicopters | |
| 287 | 475 | 54 | |

சிரியா 460 விமானங்களுடன் இதில் 30வது இடத்தில் உள்ளது. ஆக இதிலும் இஸ்ரேலுக்கு பின்னடைவே.

### ஏவுகணை பலம்

இவற்றையெல்லாம் தாண்டி இஸ்ரேலை பயமுறுத்துவது ஈரானின் ஏவுகணை தொழில்



நுட்பமும் அதன் கைவசம் உள்ள ஏவுகணைகளும் தான்.

கடந்த மே மாதம் 10ம் தேதி கோலன் ஹைட்ஸ் என்ற இடத்தை தாக்க ஈரான் ஏவிய 20 ஏவுகணைகளில் 4 மட்டுமே இஸ்ரேலின் பாதுகாப்பு கவசத்தால் இடைமறிக்க முடிந்தது. மற்றவை இலக்கை துல்லியமாக தாக்கின. இது இஸ்ரேலுக்கும் அமெரிக்காவிற்கும் ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் தந்துள்ளது.

எப்படி ஈரானின் ஏவுகணைகள் தங்களின் ஐயர்ன் டோம் சிஸ்டத்தை ஏமாற்றி இலக்கை தாக்குகின்றன என்ற ஆய்வில் தற்போது இஸ்ரேல் ஈடுபட்டுள்ளதாக தெரிகிறது.

ஹமாசுடன் நடந்த போரின் போதே ஹமாஸ் போராளிகள் ஏவிய அல் ஃப்பஜ்ர் ஏவுகணைகள் பல இஸ்ரேலை தாக்கி பேராபத்தை உண்டு பண்ணின. அப்போதே அவர்கள் ஹமாசுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் போட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டார்கள்.

ஏவுகணை தொழில் நுட்பம் மற்றும் எண்ணிக்கையின் அடிப்படையில் ஈரானுக்கு 4வது இடமும் துருக்கிக்கு 11வது இடமும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இஸ்ரேல் 27வது இடத்தில் உள்ளது.

ஈரானிடம் 1000 மேற்பட்ட நீண்ட தூர ஏவுகணைகள் உள்ளன. இவை வளைகுடா நாடுகளின் அனைத்து பகுதிகளையும் தாக்கி அழிக்கும் வல்லமை படைத்தவை. அவற்றில் சில 300 கி.மீ சென்று தாக்கும் குறுகிய தூர ஏவுகணைகளும் உண்டு. 2500 கி.மீ. தூரம் சென்று தாக்கக்கூடிய நீண்ட தூர ஏவுகணைகளும் உண்டு. ஈரானின் ஏவுகணை சக்தி உலக நாடுகளை அதன் பக்கம் திரும்பி பார்க்க வைத்துள்ளது.

ஷஹாப் 1 (Shahab-1), ஷஹாப் 2 (Shahab-2), தொண்டர் 69 (Tondar-69 (CSS-8)) போன்றவை இவற்றில் சில.

இவை அனைத்தும் புரட்சிகர காவலர்களிடம் (Revolutionary Guards) அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளன.

ஷஹாப் 3 ஏவுகணை 1000 கி.மீ. தூரம் சென்று தாக்கும் வல்லமை படைத்தது. கத்ர் 1 ஏவுகணை1600 கி.மீ. தூரம் சென்று தாக்கும் வல்லமை படைத்தது. ஷஹாப் 3 ஏவுகணை 2400 கி.மீ. தூரம் சென்று தாக்கக்கூடியது. இதற்கு ஸஜ்ஜில் 2 என்ற பெயரும் உண்டு. இது 1000 கிலோ பாரத்தை தூக்கி செல்லும் வல்லமை கொண்டது. இதன் மூலம் இஸ்ரேலும் கிழக்கு ஐரோப்பாவின் பல பகுதிகளும் ஈரானின் தாக்குதல் எல்லைக்குள் தான் உள்ளன.

இதைத்தாண்டி இந்த ஏவுகணைகளை ஈரான் இஸ்ரேலுக்கு அருகாமையில் இருந்து தன்னுடைய இராணுவ தளங்களில் இருந்து ஏவும் வல்லமையையும் கொண்டுள்ளது.

ஈரான் 10000 கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் ஏழே நிமிடத்தில் செலுத்தும் ஆற்றல் பெற்றுள்ளது. ஒரு நிமிடத்தில் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க இராணுவத்தளங்களை தாக்கி அழிக்கும் வல்லமை பெற்றுள்ளது.



https://www.youtube.com/watch?v=fY2suWVFKA4

https://abcnews.go.com/Blotter/iran-hit-35-us-bases-minutes/story?id=16716804

https://www.westernjournal.com/ct/iran-u-s-military-missiles/

இதன் காரணமாகவே ஈரானின் மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள அமெரிக்கா தயங்கி வருகிறது. தொட்டால் நாம் கெட்டோம் என்பது அமெரிக்காவிற்கு நன்றாகவே தெரியும்.

## தகவல் தொழில்நுட்பம்

தகவல் தொழில்நுட்பத்திலும் ஈரான் உலக நாடுகளை விஞ்சி வருகிறது. இது குறித்து வைகறை வெளிச்சம் பெப்ரவரி மார்ச் 2012 இதழில் தெளிவாக எழுதி இருக்கிறோம்.

ஈரான் அணு ஆற்றலை பெற்றபோது அதனை அழிக்க ஸ்டக்ஸ்நெட் வைரஸை (w32.stuxnet) அமெரிக்கா ஏவி ஈரானின் அணு உலைகள் வெடிக்கும் படி சதி செய்தது.

ஆனால் ஈரான் அதிலிருந்து வெளி வந்தது மட்டுமின்றி பதிலடியாக அமெரிக்காவை தாக்கும்படியான ஒரு வைரஸ் புரோகிராமை தயார் செய்து அனுப்பியது. அதன் பெயர் Backdoor.Sykipot. அதில் அமெரிக்கா வீழ்ந்தது. அதன் மூலம் அமெரிக்காவின் ஆளில்லா விமானத்தை அப்படியே கைப்பற்றியது. அதன் பெயர் RQ170.

இதன் மூலம் சைபர் வார் எனப்படும் கணினி போரிலும் தன்னுடைய வல்லமையை நிரூபித்தது ஈரான்.

அந்நேரத்தில் தனக்கென்று சொந்தமாக ஒரு ஆபரேடிங் சிஸ்டத்தையும் உருவாக்கிக் கொண்டது ஈரான். இதன் மூலம் மேற்கத்திய நாடுகளின் எந்தவிதமான தேவைகளுக்கு அப்பாற் சென்றது ஈரான். இதில் பல தொழில் நுட்பங்களை அது ஹமாசுக்கும் சொல்லிக் கொடுத்தது.

இதன் காரணமாகவே பாலஸ்தீனம் தாக்கப் பட்டபோதெல்லாம் ஹமாஸ் இஸ்ரேலின் அதிகாரபூர்வ அரசு இணையங்களை ஊடுறுவி அவர்களை குழப்பும் செய்திகளை வெளியிட முடிந்தது. அரசு தொலைக்காட்சிகளுக்குள் தங்களுடைய செய்திகளை நுழைக்க முடிந்தது. இஸ்ரேலியர்களுக்கு குறுஞ்செய்திகளை அரசு செய்தியாக அவர்களுடைய இணையத்தில் இருந்தே அனுப்பி குழப்ப முடிந்தது.

இஸ்ரேலின் சாலை சிக்னல் விளக்குகளை தங்கள் கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வந்து விபத்துகளை ஏற்படுத்த முடிந்தது.

எனவே, தகவல் தொழில் நுட்பத்திலும் ஈரான் வல்லமை பெற்ற நாடு என்பதே உண்மை.

## அணு ஆயுத வல்லமை

அணு ஆயுதம் ஒன்று தான் இப்போதைக்கு இஸ்ரேலிடம் இருந்து ஈரானிடம் இல்லாத பலமாக கூறப்படுகிறது. கிட்டத்தட்ட 200 அணு ஆயுதங்கள் இஸ்ரேலிடம் உள்ளதாக கூறப்படுகிறது. ஈரான் அணு ஆயுதத்தை தயாரிக்காததற்கான முக்கிய காரணம் ஒட்டுமொத்தமாக மனித குலத்தை அழிக்கும் கருவிகளை தயாரிக்கக் கூடாது என ஈரானின் உலமாக்கள் கூறியதே.

ஆனால் அதன் பின்னர் இந்த வல்லமையை வைத்துக்கொண்டு இஸ்ரேலும் மேற்கத்திய நாடுகளும் விளையாடும் விளையாட்டுகளை கண்டுகொண்ட பின்னர் அதற்கான அனுமதியை ஈரானின் உலமாக்கள் தந்துவிட்டதாகவே தெரிகிறது. இதன் காரணமாகவே கடந்த 2012 ம் ஆண்டு அஹமது நஜ்தி அவர்களின் ஆட்சியில் யுரேனியம் செறிவூட்டப்பட்டது.

மைய விலக்கிகள் ஈரானின் சொந்த தயாரிப்பில் தயாரிக்கப்பட்டன. எனவே, ஈரான் அணு ஆயுத ஆற்றலையும் பெற்று விட்ட தாகவே தெரிகிறது. ஆனால், அதனை வெளிப் படுத்தாமல் மறைத்து வைத்துள்ளது என போர் வல்லுனர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மேற்சொன்ன விவரங்களின் அடிப்படை யில் ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் போர் ஒன்று மூளுமானால், இஸ்ரேல் என்ற தேசமே உலக வரைபடத்தில் இருந்து காணமற் போய்விடும் என்பதே ஊர் அறிந்த உண்மையாக உள்ளது.

**-அபூ அஃப்ரஹ்**




28-04-2018 அன்று சென்னை, புளியந்தோப்பு, மோதிலால் தெருவில் நடைபெற்ற **தலித்-கிறிஸ்தவர்-இஸ்லாமியர் மீனவர்கள்** பாதுகாப்புப் பொதுக்கூட்டத்தில் வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு.குலாம் முஹம்மது சிறப்புரை யாற்றினார்.



# பாலியல் வன்கொடுமை செய்வதற்கு பா.ஜ. கட்சியினருக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளதா?

**சின்மயானந்தா (வாஜ்பாய் அரசின் உள்துறை இணை அமைச்சர்**

உன்னாவ் மற்றும் கதுவா கூட்டு பாலியல் வன்கொடுமைகள் பற்றிய அச்சமூட்டும், காட்டு மிராண்டித்தனமான விவரங்களை நாடு பார்த்துக் கொண்டிருக்கும்போதே, இவற்றை விட எந்த விதத்திலும் குறைந்து போகாத மற்றொரு பாலியல் வன்கொடுமை நிகழ்ச்சியில் பா.ஜ.கட்சியின் ஒரு முக்கிய தலைவர் பங்கெடுத்துக் கொண்ட செய்தியும், விவரங்களும் ஏறக்குறைய கண்டுகொள்ளப்படாமலேயே போயின.

பா.ஜ.கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், முன்னாள் மத்திய அமைச்சருமான சாமி சின்மயானந்தாவுக்கு எதிரான ஏழு வயது பெண் குழந்தையை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு உத்தரப்பிரதேச அரசு சத்தம் போடாமல் உத்தரவிட்டிருந்தது. ஷாஜஹான்பூரில் உள்ள சாமி சின்மயானந்தாவின் இல்லத்தில் முதல்வர் யோகி ஆதித்தியானந்த் அவரை சந்தித்ததற்குப் பிறகு கடந்த மார்ச் மாதம் 6 ஆம் தேதி இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. அவர்கள் இருவரும் மிகவும் நெருக்கமானவர்கள் என்று கூறப்படுகிறது. 2018 மார்ச் 9 அன்று ஷாஜஹான்பூர் மாவட்ட நிர்வாகம் இந்த வழக்கைத் திரும்பப் பெறுவதற்கான மனுவை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது. இதற்கு அரசு எந்த விளக்கமும் அளிக்கவில்லை.

சாமி சின்மயானந்தாவைக் கைது செய்ய பிடி ஆணையை உடனடியாக வழங்கவேண்டும் என்று பாதிக்கப்பட்ட குழந்தையின் பெற்றோர் இந்திய குடியரசுத் தலைவர், பிரதமர், உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி மற்றும் மாவட்ட நீதிபதி ஆகியோருக்குக் கடிதம் எழுதியிருந்தனர்.

அரித்துவாராவில் உள்ள சாமியின் ஆசிரமத்தில் தான் திரும்பத் திரும்பப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதாக அந்த சிறுமி கூறியதன் பிறகு 2011 நவம்பரில் அவர் மீது ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. சன்னியாசம் பெற்றுக் கொள்வதற்காக தானே ஆசிரமத்திற்கு தனியாக நேரடியாக சென்றதாக அந்தப் பெண் கூறினாள். ஆனால், சாமி அவளை அடைத்துவைத்துவிட்டு

அவளை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கினார்.

அவளது பெற்றோரை சந்திக்கவும் அப்போது அவள் அனுமதிக்கப்பட வில்லை. நடந்த எதையும் எவரிடமாவது கூறினால், அவளது பெற்றோர்கள் கொல்லப்பட்டு விடுவார்கள் என்று அந்தப் பெண் அச்சுறுத்தப்பட்டாள். ஒரு வழியாக அவள் தப்பித்து வீட்டுக்கு வந்த பிறகு அவளது தந்தை அந்த முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்தார்.

சின்மயானந்தா உடனடியாக உயர் நீதிமன்றத்திற்குச் சென்றதால், அவர் கைது செய்யப்படுவதற்கு தடை விதிக்கப்பட்டது. அப்போதிலிருந்து அந்த வழக்கு நிலுவையில் உள்ளது. சின்மயானந்தா பா.ஜ. கட்சியின் ஒரு முக்கியமான உறுப்பினர் ஆவார். மூன்று முறை நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள அவர் அடல் பிகாரி வாஜ்பேயி அரசில் உள்துறை இணை அமைச்சராகவும் இருந்தார். சாட்சி - மகராஜ், (பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர்)

உன்னாவ் தொகுதியின் தற்போதைய பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினராகிய சாட்சி மகராஜ் என்னும் மற்றொரு பா.ஜ.க. தலைவர் அனைத்துத் தவறான காரணங்களுக்காகவும் தான் எப்போதுமே செய்திகளில் இடம் பெற்றிருக்க வேண்டும் என்ற தணியாத தாகம் கொண்டவர்.

கடந்த காலத்தில் பாலியல் வன்கொடுமை செய்ததாக அவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அவரும் அவரது மைத்துனர்களாகிய பாதாம் சிங்கும், ஷிவ்ராம் ராமும் சேர்ந்து கூட்டாக தன்னை பாலியல் வன்கொடுமை செய்ததாக ஏடா நகர கல்லூரி ஒன்றின் முதல்வராக இருந்த ஒருவர் பதிவு செய்த புகாரின் பேரில் 2000ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அவர் மீது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

ஏடாவில் இருந்து ஆக்ராவுக்கு தனது சகப் பணியாளர் ஒருவருடன் ஜீப்பில் சென்று கொண்டிருந்தபோது தாங்கள் தாக்கப்பட்டதாக அவர்கள் கூறினர். அந்த பெண்ணின் உரிமம் பெற்ற துப்பாக்கியையும், ஜீப்பையும் குற்றம் சாட்டப் பட்டவர் எடுத்துக் கொண்டு சென்று விட்டதாகவும் கூறப்பட்டது. சாட்சி மகராஜின் ஆசிரமத்தில் நான்கு ஆண்டுகளாக அந்தப் பெண் வசித்து வருவதாக காவல் துறையினர் கூறுகின்றனர். தன்னுடன் பணிபுரியும் ஒருவரை மணந்து கொள்ள அவர் விருப்பம் தெரிவித்தபோது, அதற்கு மகராஜ் மறுப்பு தெரிவித்த நேரத்தில் அந்த பாலியல் வன்கொடுமை நடந்துள்ளது. சாட்சி மகராஜ் விசாரணைக் கைதியாக திகார் சிறையில் ஒரு மாத காலம் இருந்தார். போதிய சாட்சியங்கள் இல்லை என்று 2001 இல் அவர் விடுவிக்கப்பட்டார்.

### பாலியல் வன்கொடுமை குற்றங்களில் முதலிடம்

தங்களை ஒரு வித்தியாசமான கட்சியினர் என்று பா.ஜ.கட்சியினர் பெருமை பாராட்டிக் கொள்வார்கள். அவர்களின் தலைவர்கள் பலரும் ஈனத்தனமான குற்றங்களைச் செய்தவர்கள் என்பதால், ஒரு வழியில் அது உண்மைதான். 2007 இல் வெளியிடப்பட்ட, நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல் வேட்பாளர்களின் பிரமாணபத்திர புள்ளி விவரங்களை ஆய்வு செய்த மக்களாட்சி சீர்திருத்தத்திற்கான சங்கம், பாலியல் வன்கொடுமை குற்றம் சாட்டப்பட்டவர்களின் பட்டி யலில் பா.ஜ.கட்சியினர் முதலிடத்தினைப் பெற்றிருப்ப தாகக் கூறுகிறது.

பதவியில் உள்ள 4896 சட்டமன்ற வேட்பாளர்களில் 4852 வேட்பாளர்களின் (774 நாடாளு மன்ற, 4078 சட்டமன்ற வேட்பாளர்களின்) பிரமாண பத்திர விவரங்களை அது பரிசீலனை செய்தது.

அவர்களில் “1581 நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப் பினர்கள் மீது (33 சதவிகிதம்) குற்றவியல் வழக்குகள் இருந்தன. பெண்களைத் தாக்குவது, பெண்களை கட்டாயப்படுத்துவது, பெண்மையை இழிவு படுத்துவது, பெண்களைக் கடத்துவது, திருமணம் செய்து கொள்ள வற்புறுத்துவது, பாலியல் வன்கொடுமை செய்வது, விபச்சாரம் செய்வதற்காக பெண் குழந்தைகளை விலைக்கு வாங்குவது, பெண்களை இழிவுபடுத்தும் வகையில் பேசுவது, சைகை காட்டுவது அல்லது செயல்படுவது போன்ற பெண்களுக்கு எதிரான குற்றங்களை 51 நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் இழைத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது” என்று அந்த ஆய்வு தெரிவிக்கிறது. “இவற்றில் பா.ஜ. கட்சி உறுப்பினர்கள் மீது அதிக எண்ணிக்கையிலான வழக்குகள் (14) இருந்தன.

தொடர்ந்து சிவசேனா கட்சி 7 உறுப்பினர்கள் மீதும், திரிணாமூல் காங்கிரசின் 6 உறுப்பினர்கள் மீதும் வழக்குகள் இருந்தன" என்று இந்த சங்கத்தை நிறுவியவரும், உறுப்பின ருமான பேராசிரியர் ஜக்தீப் சோக்கர் கூறுகிறார்.

பெண்கள்மீது பாலியல் வன்கொடுமைக் குற்றம் சாட்டப்பட்டவர்களும் கூட சட்டம் இயற்றும் சட்ட மன்றங்களின் உறுப்பினர்களாக வருவதற்கு இயல்வது, மற்றவர்களுக்கும் அது போன்ற குற்றங்களை இழைப்பதற்கான துணிவைத் தருகின்றன. உண்மையிலேயே இது மிகவும் மோசமானதாகும். நமது அரசியல் நடைமுறையில் மிகப் பெரிய தவறு எதுவோ இருக்கிறது என்று அவர் கூறினார்.

## விஜய்ஜாலி (டில்லி பா.ஜ.க. தலைவர்)

பாலியல் வன்கொடுமை குற்றம் சாட்டப் பட்ட பல்வேறு பா.ஜ.க. தலைவர்கள் மீதான வழக்குகள் பற்றிய விவரங்கள் சமூக ஊடகங் களில் வேண்டிய அளவுக்கு முழுமையாக உள்ளன. விஜய் ஜாலி என்ற டில்லியைச் சேர்ந்த பா.ஜ.க. தலைவர் கடந்த பிப்ரவரி மாதம் பாலியல் வன்கொடுமைக் குற்றம் இழைத்த தாகக் குற்றம் சாட்டப்பட்டு, கைது செய்யப் பட்டுள்ளார். அவரது பாலியல் வன்கொடு மைக்கு ஆளான அவரது கட்சியைச் சேர்ந்த பெண், கட்சி கூட்டத்திற்காக குருகிராமுக்கு அவருடன் சென்ற போது அப்னா நகர் என்ற இடத்தில் இருந்த தங்கும் விடுதியில் மென் பானத்தில் மயக்க மருந்து கலந்து தந்து தன்னை பாலியல் வன்கொடுமை செய்ததாக புகார் தெரிவித்துள்ளார். ஆனால் இந்த குற்றச்சாட்டு அரசியல் நோக்கம் கொண்டது என்றும், தன்னிடம் இருந்து பணம் பறிக்கும் முயற்சியில் அந்தப் பெண் தோல்வி அடைந்துவிட்டதால், தன் மீது பாலியல் குற்றச்சாட்டு கூறுவதாக அவர் கூறினார்.

குருகிராம் சட்டமன்ற உறுப்பினர் உமேஷ் அகர்வால் மற்றும் அவரது இரண்டு சகாக்கள் மீதும் 2015ஆம் ஆண்டு ஜனவரியில் புதுடில்லி அரிநகர் காவல் நிலையத்தில் அளித்த பாலியல் வன்கொடுமை புகாரின் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டுள் ளனர். தவறான அறிக்கை பதிவு செய்ததற்காக அந்தப் பெண்ணே பின்னர் கைது செய்யப்பட்ட போதிலும், பின்னர் அவர் பிணையில் வெளியே வந்து விட்டார். குருகிராம் பெருநகர உதவி மேயர் பரமேந்திர கட்டாரியா, இரு குழந்தை களுக்குத் தாயான ஒரு 36 வயது பெண்ணுக்கு பாலியல் வன் கொடுமை இழைத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

## மத்திய பிரதேஷ், குஜராத் ப.ஜ.க. தலைவர்களின் மீது பாலியல் குற்ற வழக்குகள்

இந்த மாதிரி வழக்குகள் எல்லாம் பா.ஜ.க. ஆட்சி செய்யும் மாநிலங்களிலேயோ அல்லது பா.ஜ.க. பலம் மிகுந்த கட்சியாக இருக்கும் மாநிலங்களிலோ அதிகமாக நடை பெறுவது மிகுந்த ஆர்வத்தை அளிக்கும் ஒரு செய்தியாக இருக்கிறது. பெரும்பாலான இத்தகைய வழக்குகள் மத்தியப் பிரதேசம் மற்றும் குஜராத் மாநிலங்களில் இருந்து அறிவிக் கப்பட்டவையாக இருக்கின்றன. 2017ஆம் ஆண்டு பிப்ரவரியில் குச்சில் என்ற ஊரில் 24 வயது பெண் ஒருவர் மீது, சாந்திலால் சோலங்கியும் (முக்கிய குற்றவாளி), கோவிந்த பருமலாணி, அஜித் ராம்வாணி, பசந்த் பனுஷால் ஆகிய நான்கு பா.ஜ.க. தலைவர்கள் உள்ளிட்ட 10 பேர் கொண்ட கும்பல் ஒன்று பாலியல் வன்கொடுமை இழைத்துள்ளது. அவர்கள் அனைவரும் கட்சியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

2016ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் வதோத ராவைச் சேர்ந்த ஜெயேஷ் படேல் என்ற பா.ஜ.க. தலைவர், அவர் தலைவராக இருக்கும் செவிலியர் பயிற்சிக் கல்லூரியில் பயிலும் 21 வயது மாணவிக்கு பாலியல் வன்கொடுமை இழைத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவர் காணா மல் தலை மறைவாக ஆகிவிட்டார். கட்சியில் இருந்து அவர் இடைநீக்கம் செய்யப்பட் டுள்ளார். அவரது குற்றத்துக்கு உடந்தையாக இருந்ததாக தங்கும் விடுதி காப்பாளரான பாவனா படேல் கைது செய்யப்பட்டுள்ளார்.

2016 மே மாதத்தில் குஜராத்தைச் சேர்ந்த மற்றொரு பா.ஜ.க. தலைவர் அசோன் மக்வானா கோவாவில் இருந்து அகமதாபாத் செல்லும் விமான பயணத் தின் போது, 13 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக குற்றம் சாட்டப் பட்டுள்ளார். தனியாக பயணம் செய்த அந்தப் சிறுமி அவரது இருக்கைக்கு அருகே

இருந்த இருக்கையில் பயணம் செய்துள்ளார். காவல் துறை அந்த தலைவரின் பெயரை வெளியிட வில்லை என்ற போதிலும், விமான நிறுவனம் அதனை வெளியிட்டுள்ளது.

**உதவி கேட்டு வருபவர்களிடம் அத்துமீறல்**

மத்தியப் பிரதேசத்தில் உள்ள பா.ஜ.க. தலைவர் களுக்கு எதிரான பாலியல் வன் கொடுமை வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும், உதவி கேட்டு அவர்களை அணுகிய ஏழைகள் ஆவர். அண்மையில், அமைச்சர் தகுதி யில் இருக்கும் சிலை கதை குழுவின் உதவித் தலைவர் பதவியில் உள்ள ராஜேந்தர் நாம்தியோ என்ற ஒரு மூத்த பா.ஜ.க, தலைவர், பிப்ரவரி 19 அன்று அவர் மூலம் போபாலில் வேலை ஒன்றைப் பெறுவதற்காக அவரை சந்திக்க வந்திருந்த ஆசிட் தாக்குதலுக்கு உள்ளான ஒரு பெண்ணுக்கு பாலியல் வன்கொடுமை இழைத் துள்ளார். அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட அவர் கட்சியில் இருந்தும் வெளியேற்றப்பட் டுள்ளார்.

மொரீனா மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு மூத்த பா.ஜ.க. தலைவரும் அவரது இரண்டு சகாக்களும் 2017ஆம் ஆண்டு மார்ச் 1 அன்று, வறுமைக் கோட்டுக்கும் கீழே இருப்பவர் களுக்கான அடையாள அட்டை வாங்குவதற் காக உதவி கேட்டு வந்திருந்த ஒரு தலித் பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்த தாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

ஒரு உள்ளூர் பா.ஜ.க. தலைவர் மீது பாலியல் தொல்லை தந்தது பற்றிய புகார் ஒன்றை பெடுலைச்சேர்ந்த பழங்குடியினப் பெண் ஒருவர் தெரிவித்துள்ளார். தன்னை அந்த உள்ளூர் தலைவரும் மேலும் அய்ந்து பேர்களும் சேர்ந்து பாலியல் வன்கொடுமை இழைத்துள்ளனர் என்று அந்தப் பெண் புகார் அளித்துள்ளார். தான் அளித்த புகாரைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும்படி அந்தப் பெண்ணை வற்புறுத்து வதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர்.

மத்தியப் பிரதேசத்தில் 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சட்டமன்றத் தேர்தல்கள் நடை பெறுவதற்கு சில நாட்களுக்கு முன்பு, மூத்த பா.ஜ.க. தலைவரும், நிதி அமைச்சருமான ராகவ்ஜி அவரது வீட்டு வேலைக் காரியை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கியதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அவரும் பாதிக் கப்பட்ட பெண்ணும் சேர்ந்திருக்கும் ஒரு குறுந்தகடு வலம் வந்து கொண்டிருந்தது. ராகவ்ஜி கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப் பப்பட்டார்.

கட்சியின் உள்ளூர் சிறுபான்மை பிரிவின் தலைவரும், மற்றொரு மூத்த பா.ஜ.க. தலைவரு மான ஹமித் சத்தார் என்பவரும், அவருடன் மேலும் அய்ந்து பேர் களும் அசாமில் இருந்து வயதுக்கு வராத மைனர் பெண் ஒருத்தியைக் கடத்தி வந்து பாலியல் வன்கொடுமை இழைத் ததற்காக 2014 ஆகஸ்டில் கைது செய்யப் பட்டனர்.

பா.ஜ.க. தலைவர்கள் மீது பாலியல் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ள பா.ஜ. கட்சி யால் ஆளப்படும் மற் றொரு மாநிலம் மகா ராஷ்டிராவாகும். பேருந்து ஒன்றில் வைத்து 19 வயது பெண்ணுக்கு பாலியல் வன்கொடுமை இழைத்த குற்றத்திற்காக கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில் மூத்த பா.ஜ.க. தலைவர் ரவீந்திர பவந்தாடே என்பவர் கைது செய்யப்பட்டார்.

ஒரு வேலை பெறுவதற்காக அவரது உதவியை அந்தப் பெண் நாடியுள்ளார். கண் காணிப்பு கேமரா பதிவு பெற்ற இந்த நிகழ்ச்சி சமூக ஊடகங்களில் வெளி வந்த பிறகு அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. கட்சியின் மாநில துணைத் தலைவரும், பத்திரிகை செய்தியாளருமான மது சவான் என்பவர் மீது, திருமணம் செய்து கொள்வதாக வாக்களித்து விட்டு ஒரு கட்சி சேவகியை பாலியல் வன் கொடுமை இழைத்ததாக குற்றம் சாட்டப் பட்டது.

மும்பை பாஷ்மீரா பகுதியில், மண விலக்கு வழக்கில் உதவி வழங்குவதாக வாக்களித்து விட்டு, 44 வயது பெண்ணை பாலியல் வன் கொடுமைக்கும் இயற்கைக்கு மாறான உறவுக்கும் உள்ளாக்கிய பா.ஜ.க. மாநகராட்சி மன்ற உறுப்பினர் அனில் போஸ்லே மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சிக்மகளூர் சட்டமன்ற உறுப்பினராக அப்போதிருந்த பா.ஜ.க. தலைவர் டி.என். ஜீவ்ராஜ் என்பவர் மீது, 23 வயது பெண் ஒருவர் மீது அவர் பாலியல் வன்கொடுமை இழைத்த தாகக் குற்றம் சாட்டப்பட்டு இருந்தது.

*தன்னிடம் இருந்து பணம் பறிக்கவே இந்தப் புகார் அளிக்கப்பட் டுள்ளதாக அவர் கூறினார். 2010ஆம் ஆண்டு மே மாதத்தில், அப்போது உணவு மற்றும் வினியோகத் துறை அமைச்சராக இருந்த எச்.ஹாலப்பா என்பவர் மீது, அவரது நண்பர் ஒருவரது மனைவி மீது அவர் பாலியல் வன்கொடுமை இழைத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார். அரசியல் உள்நோக்கம் கொண்டு தன் மீது புனையப்பட்ட வழக்கு இது என்று ஹாலப் பாவும் கூறினார்.*

*பா.ஜ.க. ஆளும் சத்தீஷ்கர் மாநிலத்தில், பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ண மூர்த்தி பந்தி என்பவர் மீது 2013ஆம் ஆண்டு நவம்பரில் பாலியல் வன் கொடுமை குற்றச் சாட்டு ஒன்று பதிவு செய்யப்பட்டது. பாதிக்கப் பட்ட பெண்ணின் எரிந்து போன சடலம், பிலாஸ்பூரில் உள்ள அவரது நெருங்கிய நண்பர் ஒருவரின் வீட்டில் இருந்து பின்னர் கண்டெடுக் கப்பட்டது.*


*2016 ஆம் ஆண்டில் காங்கிரசு கட்சியில் இருந்து பா.ஜ.கட்சிக்கு மாறிய ஹரக் சிங் ரவாட் என்னும் அரசியல் தலைவர் ஒருவர் மீது, 2016ஆம் ஆண்டு ஜூலை 30 அன்று புதுடில்லி சப்தர்ஜங் காவல் நிலையத்தில் ஒரு 32 வயது பெண் அளித்த புகாரின் அடிப் படையில் பாலியல் வன்கொடுமை வழக்கு பதிவு செய்யப்பட்டது. டேராடன் கூட்டுறவு வங்கி ஒன்றின் தலைவராக இருந்த ஒரு முன்னணி பா.ஜ.க. தலைவரான பிரமோத் குப்தா என்பவரும், அவரது சகாவும், 2008ஆம் ஆண்டு ஏப்ரலில் இழைத்த பாலியல் வன் கொடுமை குற்றத்துக்காக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டனர்.*

*அதிர்ச்சி அளிக்கும் ஒரு வழக்கில், பஞ்சாபைச் சேர்ந்த பா.ஜ.க. தலைவர் ஒருவரான அசோக் தனேஜா தனது சொந்த பெண்ணையே எட்டு ஆண்டு காலமாக பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கிய குற்றத்திற்காக 2009ஆம் ஆண்டு மார்ச் 27 அன்று கைது செய்யப்பட்டார்.*

*நரேந்திர மோடியின் அமைச்சரவையில் புதியதாக நியமிக்கப்பட்ட அமைச்சரான நிஹல் சந்தா என்பவரின் பெயர் 2011 ஆம் ஆண்டு கற்பழிப்பு புகார் ஒன்றில் இடம் பெற்றிருந்து, ஜெய்பூர் நீதிமன்றம் ஒன்று மற்ற 17 பேருடன் அவருக்கும் சேர்த்து சம்மன் அனுப்பியிருந்தது. ஊடகங்கள் பெரிய அளவில் கூச்சல் போட்டுப் பார்த்தும், அரசு அது பற்றி எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.*

*இத்தகைய வழக்குகளில் மிகமிகக் குறைந்த எண் ணிக்கையிலான வழக்குகள்தான் இறுதி யாக தண்டிக்கப் படும் நிலையை எட்டுகின்றன என்பதை குற்றம் இழைப்பவர்கள் அறிந்து இருப்பதாலேயே, இத்தகைய குற்றங்கள் ஏராளமாக நடப்பதாக நோக்குநர்கள் கருது கின்றனர். அரசியல் அதிகாரத்துடன் கற்பழிப் பதற்கான உரிமமும் சேர்ந்து வருவது போலவே தோன்றுகிறது. பெரும்பாலான புகார்கள் போதிய சாட்சியங்கள் இல்லை என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டு விடுகின்றன அல்லது நீண்ட கால நீதிமன்ற நடைமுறைகளில் மக்களின் கவனத்தை இழக்கச் செய்து விடுகின்றன.*

*நன்றி: "ஃப்ரண்ட் லைன்" 11-05-2018*
*தமிழில்: த.க.பாலகிருட்டிணன்*
*நன்றி - விடுதலை, 19,21-05-2018*





# கவிக்கோ ஒரு போராளி!

சங்க காலத்திற்குப் பிறகு தமிழுக்கு ஒரு பொற்காலம், "கவிக்கோ காலம்" என அவருடைய சென்ற வருட நினைவேந்தல் நிகழ்ச்சியில், பல தமிழறிஞர்கள் பேசியது அப்படியே தமிழ்கூறும் நல்லுலகில் சுழன்று கொண்டே வருகின்றது.

கவிக்கோவின் கவிதை வரிகளில் சொக்கிக் கிடந்தவர்கள் நிச்சயமாக அவர் ஒரு போராளி என்பதை அறிந்திருப்பார்கள்.

இலங்கையின் மோடி, ராஜபக்சே, தமிழர் களை இனப்படுகொலை செய்து கொண்டிருந்த போது தன்னால் இயன்றதையெல்லாம் செய்து கொண்டிருந்தார்கள் கவிக்கோ அவர்கள். அன்றைய சூழலில் மரம் வளர்ப்போம் என்றொரு கோஷம் தமிழகம் முழுவதும் வைக்கப்பட்டது.

மரம் வளருங்கள் என தான் வடித்த கவிதையில் "மரம் வளருங்கள். எப்போதாவது உங்களுக்குச் சூடு சொரணை வந்தால் அவை வேல்களாகவும், ஈட்டிகளாகவும் ஆகும்" என்ற பொருளில் வடித்த கவிதை கவிக்கோவை ஒரு போராளி என கவிக்கோவிக்குள் ஒளிந்திருந்த போராளியை நமக்குக் காட்டியது.

இப்படி வீரம் சொறிந்த கவிதைகள் பலவற்றை எடுத்துக்காட்டிடலாம்.

இந்தப் போராளிதான் சாகித்திய அகாடமி விருதை தமிழக கவிதை உலகிற்குப் பெற்றுத் தந்தவர். அதில் கவிக்கோ நடத்திய பெரும் போர், தமிழ் கூறும் நல்லுலகம், அறிந்த ஒன்று. இலக்கிய வரலாற்றில் ஒரு மைல்கல்!

தான் பேராசிரியராக இருந்தக் கல்லூரியல் பல அநியாயங்களை எதிர்த்துப் போராடியவர்.

அன்று மனித நீதி பாசறை என்ற அமைப்பை நான் நிறுவி நடத்திக் கொண்டிருந்த போது, அந்த பாசறைக்கும், எனக்கும் தீவிரவாத முத்திரைகளைக் குத்தி அழித்திட வேண்டும் என உளவுத்துறையும் அதற்கு உறுதுணையாக நின்று செயல்பட்ட மிகச்சில ஊடகங்களும் வரிந்துகட்டிக் கொண்டு செயல்பட்டன.

மனித நீதி பாசறையை தடை செய்ய பரிந்துரை என எல்லாத் தமிழ் பத்திரிகைகளும் தலைப்பிட்டு உளவுத்துறை தந்த செய்திகளாக விளம்பிக் கொண்டிருந்தன.

உறவினர் உட்பட பலரும் என்னையும் அன்றைய தொடக்க நாட்களில் எனக்குத் துணை நின்ற சகோதரர்களையும் கண்டால் விலகு என்ற நிலை. இந்தக் கபளீகரங்களுக் கிடையே அன்று காலையில் ஒரு "பிரஸ் மீட் (எ) பத்திரிகையாளர்களின் சந்திப்பை நடத்தி விட்டு, சென்னை புத்தகக் கண்காட்சிக்கு உற்ற துணையாக நின்ற சகோரர்களுடன் நின்று கொண்டிருந்தேன்.

பின்னாலிருந்து என்னுடைய தோள்களை ஒரு கரம் பற்றிப் பிடித்தது. திரும்பிப்பார்த்தேன் கவிக்கோ அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

"என்ன ஒன்றும் பிரச்சனை இல்லையே" என்றார்கள், பிரச்சனை பண்ணிப்பார்க்கின் றார்கள் என்றேன். ஆனால் வென்று விடுவேன். இன்ஷா அல்லாஹ் என்றேன்.

"ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்" என்றார் எவ்வளவு பெரிய ஆறுதல் வார்த்தை.

ஆனாலும் ஓர் எண்ணம் என்னை வருடி யது. எல்லோரும் "மிரட்சியாகப் பார்த்திடும் போது இந்த ஆத்மா மட்டும் ஆறுதலும் தைரியமும் தருகின்றதே?!. உண்மையில் நான் நடத்திய பெரும் போரில் அவர் உடனிருக்கின் றார் என்பதே உண்மை.

அவருக்குள் ஒரு போராளி புதைந்து கிடக்கின்றான் என்பதை உணர்ந்தேன். இது

தாராளமாக அவருடைய கவிதைகளில் வெளிப்பட்டுமிருக்கின்றன என்பதைக் கண்டு கொண்டேன்.

கவிக்கோ அவர்களோடு நெருங்கி பழகிய வர்கள், அவருடைய போர்க் குணங்கள் பற்றி நிரம்பவே சொல்லி இருக்கின்றார்கள். அது அவர்களே இனி எழுத்தில் வடிப்பார்கள் என எதிர்ப்பார்க்கின்றேன். அவர்கள் அவற்றைத் தந்தால் சரியாகவும் துல்லியமாகவும் இருக்கும்.

இதற்குப் பின்னால் ஒரு பெரும் விபத்து. ஒரு பெரும் துரோகம் இவற்றையெல்லாம் சந்தித்துவிட்டு சற்று ஓய்ந்திருக்கலாம் என்றான



போது, மீண்டும் தாஃவா களத்தில் வர வேண்டிய நிலை. காரணம் அன்று வரை டி.எம். மணியாக இருந்த திருப்பனந்தாள் போராளிக்கு நமது மூலம் அல்லாஹ் ஹிதாயத்தை வழங்கினான்.

அதனால் தொடர்ந்து தாஃவா களத்தில் இறங்கினோம். அதன் முதல் பொது நிகழ்ச்சி யாக, டி.எம்.உமர் ஃபாருக் அவர்களின் சாதி ஒழிந்தது என்ற நூலை வெளியிட்டோம். இந்த வெளியீட்டு நிகழ்ச்சியில் ஆய்வுரை நிகழ்த்திட வேண்டும் என தொலைபேசியில் கவிக்கோ அவர்களைத் தொடர்பு கொண்டு பேசினேன். உடனே சம்மதம் தெரிவித்தார்கள். ஆய்வுரை யையும் நிகழ்த்தினார்.

திரண்டிருந்த கூட்டத்தைப் பார்த்து என்னிடம் கேட்டார்கள் எத்தனை அழைப்பி தழைக் கொடுத்தீர்கள் என்று நான் 100 அழைப்பிதழ்களைத்தான் கொடுத்தேன், கும்ப கோணத்திலிருந்தெல்லாம் நிறைய பேர் வந்திருக்கின்றார்கள் என்றேன். துரோகத்திற்குப் பின்னுள்ள தொடக்கம் கவிக்கோ அவர்களின் உற்சாகம் சிறைந்த சொற்களால் தொடங்கியது தான்.

பிற்றை நாள் ஒன்றில் அவரை சந்தித்தபோது என்ன ஆயிற்று விடியல் வெள்ளி பத்திரிகை என்றார்கள். தாரை வார்த்துத் தந்துவிட்டேன் என்றேன். அப்படியானால் உனது எழுத்துக்கள் எங்களுக்கு இல்லையா என்றார்கள்? விரைவில் இன்னொரு பத்திரிகை வரும், இன்ஷா அல்லாஹ்! என்றேன்.

கவிக்கோ அவர்களின் சொற்கள் "வைகறை வெளிச்சம்" பத்திரிகை விரைந்து வந்திட காரணமாக இருந்த ஒன்று!.

**விருதுகள்**

"கவிக்கோ" என்னிடம் அடிக்கடி சொன்ன ஓர் வார்த்தை இவ்வளவு வேலை களைச் செய்து விட்டு ஒரு அங்கீகாரமில் லாமலிருக்கின்றாயே' என்பது.

*2009*-இல் அவர் தலைமை ஏற்று நடத்திய இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் வழி, இலக்கியச் சுடர் என்ற விருதை வழங்கினார்.

*2015*-இல் ஷேஹ் சதக்கத்துல்லாஹ் அப்பா இலக்கிய விருது கிடைக்க காரணமாக அமைந்தார்கள். அ.மார்க்ஸ் அவர்கள் இதில் முக்கிய பங்காற்றினார்கள்.

இந்த ஆண்டு *2018*-இல் வி.சி.க.-வின் காயிதேமில்லத் விருதை பெற்றிடும்போது அவர்கள் இருந்திருந்தால் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள்.

எனது விருதின் துவக்க நாயகன் அவர்கள் தாம், மட்டுமல்ல. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ், டி.எம்.உமர் ஃபாருக் ஆகியோருக்கு தீன் சுடர் விருது தந்து கௌரவித்தவரும் கவிக்கோ அப்துல் ரஹ்மான் அவர்கள்தாம்.

அவர்களுடைய அரிய சேவைகளை அங்கீ கரிக்கும் அளவில்தான் அவர்களை அல்லாஹ், நரகத்தின் வாயில்கள் பூட்டப்பட்டு சொர்க் கத்தின் வாயில்கள் மட்டுமே திறந்திருக்கும் அழகிய ரமழான் மாதத்தில் அழைத்துக் கொண்டான்.

அல்லாஹ் அனைவருக்கும் அருள்புரிவானாக!

**-எம்.ஜி.எம்.**

*அன்பார்ந்த வாசகர்களே!*

**இப்போது முஸ்லிம் நாடுகளின்மேல் தொடுத்துவரும் போரை, போடும் குண்டுகளை, குவிக்கும் பிண மலைகளை அலைக்கழித்து அநாதைகளாக்கும் குடும்பங்களை, சிலுவைப் போர் 2.0 என அழைக்கின்றார்கள்.**

*கி.பி. 1095 ஆம் ஆண்டு தொடங்கி 1247 வரைத் தொடர்ந்த சிலுவைப்போர்களை முதல் சிலுவைப் போர், அல்லது சிலுவைப்போர் 1.0 என அழைக்கின்றார்கள் மேலை நாட்டவர்களும், இஸ்லாத்தின் எதிரிகளும். இப்போது நடக்கும் சிலுவைப்போர் 2.0 -வை எப்படி நடத்திக் கொண்டிருக்கிறோம் என்ற உண்மைகளை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றான் ஜான் பெப்பர் என்ற எழுத்தாளர். இந்த சிலுவைப் போர் 2.0 -வை அமெரிக்காவின் தலைமையில் மேலை நாடுகள் எப்படி நடத்திக் கொண்டிருக்கின்றன என்பதை ஒரு விளக்கமான நூலாகவும் தருகின்றார்.*

*அந்த நூலுக்கு அவர் தந்த துணை தலைப்பு* The Wests Resurgent war on Islam. *இஸ்லாத்தின் மேல் மேலை நாடுகள் நடத்தும் புத்துயிற் பெற்ற போர்.*

*இதன் முந்தைய பகுதியை சென்ற வைகறை வெளிச்சம் இதழில் தந்தோம். அதனை இந்த இதழிலும் தொடருகின்றோம்.*

நாங்கள் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி, மொத்த சிரமத்தோடு முஸ்லிம்களுக்கெதிராக பொய்ப் பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்துவிட்டோம். இதனால் முஸ்லிம்களின் மேலுள்ள வெறுப்புப் பிரச்சாரம் வலிமைபெறும்/ அதிகம், அதிகமான அமெரிக்கர்கள் முஸ்லிம்களை வெறுப்பார்கள் என்பனவே எங்களுடைய எண்ணம், இலக்கு.

காலப்போக்கில் மொத்த அமெரிக்கர்களும் முஸ்லிம்களை வெறுக்க வேண்டும், இதனை எட்டிப் பிடிக்கும் வரை தொடர்ந்து முஸ்லிம்கள் மீதான வெறுப்புப் பிரச்சாரத்தைத் தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும் என்பது திட்டம். இந்த திட்டத்தோடு நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருந்த போதுதான், ‘PEW’ என்ற ஆய்வு நிறுவனம் அந்த அறிக்கையை வெளியிட்டது.

இந்த நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் 9/11 என்ற அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்டபோது, அமெரிக்கர்களில் 33 சதவீதம் பேர் முஸ்லிம்களை வெறுத்தார்கள். ஆனால் இப்போது அமெரிக்கர்களில் 23 சதவீதம் பேர்தான் இஸ்லாத்தை வெறுக்கின்றார்கள் என்றது.

இது இந்த ஆய்வு, எங்கள் பிரச்சாரம் எள்ளளவும் வெற்றிப்பெறவில்லை. மாறாக அதுமெல்ல மெல்ல தோல்வியைத் தழுவிக்



# சிலுவை யுத்தம் 2.0

கொண்டிருக்கின்றது என்பதை தெளிவுப்படுத்தி யது. ஆனாலும் நாங்கள் விடுவதாக இல்லை. இஸ்லாத்தை ஒரு பேயாகவும் பூதமாகவும் காட்டியாக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தோம்.

எங்கள் கவனத்தை ஐரோப்பிய நாடுகளின் பக்கம் திருப்பினோம். அங்கெல்லாம் இஸ்லாத் திற்கெதிரானப் பிரச்சாரங்களை, வெறுப்புப் பிரச்சாரத்தை முடுக்கிவிட்டோம்.

ஐரோப்பிய நாடுகளான, பெல்ஜியம், பிரான்ஸ், ஸ்பெயின் ஆகிய நாடுகளின் சட்ட மன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களையே உசுப்பி விட்டோம். இவர்கள் அந்தந்த நாட்டு சட்ட மன்றங்களில் இஸ்லாமியச் சட்டங் களுக்கு எதிரான சட்டங்களைக் கொண்டு வந்திட சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள்.

இஸ்லாமிய ஆடைகளுக்கெதிராக சட்டங் களைக் கொண்டு வந்திட சட்ட மன்றங்களில் கபளீகரங்கள், இஸ்லாமியச் சட்டங்களுக்கு எதிராக மக்கள் கருத்தை ஒன்று திரட்டி ஒரு முகப்படுத்திடும் பயங்கர முயற்சிகள். இதில் தான் பிரான்ஸ் நாட்டில் ஒரு பெரும் மக்கள் இயக்கம் புர்காவுக்கு எதிராக நடந்தது. புர்கா வுக்கு எதிராக ஒரு சட்டமும் இயற்றப்பட்டது. (ஆனால் இந்தச் சட்டம் புர்கா போடுவதை முற்றாக நிறுத்தி விடவில்லை. காரணம் முஸ்லிம் பெண்கள் இந்தச் சட்டத்தைப் பற்றிக் கவலைப்படாமல் புர்கா அணிந்தார்கள். அத்தோடு பிரான்ஸ் நாட்டின் நீதிமன்றத்தில் பெண்கள் தாங்கள் விரும்பும் ஆடையை அணிந்திடும் உரிமை உண்டு என்றொரு தீர்ப்பையும் பெற்றார்கள். இந்தத் தீர்ப்பின் பின்னணி, இதையும் எப்படி பிரான்ஸிலிருந்து இந்தச் சட்டம் நடைமுறையில் பின்வாங்கப் பட்டது என்பதையும் நாம் வைகறை வெளிச்சம் வாசகர்களுக்கு நிரம்பவே தந்திருக்கின்றோம்)

அதே நேரத்தில் சுவிட்சர்லார்ந்து நாட்டில் மஸ்ஜித்களில் உயர்ந்து நிற்கும் 'மினாரட்'களுக் கெதிராக அங்கே உள்ள சட்ட மன்ற, நாடாளு மன்ற உறுப்பினர்கள் மக்கள் இயக்கங்களை நடத்தினார்கள். ஆகாய விமானங்களில் பறந்து வந்து இறங்கிடும் போது ஏதோ அரபு தேசத் திற்குள் இறங்குவதுபோல் இருக்கின்றது எனக் குரல் கொடுத்தார்கள்.



மினாரட்களை ஒழிக்க கையெழுத்து இயக் கங்களை நடத்தினார்கள். - இறுதியில் மினாரட் களுக்கெதிராக ஒரு சட்டத்தையும் இயற்றி னார்கள். (இதைப் பற்றியும் வைகறை வெளிச்சம் வாசகர்களுக்கு நிரம்பவே தகவல்களைத் தந்திருக்கின்றோம்) அவர்களால் ஒரு முஸ்லிம் வெறுப்பை, முஸ்லிம்கள் மீதும் இஸ்லாத்தின் மீதும் கட்டவிழ்த்திட முடிந்ததே அல்லாமல், மினாராக்களோடு மஸ்ஜித்கள் நிமிர்ந்து நிற்பதை தவிர்த்திட இயலவில்லை)

Fortress Europe ஐரோப்பாவைப் பாதுகாப்போம் இப்படியொரு முழக்கத்தை ஐரோப்பிய நாடுகள் எங்கும் படரவிட்டோம். இந்த முழக்கத்தை முன் வைப்பதன் மூலம், ஐரோப்பாவிற்கு முஸ்லிம்களிடமிருந்து, பல அச்சுறுத்தல்கள் இருக்கின்றன என்பதைப் பிரச்சாரம் செய்தோம்.

அவை, ஐரோப்பாவைப் பாதுகாப்பதற்கு, முஸ்லிம்களை ஐரோப்பாவிற்குள் அண்ட விடாதீர்கள். அவர்கள் இங்கே வயிறு பிழைக்க வருவதைப்போல் வருவார்கள். ஆனால் தீவிர வாதத்தை விதைத்து விடுவார்கள். நம்மைச் சிதைத்து விடுவார்கள். அவர்கள் வேலை செய்ய வருபவர்களைப் போல் வருவார்கள்.



உங்கள் வேலைகளைப் பிடுங்கிக் கொள்வார்கள். உங்கள் மார்க்கத்தை அழித்து அவர்கள் மார்க்கத்தை நிலை நாட்டிட முன் வருவார்கள். அது முடியாதபோது தீவிர வாதச் செயல்களைச் செய்து உங்களையும் உங்கள் நாட்டையும் அழித்து விடுவார்கள்.

உங்கள் குழந்தைகள் (ஐரோப்பாவைச் சார்ந்த குழந்தைகள் உங்கள் சொந்த வீதிகளிலேயே விளையாடிட முடியாத நிலை வரும். இவற்றிற்கெல்லாம் மையமாகக் கொண்டு அதாவது இந்த வெறுப்புப் பிரச்சாரத்தை மையமாகக் கொண்டு ஷரீயத்திற்கு எதிராக உண்மையைச் சொன்னால் ஐரோப்பாவில் வாழும் முஸ்லிம்களுக்கெதிராக 12 சட்டங்களைக் கொண்டு வந்தோம்.

இதனிடையே பல அறக்கட்டளைகள் ஐரோப்பா முழுவதும் நிறுவப்பட்டன. இந்த அறக்கட்டளைகள் மூலம் இஸ்லாத்திற்கு எதிரான பிரச்சாரங்களுக்காக நிதி திரட்டப் பட்டது.

இந்த அறக்கட்டளையை நாங்கள் Rights Wing Foundation எனப்பெயரிட்டு அழைத்தோம். அதாவது வலது சாரி நிறுவனங்கள் என அழைத்தோம். இந்த அறக்கட்டளைகள் - நிறுவனங்கள் ஒரு குறுகிய காலக் கட்டத்திற்குள் 40 மில்லியன் டாலர்களை (சுமார் 280 கோடி ரூபாயை) இந்த முஸ்லிம் வெறுப்புப் பிரச்சாரத்திற்கு அள்ளித் தந்தன. இவற்றின் வழி பல தீவிரவாத தாக்குதல்களை நடத்திவிட்டு, அவற்றை முஸ்லிம்கள்செய்தார்கள்என பழிச்சுமத்தி முஸ்லிம்களை கைது செய்தோம். சிலரை என்கவுண்டர் என்ற பெயரில் கொலை செய்தோம். இவற்றின் மூலம் இஸ்லாம் என்றால் மக்கள் வெறுப்படைய வேண்டும். முஸ்லிம்கள் என்றால் மக்கள் பீதிவயப்பட வேண்டும் என்பதே எங்கள் இலக்கு.

இவை போதிய அளவில் வேலை செய்யவும் செய்தன.

எந்த அளவுக்கென்றால் அமெரிக்காவில் 2008 ஆம் ஆண்டு குடியரசு தலைவர் பதவிக்குப் போட்டியிடத் தயாராகிக் கொண்டிருந்த "Herman Cain" ஹெர்மான் கெயின் என்பவர், தான் ஆட்சிக்கு வந்தால் முஸ்லிம்களை அதாவது அமெரிக்க முஸ்லிம்களை எந்த அரசு பதவிக்கும் நியமிக்க மாட்டேன் எனப் பிரகடனம் செய்தார்.

இவற்றையெல்லாம் நாங்கள் ஏன் செய்தோம்?

- இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்

ஆங்கிலம் - ஜான் ஃபெப்பர்

தமிழ் வடிவம் - மு. குலாம் முஹம்மது



## கைவறை வெளிச்சம் ஆசிரியருக்கு காயிதேமில்லத் பிறை விருது

விடுதலை சிறுத்தைகள் சார்பில் 15-5-2018 அன்று மாலை காயிதே மில்லத் பிறை விருது வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு.குலாம் முஹம்மது அவர்களுக்கு வழங்கப்பட்டது. ஆசிரியர் குழுமம் சார்பிலும் வாசகர்கள் சார்பிலும் விடுதலை சிறுத்தைகளுக்கும் அதன் தலைவர் சகோதரர் தொல்.திருமா வளவன் அவர்களுக்கும் நன்றிகள் பல... விழா நிகழ்ச்சி குறித்த விவரமான தகவல்கள் இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் இடம்பெறும்.

# இஸ்லாமிய வங்கி முறை! - தகாபுல்

நம் வாழ்வு எப்போதும் எதிர்பார்ப்பதை போல் அமைந்து விடுவதில்லை. ஒவ்வொரு நாளும் மற்றொரு நாளோடு வித்தியா சப்படுகிறது. துக்கம், மகிழ்ச்சி இரண்டும் வாழ்க்கையில் பிரிக்க முடியாத நண்பர்களாகி விட்டது. சில துக்கங்கள் வாழ்வில் பெரும் சேதத்தை உண்டாக்கும். உதாரணமாக தொழில் நஷ்டம், இயற்கை சீற்றம், பொருளாதார மந்தம், எதிர்பாராத விபத்துகள் இதில் அடங்கும்.

ஆபத்து காலங்களில் நமக்கு உதவி தேவை என்பதை அறிந்து பலரும் பல காப்பீட்டு திட்டங்களில் சேருகின்றனர். இந்த கட்டுரை யில் எடுத்துக்காட்டாக விவசாய காப்பீட்டு திட்டத்தை எடுத்து கொண்டு இதில் இஸ்லாமிய பொருளாதார கொள்கை மற்ற கொள்கைகளை விட எவ்வாறு சிறந்து விளங்குகிறது என்று பாப்போம்.

விவசாயிகள் மழை பொய்த்து நஷ்டம் அடைந்தால் காப்பீட்டு நிறுவனத்திடம் இருந்து நிவாரணம் பெற்று கொள்ளலாம் என்று நினைத்து பல விவசாயிகள் இந்த பயிர் காப் பீட்டு திட்டத்தில் சேர்ந்தார்கள். காப்பீட்டு நிறுவனமும் நல்ல வசூல் செய்தது.

"2016 - 17 ம் ஆண்டுக்கு இந்தியா முழுவதும் வசூலிக்கப்பட்ட பயிர் இன்ஸ் யூரன்ஸ் பிரிமியத்தொகை 22,437 கோடி ரூபாய். விவசாயிகளுக்கு வழங்க ஒத்துகொண்ட தொகை 8,087 கோடி வழங்கிய தொகையோ 714 கோடி. அதாவது 97 சதவீத மக்கள் பணத்தை இன்ஸ்யூரன்ஸ் நிறுவனங்கள் தரவில்லை"

இங்கு நாம் பார்க்க வேண்டியது என்ன வென்றால் முதலாளித்துவம் நாம் கஷ்டப் பட்டாலும் அதை அவர்களுக்கு வியாபாரம் ஆக்கிவிடுவார்கள்.

ஆபத்து களங்களில் உதவி செய்வது என்பது ஒரு மனிதநேய கடமை. இஸ்லாம் இதை முழுமையாக கடைபிடிக்கிறது. இன்னல்களான காலங்களில் உதவுவதற்கு உருவான ஷரீயத் அடிப்படையிலான திட்டமே தகாபுல்.

**தகாபுல் - செயல் வடிவம்**

பல மக்கள் கூட்டாக சேர்வர், ஒவ்வொரு வரும் ஒரு தொகையை பொது பணிக்காக கொடுக்க வேண்டும். வசூல் செய்த தொகைக்கு ஒரு காலம் நிர்ணயிக்கப்படும். உதாரணமாக ஒரு வருடம், 6 மாதம் என்று வைத்து கொள்ளவேண்டும்.

இந்த நிர்ணயத்தை காலத்தில் பணம் செலுத்திய உறுப்பினருக்கு நஷ்டமோ,



ஆபத்தோ வந்தால் இந்த பொதுவாக உள்ள பணத்தில் இருந்து செலவு செய்வார்கள். அந்த குறிப்பிட்ட காலம் முடிந்ததும் மீதம் உள்ள தொகையை பணம் செலுத்திய அனைவரும் பிரித்து கொள்வார்கள்.

இந்த பணத்தை நிர்வகிக்கும் நிறுவனமோ அல்லது வங்கியோ இதில் ஒரு பகுதியை இஸ்லாமிய வங்கி அறிமுகப்படுத்திய திட்டத் தில் முதலீடு செய்து அதில் கிடைக்கும் லாபத் திலும் அதன் உறுப்பினர்களுக்கு பங்கு வைக்கும்.

இதன் மூலம் ஆபத்து காலங்களில் பாதுகாப்பு மற்றும் முதலீடு செய்த பணத்தின் சுழற்சியின் மூலம் கிடைக்கும் லாபம் மேலும் மனிததேய சமுக கட்டமைப்பும் உருவாகிறது.

**இதனாலேயே இஸ்லாம் தனித்து விளங்குகிறது**



# காணாமற்போன தமிழ்நாட்டு முஸ்லிம் வாக்காளர்கள் 12 லட்சம்..?

கண்ணியமிக்க காயிதேமில்லத் - மக்கள் தலைவர், அவர்களின் பேரன் தாவூத் மியாகான் அவர்கள். பல்வேறு சமுதாயப் பணிகளை, ஆக்கப்பூர்வமான, ஆராய்ச்சிப் பூர்வமான பணிகளைச் செய்து வருகின்றார்கள்.

பொதுவாழ்வில் நேர்மையும், நாணயமும் மிக்கவர்களை அகில இந்திய அளவில் கண்டெடுத்து காயிதே மில்லத் விருது ஒன்றை வழங்கி வருகின்றார்கள்.

இந்த வகையில் இன்றைய இந்தியாவில் மோடியின் மிகப்பெரிய எதிரியாகக் கருதப்படுவர், டீஸ்டா செட்டல் வாட்.

மோடி ஆட்சிக்கு வந்தவுடன் எப்படியேனும் சிறையிலடைத்துச் சித்திரவதைச் செய்திட வேண்டும் எனக் குறி வைக்கப்பட்டவர் டீஸ்டா செட்டல்வாட்.

அவரை காவல்துறை துரத்திக் கொண்டிருக்கும் போதே அவரை அழைத்து நேர்மையாக பொது வாழ்க்கையை நடத்தியதற்கான விருதையும் பொற்கிழியையும் வழங்கினார்கள்.

அப்போது மோடி அரசு அவரை நேர்மையற்றவர், குல்பர்க் சொசைட்டி என்ற பெயரில், பணத்தை வசூல் செய்து உல்லாச வாழ்க்கைக்காக செலவிட்டார் எனக் குற்றம் சாட்டிட இல்லாத பொல்லாத பொய்களையெல்லாம் புனைந்து வழக்குகளைக் ஜோடித்துக் கொண்டிருந்த நேரம்.

அந்த விருதை வாங்கி, ஏற்புரை நிகழ்த்திடும்போது அவர் கண் கலங்கினார். இரும்பு வீராங்கணையையே நெகிழ வைத்த மாமனிதர் காயிதேமில்லத்-இன் பேரர் தாவூத் மியாகான்.

அவர்களுடைய ஆக்கப்பூர்வமான பணிகள் இன்னமும் தொய்வையோ தளர்வையோ கண்டிடவில்லை.

**கன்னட தேர்தல்**

மே-12, 2018 அன்று நமது அண்டை மாநிலமாம் கன்னட மாநிலத்தில் சட்ட மன்ற தேர்தல் நடந்தது. அங்குள்ள முஸ்லிம்களின் வாக்குகளில் 15 லட்சம் வாக்குகளைக் காணாமலாக்கினார்கள் இன்றைக்கு இந்தியாவை கற்காலத்திற்கு அழைத்துச் சென்று கொண்டிருக்கும் பாசிஸ்ட்டுகள்.

அதைக் கண்டெடுத்து அங்குள்ள முஸ்லிம்களை உசுப்பிவிட்டு சுமார் 12.5 முஸ்லிம்களின் வாக்குகளை மீட்டுத் தந்திடுவதில் முக்கியப் பங்காற்றினார்கள் தாவூத் மியாக்கான் அவர்கள்.

### இஜாஸ் அஷ்ரஃப்

முஸ்லிம்களின் வாக்குகள் வேண்டுமென்றே காணாமலாக்கப்படுகின்றது என்ற உண்மையை முதலில் கண்டுடெடுத்தவர் இஜாஸ் அஷ்ரஃப் அவர்கள்தாம்.

இஜாஸ் அஷ்ரஃப் அவர்கள் உலக புகழ் பெற்ற சச்சார் கமிட்டியில் செயலாளராக இருந்தவர்.

இஜாஸ் அஷ்ரஃப் அவர்கள் மொத்த இந்தியாவிலுள்ள 4.5 கோடி முஸ்லிம் வாக்குகள் காணாமற் போயிருக்கும் எனக் கணிக்கின்றார்கள்.

தமிழகத்தில் 12 லட்சம் முஸ்லிம் வாக்குகள் காணாமலாக்கப்பட்டிருக்கும் என்பது கணிப்பு.

இதனை திட்டவட்டமாக அறிந்திட ஒரு முன்மாதிரி கணக்கெடுப்பை துறைமுகம் தொகுதியில் நடத்தித் திட்டமிட்டு, அதற்கான குழுவையும் 16-5-2018 இல் தாவூத் மியாக்கான் அவர்கள் அமைத்தார்கள்.

துறைமுகம் தொகுதியில் மட்டும் ஏறத்தாழ 15 ஆயிரம் வாக்குகள் காணாமற் போயிருக்கலாம் எனக் கணிக்கப்படுகின்றது.

மற்றொரு கணக்கில், துறைமுகம் தொகுதியில் 41,600 முஸ்லிம் வாக்குகள் இருக்க வேண்டும். ஆனால் இன்று 24,000 முஸ்லிம்கள் வாக்குகள் மட்டுமே இருக்கின்றது. இதில் எந்த நிலையிலும் வாக்காளர்கள் பட்டியலில் பெயரை பதிவு செய்யாதவர்களும் உண்டு. கணக்குகள் 2011 சென்ஸஸ் கணக்கை அடிப்படையாகக் கொண்டவை.

### வாக்காளர்கள் பட்டியலிலிருந்து முஸ்லிம் வாக்காளர்கள் பெயர் எப்படி நீக்கப்படுகின்றது?

என் கையில்தான் என் வாக்காளர் அட்டை இருக்கின்றது. எப்படி என் பெயரை வாக்காளர்கள் பட்டியலிலிருந்து நீக்கிவிட முடியும்? இப்படித்தான் எல்லோரும் நினைக்கின்றார்கள். ஆனால் உங்கள் வாக்காளர் அடையாள என்னை நீங்கள் துளாவினால் உங்களுக்கு ஒரு தகவல் காத்திருக்கும் அது உங்கள் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. என்ன விண்ணப்பம் எனத் தேடினால், நீங்கள் வாக்காளர் பட்டியலிலிருந்து உங்கள் பெயரை நீக்க விரும்பியபடி வேண்டியதாகவும், அதனை ஏற்றுக்கொண்டு உங்கள் பெயரை வாக்காளர்கள் பட்டியலிலிருந்து நீக்கி விட்டதாகவும் கூறுவார்கள்.

நான் அப்படி ஒரு விண்ணப்பத்தை எப்போதும் தந்திட வில்லை. அப்படியொரு விண்ணப்பித்திருந்தால் அதனை எனக்கு அனுப்புங்கள் என வேண்டினால் பதில் வராது.

இதனை நீங்கள் தகவறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்டாலும் பதில் வராது.

இப்படித்தான் முஸ்லிம் பெயர்கள் வாக்காளர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்படுகின்றது. இந்தத் துரோகம் தேர்தல் ஆணையத்தின் ஆசியின்கீழ்தான் நடக்கின்றது.

ஏனெனில் இதனை தேர்தல் ஆணையத்தின் பார்வையின் கீழ்கொண்டு சென்றபோது அது இதைப் பற்றி எந்தப் பதிலையும் சொல்லவில்லை என்கின்றார் இந்தப் பிரச்சனையில் முன்னுக்கு நிற்கும் தாவூத் மியாக்கான் அவர்கள்.

கர்னாடகா மாநிலத் தேர்தலின் போதே இதைத் தலைமை தேர்தல் ஆணையத்திடம் கொண்டு சென்றுள்ளார்கள் இஜாஸ் அஷ்ரஃப் அவர்கள். அப்போதிருந்தே தாவூத் மியாக்கான் அவர்களும் உடனிருந்துள்ளார்கள்.

இன்னொன்றையும் இங்கே கவனிக்க வேண்டும். வாக்காளர் அட்டையிலிருந்து என்னுடைய பெயரை நீக்கி விடுங்கள் என எவரும் கேட்க மாட்டார்கள். அப்படி இருக்க போலி ஆவணங்களை உருவாக்கி முஸ்லிம்களின் பெயரை நீக்கிட ஏன் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

### பெரிய சதி

நாம் சங்கப்பரிவார பாசிசத்தின் அனைத்துக் கூறுகளையும் அலசி ஆராய்ந்து வருகின்றோம். அதன் வரலாறும், இந்த ஆய்வில் அடங்கும்.

இவர்கள் இப்படித்தான் செயல்படுவார்கள் என நாம் தந்த அறிவிப்புகள் - அறிக்கைகள் எதுவும் இன்றளவும் பொய்த்ததில்லை.

அதேபோல் அன்றைய நாட்களில் நாடெங்கும் குண்டு வெடிப்புகள் நடந்து கொண்டிருந்த போது ஒரு கருத்தை உறுதியாகக் கூறி வந்தோம். அது, எந்த முஸ்லிம் இளைஞனும் இதுபோன்ற ஈனச் செயல்களில் ஈடுபட்டிட மாட்டான். இந்த குண்டு வெடிப்பும், இஸ்ரேல்

பாணியில், இந்தியாவில் ஆட்சியைப் பிடிக் கவும் அதனை ஆரியவர்த் இந்து ராஷ்டிரமாக ஆக்கிடவும் சங்கப்பரிவார அமைப்புகள் செய்யும் சதி வேலையே குண்டு வெடிப்புகள் என்றோம். அதுவும் காலப் போக்கில் உண்மையானது.

இப்போது இந்த வாக்காளர் பட்டியலி லிருந்து முஸ்லிம் வாக்காளர்களின் பெயர் நீக்கம் ஏன் என்பதை சொல்லி விடுகின்றோம். மக்களை உஷார் படுத்திட இன்றைக்கு ஆட்சியிலிருக்கும் பாசிஸ்ட்டுகளின் நோக்கம் இந்தியாவை ஆரியவர்த் இந்து ராஷ்டிரம் என்றாக்கிவிடுவதுதான்.

அந்த ஆரியவர்த் இந்து ராஷ்டிரத்தில் முஸ்லிம்களை இரண்டாந்தர குடிமக்களாக ஆக்கிட எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றார்கள்.

உங்களுக்கு ஒரே ஒரு உரிமை மட்டுந்தான் வழங்கப்படும். அது உயிர் வாழ்வதற்கான உரிமை. அடங்கி ஒடுங்கி வாழ்ந்தால் தப்பித்தீர்கள் எனப் பிரகடனப் படுத்துவார்கள். வாக்களிக்கும் உரிமை உட்பட இதர எல்லா உரிமைகளும் மறுக்கப்படும்.

ஏற்கெனவே சங்கப்பரிவாரத்தைச் சார்ந்தவர்கள் முஸ்லிம்களுக்கு இருக்கும் வாக்களிக்கும் உரிமையை பறித்திட வேண்டும் என ஆங்காங்கே பேசி வருகின்றார்கள். இதை எல்லோரும் கவனித்து வருகின்றார்கள். அதைத்தான் இப்போது இன்னொரு வடிவில் செய்து வருகின்றார்கள்.

போதுமான அளவுக்கு முஸ்லிம்களை வாக்காளர்கள் பட்டியலிலிருந்து நீக்கிய பின் வாக்காளர் அட்டைதான் குடியுரிமை அடை யாளம் என அறிவிப்பார்கள். வாக்காளர்கள் அட்டை இல்லாதவர்கள் இந்தியாவின் குடி மக்கள் அல்ல எனப் பிரகடனப் படுத்துவார்கள்.


இதை நோக்கித்தான் காய்களை நகர்த்து வார்கள். ஏற்கெனவே இவற்றை எல்லையோர மாநிலங்களில், அண்டை நாட்டுப் பக்கத்தி லிருக்கும் பகுதிகளில் நடத்திக் காட்டி இருக் கின்றார்கள் என்பதை கவனிக்க வேண்டும். அதனால் வாக்காளர்கள் அட்டையை பிரச் சனை எனப் பார்த்திடாமல், அதற்குப் பின்னாலிருக்கும் சதிகளைப் புரிந்து கொண்டு மியாக்கான் அவர்களின் முயற்சிக்குத் துணை நிற்போம்.

**– எம்.ஜி.எம்.**




28.05.2018 அன்று சென்னை ராயபுரம் ரம்ஜான் மஹாலில் தமிழ்மாநில தேசிய நடத்திய இஃப்தார் நிகழ்ச்சியில் திமுக செயல்தலைவர் ஸ்டாலின் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். தமிழ்மாநில தேசியலீக் பொதுச்செயலாளர் திருப்பூர் அல்தாப், எஸ்.டி கொரியர் நவாஸ், முனைவர் அன்சாரி, டாக்டர் ஹஃபீஸ், இல்யாஸ் ரியாஜி,டாக்டர் காஜாமஜீத், டி.பி.எம். மைதீன் கான் சம்சுதீன், திருவான்மியூர் காஜா உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

# நன்மைகளில் நமக்கு பிடித்தவைகளை விட அல்லாஹ்வுக்குப் பிடித்தவைகளுக்கே முதலிடம்



இமாம் யூசுப் அல்கர்லாவி

மேலும் இப்னுல் கய்யிம் (ரஹ்) கூறுகின்றார் ;

மூன்றாம் வகையினர் : "வணக்க வழிபாடுகளில் மிக ஏற்றமானவை மற்றவர்களுக்கு பலன் தருபவைகளே" என்கின்றனர். நமக்காக நாம் செய்திடும் நற்செயல்கள் நம்முடைய நலனுக்கு உகந்தவை தான். எனினும் ஒரு சேவையால் சமூகமே பலன் பெறுமல்லவா?

சமூக சேவைகள் ஏழைகளின் நலன்கள் இவைதான் ஏற்ற மானவை. அல்லாஹ் நமக்கு தந்திருக்கும் செல்வம், பதவி, செல்வாக்கு, இவற்றால் பிறரும் பயன் பெற்றிட வேண்டும் என்று கருதும் இவர்கள் அதற்கென தன்னலம் துறந்து உழைக்கின்றனர். பின்வரும் நபி மொழியை தங்களின் பணிகளுக்கு சான்றாக முன் வைக்கின்றனர்.

படைப்புகள் அனைத்தும் அல்லாஹ்வின் குடும்பம். அவனின் குடும்பத்துக்குப் பயன்தரும் பணிகளைச் செய்பவரே அவனுக்கு மிகப் பிரியமானவர் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், (நூல் : அபூயஅலா, தப்ரானீ)

வணக்க வழிபாடுகளில் திளைத்திருப்பவர் தமக்கு மட்டுமே நன்மைகளைத் தேடிக் கொள்கிறார். சமூக சேவையாளரால் மற்றவர்களும் பலன் பெறுகின்றனர். அவருக்கும் இவருக்கும் எத்துணை பெரிய வித்தியாசம்!

"நட்சத்திரங்களை விட நிலவு எவ்வளவு சிறப்புக்குரியதோ அதுபோல வணக்கசாலியை விட அறிஞர் சிறப்புக்குரியவர்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல் : அஹ்மது)

அலீ (ரழி)விடம் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : உன் மூலமாக ஒரு மனிதர் நேர்வழி பெறுவது சிவப்பு ஒட்டகங்கள் கிடைப்பதைவிட உமக்கு மிகச் சிறந்தது. (நூல் : புகாரி)

கல்வி கற்பதும் பிறருக்கு நேர்வழி காட்ட உழைப்பதும் ஏன் சிறப்புக்குரியவையாகின்றன என்பது புரிகிறதா? இவற்றில் சமூக நலன் இருக்கிறது.

இன்னும் சில நபிமொழியைப் பாருங்கள்

"நேர்வழிக்கு பிறரை அழைப்பவருக்கு – அதைப் பின்பற்றுவோர் பெறும் கூலியில் கொஞ்சம் கூட குறைக்கப்படாமல் அதே போன்று கூலி கிடைக்கும். (நூல் : அஹ்மது, முஸ்லிம்)

மக்களுக்கு நன்மைகளை கற்பிப்பவருக்கு அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகள் பிரார்த்தனை செய்கின்றனர். (நூல் : திர்மிதி)

மார்க்க அறிஞர்களுக்கு வானங்களில் இருப்பவர்களும் பூமியிலுள்ளவர்களும் பாவ மன்னிப்புத் தேடுகின்றனர். கடல் வாழ் மீன்களும், புற்றில் வசிக்கும் எறும்புகளும் பாவ மன்னிப்புத்தேடுகின்றன. (நூல்: திர்மிதி)

இறைத் தூதர்களாம் நபிமார்கள் மக்களைவிட்டு ஒதுங்கி தனிமையில் துதிப்பவர்களாகவோ துறவிகளாகவோ அனுப்பப்பட வில்லை. மக்களுக்கு நேர்வழி காட்டவும் நற்பணிகளை செய்யவுமே வந்தார்கள்.

சமூக வாழ்வை முற்றாக துறந்து வணக்க வழிபாட்டிலேயே திளைத்துவிட சிலர் விரும்பியபோது நபி (ஸல்)

அவர்கள் அதை வன்மையாகக் கண்டித்தார்கள்.

இவ்வாறான சான்றுகளைக் காட்டும் மூன்றாம் வகையினர் இறை வணக்கத்துடன் சமூகப் பணிகளும் செய்வதே சிறந்த பணி வெறும் வழிபாடுகளை விட என்கின்றனர்.

நான்காம் வகையினர் : இவர்கள் ஒவ்வொரு காலக்கட்டத்திற்கும் சூழ்நிலைக்கு ஏற்ப எது இறை திருப்தியைப் பெற்றுத்தரும் பணியோ அதை செய்வதே சிறந்தது என்கின்றனர்.

ஜிஹாத் எனும் அறப்போருக்கானதேவை ஏற்பட்டிக்கும் சூழலில் அதுவே சிறந்தது. இதற்காக அன்றாட உபரி (நஃபில்) வணக்கங் களைக் கூட (அவசியம் கருதி) விட்டுவிடலாம் என்கின்றனர்.

உபரித் தொழுகை, உபரி நோன்பு இவற்றை ஜிஹாதிற்காக விடுவது மாத்திரமல்ல, கடமையான தொழுகையைக் கூட அச்சமற்ற சூழ்நிலையில் தொழுவதுபோல நிறுத்தி நிதான மாக அல்லாமல் விரைவாக சீக்கிரமாக முடித்து விடலாம் என்கின்றனர்.

வீட்டுக்கு விருந்தினர் வந்திருக்கும்போது வழமையான விரும்பத்தக்க (முஸ்தஹப்பு) வையைச் செய்துக் கொண்டிருக்காமல் அவர்களை உபசரிக்க வேண்டும். இதுபோலவே நம்முடைய மனைவி, மக்களுடைய உரிமை களைப் பேணிப்பாதுகாத்திட நாம் முன்னுரிமை தர வேண்டும்.

ஸஹர் நேரம், தொழுகை, குர்ஆன் ஓதுதல், இறைத்துதி (திக்ர்), துஆ பாவமன்னிப்புத் தேடுதல் ஆகியவற்றின் நேரம். எனவே, ஸஹர் நேரத்தில் இவற்றை செய்வதே சிறந்தது.

கல்வி நிலையத்தில் பாட நேரங்கள் கல்வி கற்பிக்கவும் புரியாத மாணவர்களுக்குப் புரிய வைப்பதற்குமான நேரம். எனவே பாட நேரங்களில் கற்பித்தலே சிறந்தது.

பாங்கு சொல்லும் நேரத்தில் மற்ற உபரியான வழிபாடுகளை விட பாங்கில் அழைப்புக்கு பதிலளிப்பதே ஏற்றமானது. ஐவேளைத் தொழுகை நேரங்களில் பள்ளிவாசல் தூரத்திலி ருந்தாலும் கூட செல்ல முயல்வதும் உரிய நேரத்தில் தாமதமின்றித் தொழுதிட பிரயத்தனம் செய்வதும் ஒருமுகப்பட்டுத் தொழுவதும்தான் ஏற்றமானது. மற்ற சமூகப் பணிகளை விட ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் நம்மிடம் உதவியை நாடி வந்திருப்பவருக்கு நம், உடல், பொருள், செல்வாக்கு அனைத்தையும் பயன் படுத்தி உதவி செய்து அவரின் துயர் துடைப்பதே ஏற்றமானது. தனிமையிலிருந்து இறைவனைத் துதிப்பதை விட,

திருக்குர்ஆன் ஓதும் நேரத்தில் முழு அக்கறை யுடனும் அல்லாஹ்வுடன் உரையாடுவது போன்ற உணர்வுடனும் ஓத வேண்டும். ஓர்மை யுடன் அதன் பொருளை அறிந்திட வேண்டும். அதன் கட்டளைகளை செயல்படுத்திட உறுதி ஏற்க வேண்டும். அந்நாட்டு அரசனிடமிருந்து ஒரு கடிதம் உங்களுக்கு வந்தால் அதற்கு எவ்வளவு முக்கியத்துவம் தருவீர்களோ அதை விட பெரும் முக்கியத்துவம் தர வேண்டும்.

அரஃபா நாளில் அங்கு தங்கியிருக்கும் ஒரு ஹாஜி பிரார்த்தனை, இறைத்துதி, இறைவனிடம் சரணடைதல், பாவமன்னிப்பு ஆகிய வற்றில் முனைப்புடன் ஈடுபட வேண்டும். அந்நாளில் அங்கு நோன்பு வைக்கக் கூடாது. இதனால் நன்மைகள் செய்திட இயலாதபடி பலஹீனம் ஏற்படும்.

துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்கள் மிகவும் வணக்கத்துக்குரிய நாட்கள். அந்நாட் களில் இறைவனை பெருமைப்படுத்த வேண்டும். புகழ்ந்தேற்ற வேண்டும். ஏகத்துவ முழக்கத்தை முழங்கிட வேண்டும். (தக்பீர், அல்ஹம்து லில்லாஹ், லாயிலாஹ இல்லல்லாஹூ கூறிட வேண்டும்) பொதுவான அறப்போரை விட இந்நாட்களில் அவைதான் சிறந்தவை.


ரமழான் மாதம் கடைசிப் பத்து நாட்களில் பள்ளிவாசலை விட்டு வெளியேறாமல் தங்கி யிருந்து வணக்க வழிபாட்டில் திளைத்திட வேண்டும். இந்நாட்களில் மக்களோடு கலந்துற வாடுவதை விட கல்வி கற்பதை விட தனிமை வணக்கமே சிறந்தது என்கின்றனர் ஏராளமான அறிஞர் பெருமக்கள்.

ஒரு முஸ்லிம் சகோதரர் நோயுற்றிருந்தால் அவரை நலம் விசாரிப்பதும் அவர் இறந்து விட்டால் அவரின் ஜனாஸாவில் பங்கேற்று ஆக வேண்டிய வேலைகளைப் பார்ப்பதும் உன் தனிமை வணக்கத்தை விட இதரப் பணிகளை

விடச் சிறந்தது.

உன் சமூகம் ஆபத்துகளையும் இன்னல் களையும் சந்திக்கும் போது அவர்ககளை விட்டு நீ விரண்டு ஓடாமல் அவர்களுடனேயே இருந்து பணி செய்வதே சிறந்தது. ஏனெனில் மக்களோடு கலந்துற வாடி அவர்களால் ஏற்படும் இன்ன ல்களை சகித்துக் கொள்பவரே சிறந்தவர்.

நல்ல விஷயங்களில் மக்களுடன் பங்கேற்க வேண்டும். ஒதுங்கக் கூடாது. தீய விஷயங்களில் ஒதுங்க வேண்டும். பங்கேற்கக் கூடாது. தீமை யிலிருக்கும் மக்களிடம் பழகினால் அந்த தீமை நீங்கும் அல்லது குறையும் என்றிருந்தால் பழகலாம் தவறில்லை.



சுருங்கக் கூறின் ஒவ்வொரு காலத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப இறைவனின் திருப்தியை பெற்றுத் தரும் பணி எதுவோ அதுவே சிறந்தது. காலம் எதை கட்டாயப்படுத்துகிறதோ அதைச் செய்திட வேண்டும்.

இதுவே நான்காம் வகையினரின் நிலைப்பாடு, இவர்களே பொதுவான இறை யடியார்கள். முதல் மூன்று வகையினரும் தம்மை ஒரு சூழலோடு பிணைத்துக் கொண்டு அதற்கு ஏற்பட இறை வணக்கத்தை அணுகுகின்றனர்.

தம்மை வருத்திக் கொள்பவர், துறவி, சமூக சேவகர் ஆகிய முதல் மூன்று வகையினரும் தத்தமது துறைகளை விட்டு லேசாக அகன் றாலே தம் வழிபாட்டில் பெரும் குறை ஏற்பட்டு விட்டதைப் போல நினைக்கின்றனர். ஏனெனில் அவர் தம் துறை வழியாகவே இறை வணக்கத்தைப் பார்க்கின்றார்.

ஆனால் நான்காம் வகையினர் அப்படிப் பட்டவர்கள் அல்லர். எல்லாத் துறைகளையும் இறை வணக்கமாகவே பார்க்கின்றனர். இறை வனின் திருப்தியே தம் இலட்சியம் என்று இவர் வாழ்வதால் எல்லா வழிகளிலும் தேவைக் கேற்ப செயல்பட்டு இறை திருப்திக்கு ஆளாகி விடுகின்றனர்.

எனவே இவரின் எல்லா செயல்களும் வணக்க வழிபாடுகளாக ஆகிவிடுகின்றன. இவர் போராளிகளோடும் இருப்பார். பேரறிஞர் களோடும் இருப்பார். வாரி வழங்கும் வள்ளல் களோடும் இருப்பார். இறைவனைத் துதிப்பவர் களுடனும் இருப்பார்.

இவர் இப்படித்தான் என்று வரையறுத்து கூற முடியாது. ஏதேனுமொரு பாணியில்போய் முடங்கிவிடாமல் பொதுவான இறையடிமை யாக இருப்பார். தன் மன விருப்பத்துக்கும் ஆசைக்கும் சந்தோஷத்திற்கும் ஏற்ப (அமல்) பணி செய்ய மாட்டார். மாறாக இறைவனின் திருப்தி எதில் கிடைக்கும் என்று தேடிப் பணி செய்வார்.

எளிய உணவுகளை சாப்பிட்டு, கிடைக்கும் ஆடைகளை அணிந்து காலத்துக்கேற்ற பணி களில் ஈடுபடுவார். சத்தியத்தை விரும்புவார். அசத்தியத்தை வெறுப்பார், சேரும் இடமெல் லாம் பயன் தரும் மழைபோல் வாழ்வார். தன் இலைகளை தரையில் உதிர்க்காத பேரீத்தம் மரம்போல இருப்பார். எதையும் வீணாக்க மாட்டார். பேரீத்தம் மரத்தின் முள் கூட பயன்தரும் அதுபோல இவர் வாழ்வார்.

அல்லாஹ்வின் கட்டளைகள் மீறப்பட்டால் பொங்கி எழுவார். அல்லாஹ்வின் கண்ணியம் பங்கப்பட்டால் சினம் கொள்வார். அல்லாஹ் வுக்காக வாழ்வார். அல்லாஹ்வின் வழிகாட்டுதல் கொண்டே தன்னை வடிவமைத்துக் கொள்வார். உலகத்தையே மறந்து அல்லாஹ்வுக்காக பணி செய்வார். தன்னலம் கருதாமல் சமூகப் பணி செய்வார்.

“இறைவா உன்னையே வணங்குகிறோம்! உன்னிடமே உதவியும் தேடுகிறோம்” (1:5) என்று சொல்வதோடு நின்றுவிடாமல் தம் ஒவ்வொரு பணிகளால் அதை நிரூபிப்பார். அல்லாஹ்வுக்காக பணி செய்வதில் சுகம் காணும் அறிய மாமனிதராக இருப்பார். இதன் மூலமே மன அமைதி பெறுவார். இதிலே நிம்மதியைத் தேடுவார். (நூல் : மதாரிஜுஸ் ஸாலிகீன்)

# இஸ்லாம், அரசியல், அதிகாரம்

தொடர் 3

# அரபுலக எழுச்சி



மேற்கு உலக கலாச்சாரத்தோடு ஒன்றிப் போவதா அல்லது அதை முழுமையாக எதிர்த்து மீண்டும் குர்ஆன், ஷரியத் அடிப் படையில் இஸ்லாமிய அரசை நிலைநாட்டுவதா என இரண்டு கேள்விகள் அரபு உலகத்தின் முன் நின்றன.

இரண்டு நிலைபாடுகளுமே அரபுலகத்தில் காணப்பட்டன. இதனிடையே இஸ்லாமிய கலாச்சாரத்தை மீட்டெடுக்கும் விதமாக 19 ஆம் நூற்றாண்டில் அரபு மறுமலர்ச்சியும் ஏற்பட்டது. முஸ்லிம்கள் ஒன்று பட வேண்டும், அவர்கள் ஒரே தலைமையின் கீழ் ஆட்சி செய்யப் பட வேண்டும் என்ற சிந்தனையின் அடைப் படையில் Pan-Islamism என்ற கொள்கை உருவானது. ஆப்கானி, அப்துஹ் மற்றும் ரஷித் ரிடா போன்றோர் Pan-Islamism-தின் முன்னோடிகளாக திகழ்ந்தனர்.

ஜமால் அல்-தின்-அல்-ஆஃப்கானி (1837-97): மேற்கு உலக ஆதிக்கத்தின் விளைவாக ஏற் பட்ட பிரச்னைகளுக்கு தீர்வு காண மீண்டும் முஸ்லிம் கலாச்சாரத்தை கொண்டு வந்திட முயற்சி செய்தவர். கல்கத்தா, கெய்ரோ, இஸ்தான்புல், ரஷ்யா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு பயணம் செய்து அங்கெல்லாம் சில காலம் தங்கியுள்ளார். பிரான்சின் எர்னெஸ்ட் ரெனான் மற்றும் இந்தியாவை சார்ந்த செய்யத் அஹ்மத் கான் போன்ற அப்பொழுது வாழ்ந்த அறிஞர்களிடம் கலாச்சாரம் மற்றும் அரசியல் தொடர்பான கருத்து பரிமாற்றங்களில் ஆர்வ முடன் ஈடுபட்டவர்.

ஆப்கானியை பற்றி வரலாற்றாசிரியரான கரன் ஆர்ம்ஸ்ட்ராங் இப்படி குறிப்பிடுகிறார்

“அவர் அனைத்து மக்களுக்கானவரை போன்று தன்னை காட்டிட முயன்றார். சுன்னத் ஜமாஅத்தார்களுக்கு சுன்னத் ஜமாஅத்தாரை போன்றும் சியாக்களுக்கு சியாவை போன்றும், ஒரு சீர்திருத்தவாதியாகவும், ஒரு சமய தத்துவ வாதியாகவும் மற்றும் ஒரு மக்கள் உறுப்பினராக வும் தன்னை முன்னிறுத்தி கொள்ளும் வலிமையை பெற்றிருந்தார்”. (Armstrong, A History of God)

கல்வியிலும் அறிவிலும் முஸ்லிம்கள் பின் தங்கி போனதே அவர்கள் மீது மேற்கத்தியர்கள் ஆதிக்கம் செலுத்த காரணமாக அமைந்தது என்று 1897 இல் எழுதினார்.

நாகரீக வளர்ச்சியில் மதத்தை விட அறிவி

யலே மிகவும் முக்கியமானது என்று கூறிய செய்யித் அஹமத் கானிற்கு மறுப்பு தெரிவிக்கும் விதமாக அல் ராத் அல அல்-தஹ்ரியின் (Refutation of the Materialist) என்ற ஆய்வு கட்டுரையை எழுதினார்.

*1892*-இல் உதுமானிய சுல்தான் அப்துல் ஹமீத்திற்கு பின்வருமாறு எழுதினார்.

"நாம் வாழ்ந்த கடைசி தடங்கள் வரை நம்முடைய மண்ணிலிருந்து அழிக்கப்பட வேண்டும் என்பதே எல்லோருடைய ஒரே விருப்பமாக உள்ளது.

நம்முடைய பலகீனத்தையும், கோழைத் தனத்தையும் அவர்கள் அறிந்து விட்டார்கள் எனில் ரஷ்யா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்சு என அவர்கள் அனைவரும் இந்த நோக்கத்தில் ஒன்றிணைந்தே செயல்படுவார்கள். ஆனால் நாம் ஒருங்கிணைந்து விட்டால், முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றாகிவிட்டால் நாம் அவர்களுக்கு தீங்காவோம். மேலும் அதனால் பயன் உண்டாகும். இன்னும் நம் குரல் ஓங்கி ஒலிக்கும்". (Keddie, The Pan Islamic Appeal)

*1892*- இல் சுல்தான் அப்துல் ஹமீத் அவர்கள் ஆப்கானியை சில முக்கிய அரசியல் திட்டங்கள் குறித்து கலந்துரையாட வருமாறு அழைத்தார். முஸ்லிம்களின் சிந்தனை திறன் அழிந்து போனதை பற்றி இப்படி எழுதினார்.

"எப்பொழுது பொருள்முதல் வாதத்தில் நம்பிக்கை வைக்க தொடங்கினார்களோ அன்றிலிருந்து தான் முஸ்லிம்களின் வலிமை குறைய ஆரம்பித்தது. இஸ்லாமிய உலகில், எப்பொழுதெல்லாம் சந்தேகமும், சிதைவும் நடைபெற்றதோ அங்கே ஏதோ ஒரு வடிவில் பொருள் முதல்வாதம் முளைத்திருப்பதை காணலாம்." (Keddie, The Pan Islamic Appeal)

### உதுமானிய கிலாபத்தின் வீழ்ச்சிக்கு பின்

*1924*-இல் உதுமானிய கிலாபத் வீழ்ந்த பின் முஸ்லிம்கள் அரசியல், மத நெருக்கடிகளை சந்திக்க தொடங்கினர். *632*-க்கு பின் முதன் முறையாக முஸ்லிம் உலகம் தலைமையை இழந்து நின்றது. தேசம், தேசியம் போன்ற மேற்குலக கருத்துக்கள் முஸ்லிம் உலகில் திணிக்கப்பட்டன. எனவே மீண்டும் கிலாபத்தை நிறுவிட வேண்டும் என்று சில அறிஞர்கள் செயல்படத் தொடங்கினர்.

இமாம் ஹசன் அல் பன்னா *(1906-49)*, செய்யத் குதுப் *(1912-66)*, செய்யத் அபுல் ஆல மவ்தூதி *(1903-79)* மற்றும் இமாம் ரூஹுல்லாஹ் ஆயத்துல்லாஹ் கொமைனி *(1902-89)* போன்றோர் தங்கள் இஸ்லாமிய கருத்துக்களின் மூலம் அடுத்த வந்த தலைமுறைகளிடம் ஆதிக்கம் செலுத்தினர்.

நவீன அரபு உலகத்தில் இஸ்லாமிய புத்தெழுச்சிக்கான கருத்தியலை அடித்தளமிட்டதில் இமாம் ஹசன் அல் பன்னாவின் பங்கு அலாதியானது.

*1928*- இல் அவர் இஹ்வானுல் முஸ்லிமூன் எனும் முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தை ஆரம்பித்தார். துருக்கி எப்படி இஸ்லாத்தை கொஞ்சம் கொஞ்சமாக கைவிட்டதோ அதே பாணியை பின்பற்றி தான், *1920*களில் மதசார்பற்றவை எனக் கூறிக்கொண்டு பல பல்கலைகழகங்கள் எகிப்தில் நிறுவப்பட்டன என அவர் கருதினார். இந்த பின்னணியில் தான் அவர் தனது சித்தாந்தத்திற்கான அடிப்படைகளை நிறுவ ஆரம்பித்தார்.

அன்றைய நாட்களில் இருந்த நிலைமையை இமாம் பன்னா பின்வருமாறு குறிப்பிட்டார்.

"கடைசி யுத்தத்திற்கு பின்பும் (முதல் உலகப்போர்) மற்றும் கெய்ரோவில் நான் தங்கியிருந்த நாள்களிலும், அறிவு சுதந்திரம் என்ற பெயரில் ஆன்மீகத் தளர்வும், அறிவுத்திறன் வீழ்ச்சியும் அதிகமாக காணப்பட்டன. தனி நபர் சுதந்திரம் என்று சொல்லிக் கொண்டு ஒழுக்க நடத்தையிலும் செயலிலும் சீர்குலைவு காணப்பட்டன. பணம், செல்வம், புகழ், படாடோபம், பொருள் சுகம், அதிகாரம் மற்றும் பிரச்சார உத்திகள் போன்ற அழிவை உண்டாக்கிடும் காரணிகளோடு படையெடுத்து வந்த மேற்கத்திய தாக்குதலுக்கும் அதுநாள் வரை அங்கே கோலூன்றியிருந்த இஸ்லாத்திற்கும் மத்தியில் எகிப்தியர்களின் சமூக வாழ்வு தள்ளாடியதை நான் கண்டேன்." (Rabi, Intellectual Origin of Islamic Resurgence in the Arab World)

இன்ஷா அல்லாஹ் தொடரும்

- அபூஹாசின்



# வெயிலால் ஏற்படும் உடல் ரீதியான பாதிப்புகளுக்குத் தீர்வு

**வெயிலால் உடல்ரீதியாக பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன. இந்த உடல் நலப் பிரச்சினைகளை எப்படித் தவிர்க்கலாம்? என்பதை பார்ப்போம்.**

**தலைக்கு எண்ணெய் :** வெயிலின் தாக்கத்தால் முடி உதிர்தல் ஒருபுறம் இருக்க, முடி உடைதலும் அதிகமாக இருக்கும். இதைத் தடுக்க, சுத்தமான தேங்காய் எண்ணெய்யைத் தலையின் மேல் தோலில் படுமாறு தினமும் மென்மையாகத் தேய்க்க வேண்டும். குறிப்பாகக் காலையில் தேய்த்து வர, அன்றாடம் வெயிலில் செல்லும்போது, வெயிலின் தாக்கத்தால் முடியின் வேர்கள் வலுவிழப்பது தடுக்கப்பட்டு, முடி உடைதல், முடி உதிர்வுப் பிரச்சினைகள் வெகுவாகக் குறையும். கூடுதலாக வெப்பத்தால் தலையில் ஏற்படும் கொப்பளங்களும் தடுக்கப் படும். மேலும், வெயில் தாக்கத்தால் ஏற்படும் கண் எரிச்சலும் குறையும்.

**எரிச்சல் தீர்க்கும் :** உடல் வறட்சி, உடலில் நீர்ச்சத்துக் குறைதல், அதைத் தொடர்ந்து ஏற்படும் சிறுநீர் எரிச்சல் போன்றவை இருக்கும் என்றாலும், கோடையில் அவற்றின் தாக்கம் கொஞ்சம் அதிகமாகவே இருக்கும். ஒரு நாளைக்கு மூன்று முதல் நான்கு லிட்டர் தண்ணீர் குடிப்பது அவசியம். வெட்டிவேர் போட்டு ஊறவைத்த தண்ணீரைக் குடித்துவர, உடல் சூடு குறையும்.

ஒரு லிட்டர் தண்ணீருக்குச் சீரகம், வெந்தயம் தலா 10 கிராம் சேர்த்து, 10 நிமிடங்கள் கொதிக்க வைத்து அந்த நீரைக் குடித்துவர சிறுநீர் எரிச்சல் காணாமல் போகும். மேலும் பூசணிக்காய், சுரைக்காய், முள்ளங்கி, வாழைத் தண்டு, வெள்ளரிக்காய், எலுமிச்சை, இளநீர், நுங்கு போன்ற நீர்ச்சத்து நிறைந்த காய்கறிகள், பழங்களை இந்தக் காலத்தில் அதிக அளவில் உட்கொள்ள வேண்டும்.

வெயில் சூட்டால் ஏற்படும் பேதிக்கு, நீர் மோரில் வெந்தயம் சேர்த்துக் குடிக்கலாம். உடல் செரிமானத்துக்கு நன்மை பயக்கும் பாக்டீரியாவை உருவாக்கும் குணம் நீர் மோருக்கு உண்டு. இந்த நாட்களில் அதிக காரம், சூடு நிறைந்த உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும். அசைவ உணவில் நண்டு, கோழிக் கறி போன்றவற்றைத் தவிர்ப்பது நலம்.

**தாகத்தைப் போக்கும் குளியல் :** இந்த வெயிலில், தாகம்தான் எல்லோரையும் தாக்கும் பரவலான பிரச்சினை. தாகத்தைப் போக்க குடிக்க தண்ணீருடன், குளியலும் அவசியம். அதுவும், எண்ணெய்க் குளியல். உடல் சூட்டை அதிகரிக்காமலும் குறைக்கா மலும் தாங்கும் பண்பு, இந்தக் குளியலுக்கு உண்டு. மற்ற நேரத்தில் எண்ணெய் தேய்த்துக் குளிக்கிறோமோ இல்லையோ, கோடையில்

தவறாது, வாரம் இரு முறை எண்ணெய்க் குளியல் போட்டே ஆக வேண்டும். கோடையில், நோய்த்தொற்று என்பது புறக்கணிக்கத்தக்க அளவே இருக்கும். ஏனெனில், கிருமிகள் வளர்ச்சிக்கு ஏற்ற காலம் வெயில் காலம் அல்ல. வெயிலால் உடலுக்கு ஏற்படும் சிறுசிறு பாதிப்புகளைத் தவிர பெரிய அளவில் நோய்கள் ஏற்படாது. எனவே, கோடை காலத்தில் உடல் சூட்டைக் குறைக்க அக்கறை தேவை.

### காலை பானம் - கூடுதல் கவனம் தேவை!

மற்ற எந்த நோயையும்விட நீரிழிவு நோயில் எல்லோரும் அடிக்கடி கேட்கும் கேள்வி இது. அதைச் சாப்பிடாதே, இதைச் சாப்பிடாதே எனச் சொல்றீங்களே! எதைத்தான் சாப்பிடுவது? என்ற கேள்வியோடு, மருத்துவர் முகத்தை வருத்தமாய்ப் பார்க்கும் நீரிழிவு நோயாளிகள் பலர். இந்த இனிப்பு தேசத்தில் ஏராளமான உன்னத உணவு வகைகள் அவர்களுக்கு உண்டு. தேவையெல்லாம் கொஞ்சம் கரிசனமும் அக்கறையும் மட்டும்தான்.

காலை வெறும் வயிற்றில் உள்ள சர்க்கரை அளவு நீரிழிவு நோயாளிகளுக்கு மிக முக்கிய மானது. அதிகாலையில் அந்த அளவு கொஞ்சம் கூடுதலாக உள்ளபோது நடு இரவில் இன்னும் அதிகமாகவே இருந்திருக்கும்; உறக்கத்தில் இருக்கும் நீரிழிவு நோயாளிக்கு அது சற்று ஆபத்தானது. நீரிழிவு நோயினருக்கு வரும் மாரடைப்பு அதிகம் வலியைத் தராது என்பதை மறந்துவிடக் கூடாது. எனவே, ஒவ்வொரு நீரிழிவு நோயாளியும் இரவு உணவிலும் அதிகாலை பானத்திலும் அதிக கவனத்துடன் இருக்க வேண்டும்.



காபியைவிட நிச்சயம் தேநீர் சிறப்பு. அதுவும் குறிப்பாக பிளாக் டீ எனப்படும் வறத் தேநீர்-கட்டன் சாயா, கிரீன் டீ, ஊலாங் டீ ஆகிய தேநீர் வகைகள் ரத்த சர்க்கரை அளவு கூடாமல் பாதுகாப்பதிலும், நீரிழிவு நோயாளிகளுக்கு, ரத்த நாளச்சுவர்களைச் சிதையாது பாதுகாப் பதிலும் உதவுவதை மருத்துவ ஆய்வுகள் நிரூபித் துள்ளன. தொடர்ச்சியாக மூணு முதல் ஆறு கோப்பை பிளாக் டீ அன்றாடம் அருந்தும் நீரிழிவு நோயாளிக்கு, இதய நோய் 60% தடுக்கப்படுகிறது என ஆய்வுகள் சொல்கின்றன. தேநீரில் கொட்டிக்கிடக்கும் பாலிபீனால்களும் தியானைன் சத்தும்தான் இந்தப் பணியைச் செய்ய உதவுகின்றன.

கிரீன் டீ என்பது, இந்த பாலிபீனால்கள் தேயிலையைப் பதப்படுத்தும்போதும் மணச் செறிவூட்டுகையிலும் இழக்கப்பட்டுவிடாமல், அப்படியே உலரவைத்து எடுக்கப்படுபவை. அதனால்தான் கிரீன் டீக்கு மதிப்பு கொஞ்சம் கூடுதல், விலையும் கூடுதல். கிரீன் டீயின் விலை அதிகம் என நினைத்தால், பிளாக் டீ குடித்தாலும் கிட்டத்தட்ட அதே பலன் கிடைக்கும். பிளாக் டீயோ கிரீன் டீயோ தேநீருக்குப் பால் சேர்த் தால், அதன் பலன் சட்டென்று சரிந்துவிடும். தேநீரில் பாலை ஊற்றியதும் பாலிபீனால்கள் சிதைவடைந்துவிடுவதால், ஆன்ட்டி ஆக்சிடண்ட் தன்மை, கேபிலரி பாதுகாப்பு எல்லாம் குறைந்து போய்விடுகிறதாம். இனி பாலில்லாத பிளாக் டீ அல்லது கிரீன் டீ நீரிழிவு நோயினரின் தேர்வு பானமாக இருக்கட்டும்.

பால் வேண்டாம். துளியூண்டு சர்க்கரை? என்று சிலர் கேட்கலாம். கூடவே கூடாது. இன்னொரு முக்கிய விஷயம் நீரிழிவு நோய் மிகச் சிறந்த கட்டுப்பாடு வரும்வரை நாட்டுச் சர்க்கரை, தென்னைச் சர்க்கரை, பனஞ்

சர்க்கரை என எந்த வகை சர்க்கரையும் கொஞ்ச காலத்துக்கு வேண்டாம்.

**செயற்கை சர்க்கரை ஆபத்து :** நீரிழிவு நோய் இன்னும் வரவில்லை. வயது 35-யைத் தாண்டுகிறது. பரம்பரைச் சொத்தாக நீரிழிவு நோய் வந்துவிடுமோ என அச்சத்தில் இருப்ப வரும், இனிப்பு சுவைக்குத் தேனோ பனங் கருப்பட்டியோ கொஞ்சமாகப் பயன்படுத்தலாம். கரும்பு வெல்லம் என்றால், அதை வெளுக்க வைக்க பயன்படுத்தப்படும் ஹைட்ரோஸ் சேர்க்காத வெல்லத்தூளைக் கொஞ்சமாகப் பயன்படுத்தலாம். 40 வயதைத் தாண்டும் எல் லோருமே இனிப்பு, உப்பு சுவைகளைக் குறைத்து கசப்பு, துவர்ப்பு சுவையைக் கூட்டுவது நீரிழிவு இதய நோய்கள் வராது காக்கும்.

இனிப்பு வேண்டாம். செயற்கை இனிப்பு? இன்றைக்கு ஸீரோ கலோரி எனச் சந்தையில் ஏராளமாய்ப் புழங்கும் செயற்கைச் சர்க்கரை யையும் சற்று எச்சரிக்கையுடனேயே அணுக வேண்டியுள்ளது. சுக்ரலோஸ் இன்று உலகச் சந்தையை ஆக்ரமித்துள்ள செயற்கைச் சர்க்கரை. ஒரிஜினல் சர்க்கரை மூலக்கூறுகளில், சில அணுக்களை நீக்கிவிட்டு, குளோரின் அணுக் களைச் சேர்த்து செயற்கையாக உருவாக்கப்படும் இந்த இனிப்பு, வெள்ளைச் சீனியைவிட 600 மடங்கு அதிக இனிப்பைத் தரும்.

முதலில் இது முற்றிலும் பாதுகாப்பானது. உடலில் எந்த உறுப்போடும் பணியாற்றாது. முற்றிலும் இன்னெர்ட் எனப் பேசப்பட்டது. சமீப காலமாக ஆங்காங்கே இல்லை இந்த சுக்ரலோஸ் முற்றிலும் இன்னெர்ட் கிடை யாது. குடல் நுண்ணியிரியோடு சேர்ந்து சில ரசாயனங்களை உருவாக்குகிறது. 450 பாரன் ஹீட்வரை உடையாது எனச் சொல்லப்பட்டா லும், சில சூழலில் அதற்கு முன்பே உடைந்து விடுகிறது. அது புற்றுநோயை உருவாக்கும் காரணியாக மாறுமா? என ஆராயத் தொடங்கி யுள்ளனர்.

அதற்குள் செயற்கைச் சர்க்கரையில் செய்த கேசரி, குலாப் ஜாமூன் என இறங்குவது நிச்சயம் நல்லதல்ல. கசப்புத் தேநீரை பருகியே ஆக வேண்டும். கசப்பு, நீரிழிவுக்கு எப்போதும் சிறந்த பாதுகாப்பும்கூட.

நடைப்பயிற்சிக்கு 20 நிமிடங்களுக்கு முன்னர் கொஞ்சமாக பிளாக் டீ, அலுவலகப் பணிக்கு இடையே சோர்வு நீக்க கிரீன் டீ, கொஞ்சம் கூடுதல் காஃபீன் மணத்தோடு தேநீர் வேண்டும் எனில் சீனத்து ஊலாங் டீ, மாலையில் லவங்கப் பட்டை, செம்பருத்தி இதழ் சேர்ந்த மூலிகைத் தேநீர், இரவு உணவுக்கும் காலை உணவுக்கும் முன்னதாக ஆவாரைக் குடி நீர் என நீரிழிவு நோயர் தங்கள் தேநீரைத் தேர்வு செய்துகொண்டால், எப்போதும் உற்சாகம் உண்டு. உடல் ஆரோக்கியத்தையும் உறுதிப்படுத்தும்!

### நீர்க்கடுப்புக்கு நீரிழிவு காரணமா?

அடிக்கடி சிறுநீர்த் தொற்று ஏற்படுவதற்கும், நீரிழிவுதான் முக்கியக் காரணமாக இருக்கும். ஒருமுறை ரத்தச்சர்க்கரை அளவுகளை வெறும் வயிற்றிலும், உணவு சாப்பிட்டு இரண்டு மணி நேரத்துக்குப் பின்பும், மூன்று மாத சராசரி ரத்தச் சர்க்கரை அளவையும் (எச் பிஏ1சி) பார்த்துக்கொள்ளுங்கள். இவை எல்லாமே சரியாக இருக்கிறது என்றால், நீங்கள் தேவையான அளவுக்குத் தண்ணீர் குடிக்காதது அடுத்த காரணமாக இருக்க சாத்தியமுள்ளது.

கோடைக்காலத்தில் தினமும் குறைந்தது 4 லிட்டர் தண்ணீர் கண்டிப்பாகக் குடிக்க வேண்டும். பொதுவாகச் சொன்னால், தாகம் அடங்கும்வரை தண்ணீர் குடிக்க வேண்டும். தண்ணீர் சரியாக குடிக்காவிட்டால், சிறுநீரில் தாதுக்கள் அதிகமாகச் சேர்ந்துப் படிகமாகி சிறுநீரின் அடர்த்தி அதிகரித்துவிடும். இதனால் சிறுநீர் போகும் போது எரிச்சல் ஏற்படும்; நீர்க்கடுப்பு உண்டாகும்.

கோடையில் அதிகமாக வியர்ப்பதால் உடலில் சீக்கிரத்தில் நீர் இழப்பு ஏற்பட்டு விடும். போதுமான அளவுக்குத் திரவம் நம் உடலில் இல்லையென்றால், சிறுநீர்ப் பாதையில் தொற்று ஏற்படும் சாத்தியம் அதிகரிக்கும். அப்போது சிறுநீர் போகும்போது எரிச்சல் ஏற்படும். குளிர் காய்ச்சல் வரும். நீண்ட நேரம் சிறுநீரை அடக்கி வைத்தால், அதன் அடர்த்தி அதிகமாகி, தொற்று ஏற்பட்டு நீர்க்கடுப்புக்கு வழிவகுக்கும்.

- நன்றி விடுதலை



# இதுதான் இந்துத்துவா கல்வியோ!

## பொறியியல் கல்லூரிகளில் சீரமைக்கப்பட்ட பாடத் திட்டத்தில் வேதங்கள், புராணங்கள், யோகா பாடங்களாம்

பொறியியல் கல்லூரிகளில் மாணவர்களுக்கு ஏ.அய்.சி.டி.இ. உத்தரவின்படி சீரமைக்கப்பட்ட பாடத்திட்டத்தில் வேதங்கள், புராணங்கள், யோகா ஆகியவற்றை பாடங்களாக இணைத்திட வேண்டும் என்று குறிப்பிடப் பட்டுள்ளதாம்.

மத்தியில் மோடி தலைமையிலான பாஜக அரசு அமைந்த நாள் முதல் இந்துத்து வாத் திணிப்பு என்பது பல திக்கிலும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

குறிப்பாக கல்வித்துறையில் மத்திய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்ச கத்தின் சார்பில் தொடர்ச்சியாக இந்துத் துவா திணிப்புகள் நடந்து வருகின்றன

பள்ளிகளில் ஆசிரியர் தினத்தை 'குரு உத்சவ்' என்றது. மத்திய அரசுப் பள்ளிகளில் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் ஜெர்மன் மொழிப் பாடத்தை நீக்கிவிட்டு சமஸ்கிருத மொழிப்பாடத்தை கட்டாய மாக்கியது. சிபிஎஸ்இ பாடத்திட்ட பள்ளி களில் சமஸ்கிருதப் பாடத்தை கட்டாயம் ஆக் கியது. தற்பொழுது ஏ.அய்.சி.டி.இ. சார்பில் வெளியிடப்பட்டுள்ள தகவலின் படி, பன்னாட்டு அறிவியல் பார்வையில் இந்தியாவின் பங்களிப்பை உணர்த்தும் வண்ணம் இந்திய தத்துவங்கள், மொழி மற்றும் யோகாவுடன் பழங்கலைகள் இந்திய பழைமையான அறிவை புகட்டக் கூடிய பாடங்களாக அளிக்கப்பட உள்ளது என்று ஏ.அய்.சி.டி.இ. குறிப்பிட்டுள்ளது.

பல்வேறு பிரிவுகளைக் கொண்டுள்ள பொறியியல் துறையில் பொறியியல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கணினி, இணை யம், புல்லட் ரயில் தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட பல்வேறு நவீன அறிவியல் பாடங்கள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. அவற்றுடன் வேதங்கள், புராணங்கள்,தர்க்க சாஸ்திரங்கள் ஆகியவையும் கற்பிக்கப்பட உள்ளதாக அனைத்திந்திய தொழில்நுட்ப கல்விகுழு (ஏ.அய்.சி.டி.இ.) குறிப் பிட்டுள்ளது.

அரசமைப்புச்சட்டம், சுற்று சூழலியல் உள்ளிட்ட பாடங்களும் கட்டாயமாக்கப் படும் என்றும் இந்த கல்வியாண்டு முதலே நடைமுறைப்படுத்தப் படும் என்றும் ஏ.அய்.சி.டி.இ. குறிப்பிட்டுள்ளது.

**மத்திய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் கூறியதாவது:**

"மாணவர்களின் உரிமைகளின்படி, மேம்படுத்தப்பட்ட பாடத்திட்டத்தை அளிக்கும் வகையில், மாதிரி பாடத் திட்டம் தயாரிக்கப்பட்டு சீரமைக்கப்படும். சமுதாயத்துடன் தொழில் நிறுவனங்கள் இணைந்திருப்பதற்கு பொறியியல் பட்ட தாரிகள் ஒரு பாலமாக இருப்பதற்கு சீரமைக்கப்பட்ட பாடத்திட்டம் உதவும். தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ப, ஆண்டுதோறும் பாடத்திட்டத்தில் மாற்றங்கள் செய்யப்படும்.'' என்றார்.

சிந்தனை மற்றும் பகுத்தறிதல் மற்றும் அனுமானங்கள் கல்விக்கான அடிப்படைக் கோட்பாடுகளாக உள்ளன என்று கல்வியின் நோக்கமாக கூறப்படுகின்றது.

கான்பூர் அய்.அய்.டி. கணினி அறிவியல் துறைப் பேராசிரியர் தீரஜ் சங்கி கூறு கையில், "துறைக்கு தொடர்பில்லாதவற்றை கற்பிப்பதற்கு எல்லை கிடையாது என்றா லும், அதைக் கட்டாய மாக்கக்கூடாது'' என்றார்.

**செய்முறைத் தேர்வு மதிப்பெண் குறைப்பு**

ஏ.அய்-.டி.சி.இ.யின் புதிய பாடத்திட் டத்தின்படி, ஆய்வக செய்முறைத் தேர்வு மதிப்பெண்கள் 220இலிருந்து 160ஆக குறைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பொறியியல் கல்லூரிகளி லிருந்து பட்டதாரிகள் திறமையுடன் வெளி வர வேண்டும் என்று தொழிற்சாலைகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

பொறியியல் பட்டதாரிகளில் பெரும் பான்மையோர் போதிய பயிற்சியின்மை யால், வேலைவாய்ப்பின்றி உள்ளனர்.

நாடுமுழுவதும் மூவாயிரம் பொறியியல் கல்வி நிறுவனங்கள் உள்ளன. ஆண்டு தோறும் 70 ஆயிரம் பொறியாளர்கள் உருவாகின்றனர். அவர்களில் பாதி அளவின ருக்குத்தான் வேலை வாய்ப்பு கிடைக்கிறது.

2015, 2016ஆம் ஆண்டில் ஏழு லட்சத்து 58ஆயிரம் பொறியாளர்களில் மூன்று லட்சத்து 34ஆயிரம் பேர் மட்டுமே கல் லூரிகளில் நேர்காணல் மூலமாக பணி வாய்ப்பு பெற்றனர் என்று ஏ.அய்.சி.டி.இ. புள்ளிவிவரம் கூறுகின்றது.

**ஏ.அய்.சி.டி.இ. தலைவர் அனில் சகஸ்ரபுத்தே கூறியதாவது:**

"அனைத்து மாணவர் களும் கல்லூரியில் சேர்க்கப்படும்போதே, அவர்களுக்கு அடிப்படையான பயிற்சி கட்டாயமாக அளிக்கப்படுகிறது. மேலும் அவர்களுக்குத் தொழில் நுட்ப கல்விக்குரிய மொழிப் பயிற்சியும் அளிக்கப் படுகிறது. நிர்வாக மேலாண்மை மற்றும் முதுநிலை பட்டய மேலாண்மை கல்விக்கான நன்மதிப்பு புள்ளிகள் குறைந்தபட்சம் 102 ஆக இருக்கின்றன'' என்றார்.

ஆண்டுதோறும் பாடத் திட்டங்களை மேம்படுத்திட பல்கலைக்கழகங்கள் குழு அமைக்க வேண்டும் என்று பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களிடம் ஏ.அய்.சி.டி.இ. சார்பில் கேட்டுக் கொள்ளப் பட்டது. நிர்வாக ஒதுக்கீட்டுக் குரிய பாடத் திட்டங்களிலும் மாற்றங்கள் செய்யப் படுகின்றன. அவர்களும் அதை ஏற்றுக் கொண்டு, புதிய பாடத்திட்டத்தை நடை முறைப்படுத்த ஒப்புக்கொண்டனர் என்று ஏ.அய்.சி.டி.இ. அலுவலகத் தரப்பினர் கூறியுள்ளனர்.

# நூல் அரங்கம்




**கொட்டிக்கிடக்கின்றன சலுகைகள் சிறுபான்மையினரின் முன்னேற்றத்திற்கு தன்னால் இயன்றதையெல்லாம் செய்தவர் அசன்சேக்.**

யார் ஓய்ந்தாலும், நான் ஓய மாட்டேன் என ஒரு வேலையை நிரந்தரமாக செய்து கொண்டிருக்கின்றார் அசன்சேக். அதுதான் **கொட்டிக்கின்றன சிறுபான்மை யினருக்கான சலுகைகள்** என்ற நூலின் வெளியீடு.

இந்த வருடமும் மெத்த சிரமத்தோடு அதனை வெளிக் கொண்டு வந்திருக்கின்றார். ஆனால் கடந்த வருடங்களை விடவும் மிகவும் நேர்த்தியாகவே கொண்டு வந்திருக்கின்றார்.

எப்படியும் சிறுபான்மையினருக்கான சலுகைகள் பற்றிய ஒரு விழிப்புணர்வு கொண்டு வந்திட வேண்டும் என்பதே அவருடைய நோக்கம்.

இந்த நூல் இலவசமாகவே விநியோகிக்கப்படுகின்றது. இது சிறுபான்மை சமூகத்தைச் சார்ந்த அனைவருக்கும் பொதுவானது. அனைவரும் இதனைப் பெற்று பயனடைய வேண்டும்.

---

# நோன்பு வினாவும்-விளக்கமும்

**தொகுப்பு : எஸ்.அமீர் ஜவஹர்,** B.A.,B.L.,




ஹாஜி அமீர் ஜவஹர் அவர்களின் இஸ்லாமிய இலக்கிய ஈடுபாட்டை வெளியே காட்டிடும் அளவில் இன்னொரு நூல் வெளியே வந்திருக்கின்றது. அதுதான் இந்த நூல். இது அவருடைய சீரிய முயற்சியில் வெளிவரும் 20-ஆவது நூல்.

திருக்குர்ஆனின் வசனங்களை அடிப்படை யாகக் கொண்ட இந்த நூல் வெளியிடப்பட் டுள்ளது. ஓரிரு இடங்களில் இடம் பெற்றுள்ள திருக்குர்ஆன் வசனத்தின் எண்கள் தவிர்க்கப் பட்டிருக்க வேண்டும். பக்கம்-6. ஆனால் வாசகர்கள் அதனை பக்கம் 11-இல் பெற்றுக் கொள்ளலாம்.

நோன்பின் நோக்கத்தை நூல் விரித்துரைக்கின்றது. அனைவரும் படித்து பயன்பெற்றிட வேண்டிய நூல். நூலை முன்னணி வெளியீட்டாளர்

**ஸாஜிதா புக் சென்டர்தான் வெளியிட்டுள்ளார்கள்.**

**56 பக்கங்களைக் கொண்ட நூலின் விலை ரூ. 30 /- மட்டுமே.**



"எண்ணங்களின் அடிப்படையிலேயே செயல்கள் இருக்கின்றன" என்றார்கள்.

எண்ணங்களை வடிவமைப்பது கல்வியோ, "பயனற்ற கல்வியிலிருந்து பாதுகாப்பாயாக" என நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தித்தார்கள். பயனுள்ள கல்வி அல்லாஹ்வால் மனித குலத்திற்கு அருளப்பட்ட குர்ஆன்தான். இது அருளப்பட்ட போது நபி (ஸல்) அவர்களைத் தவிர வேறு எவரும் முஸ்லிம்களாக இல்லை. அவருடைய காலத்தில் குர்ஆன் கல்வியை பின்பற்றியவர்கள் அனைவரும் இன்று நம்மோடு பகும் மாற்று மதத்தவர்களை போன்ற வர்களே. அறியாமையை போக்கி அறிவை வழங்கக் கூடியது திருக்குர்ஆன் என்பதை

# கல்வி அறியாமையை போக்கி ஆற்றலை வளர்க்க வேண்டும்

இந்த நூற்றாண்டில் கல்வியின் அவசியத்தை விலாவாரியாக புரிய வைக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் ஒவ்வொரு தனி மனிதனும் தான் அனுபவிக்கும் பயன்களால் கல்வியின் அவசியத்தை உணர்ந்தே இருக்கின்றான்.

ஆனால் மனிதகுலத்திற்கு விஞ்ஞான, பொருளாதார வளர்ச்சியை வழங்கிய இன்றைய கல்வி, அமைதியை ஏற்படுத்துவதில் தோல்வியடைந்துவிட்டது. நவீன உயர்வு தாழ்வை கற்பித்திருக்கிறது. தற்பெருமையை உயர்த்தி பிடிக்கச் செய்கிறது. எந்த ஒரு நற்செயல் செய்தாலும். அதனால் நான் பெருமை கொள்கிறேன் என உரக்க சொல்ல உற்றுகிறது. விளம்பரப்படுத்துகிறது. தனி மனித வீழ்ச்சியை, குடும்ப சிதைவை ஏற்படுத்துகிறது.

மனிதனின் வாழ்வை அமைதிப்படுத்து வதிலும், சிக்கல்களை ஏற்படுத்துவதிலும் எண் ணங்களுக்கும், இங்கிதங்களுக்கும் பங்குண்டு. இதனால்தான் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் புரிந்திருந்தார்கள். லட்சியத்தை காட்டக் கூடியது என்பதை உணர்த்திருந்தார்கள். இவர் களே பிற்காலத்தில் நபி (ஸல்) அவர்களின் தோழர்களானார்கள். குர்ஆன் என்ற கல்வியை உலகின் பல மூலைகளுக்கும் சென்றி உழைத்த முதல் தலைமுறையினர்.

குர்ஆனைப் பற்றி இறைவன் இவ்வாறு கூறுகிறான் :

"திருக்குர்ஆன் புர்கானாக இருக்கிறது" *(25:1)*

அதாவது சத்தியத்தையும், அகத்தியத்தை யும் பிரித்து காட்டக்கூடியது என்பதே இதன் அர்த்தம்.

இக்கருத்தை வழிமொழிந்தே உமர் (ரளி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

"எவர் ஜாஹிலியாவை அறிந்துக் கொள்ள வில்லையோ! அவன் இஸ்லாத்தை அலைக் கழித்தே அழித்துவிடுவான். அசத்தியத்தை அறிந்து கொள்பவர்களால் தான் சத்தியத்தை அதன் பூரண வடிவில் அறிய முடியும்.

திருக்குர்ஆனை படித்துள்ளேன் என்று கூறிக் கொண்டே இஸ்லாம் அல்லாத கொள்கைகளில் விழாமல் இருக்க முடியும். அது மதமாக மட்டுமல்லாமல், அரசியல், பொருளாதார கொள்கையாகவும் இருக்கும் என்பதை உணர வேண்டும். இன்று நாம் படிக்கும் கல்வி நம் எண்ணங்களை ஆளும் ஜாஹிலிய்யா கல்விமுறை. இதனை கற்று இதற்கு மாற்று இஸ்லாம்தான் தீர்வு என்பதை காட்டிட வேண்டும். ஆனால், இதில் ஊறிதிளைத்து இதன் வழியே இஸ்லாத்தையும், முஸ்லிம்களைம் ஆராயும் சிலர் சீர்த்திருத்துகிறோம் என்ற முயற்சியில் கைக்கூலிகளாக உருவாகி விடுகிறார்கள். இவர்கள் மேற்கத்திய சிந்தனை தாக்குதல்களில் வீழ்ந்துவிட்டவர்கள்.

மதம் ஒரு அபின் என்று யூது-கிறிஸ்தவ உலகின் சிந்தனையாளர்களால் பரப்பப்பட்ட கருத்துக்கு இசைவாக திருக்குர்ஆனை புரிந்து கொள்ளக்கூடாது. மதத்தை தன் வாழ்வில் இருந்து நீக்கி, உலகில் முன்னேற வேண்டும் என்ற ஐரோப்பிய சிந்தனைக்கு கிறிஸ்தவ மதத்தின் கொள்கையும், அதனை அழுத்திப் பிடித்த பாதிரிமார்களின் எதோசதிகாரமும் தான் காரணம். இவர்கள் கூறிய அபின் கிறிஸ்தவத்தை தான். இஸ்லாத்தை அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் இஸ்லாம் அவர்களுடைய மதமாக இருக்கவில்லை.

இதற்கு கலீலியோ, கோப்பர் நிக்காஸ் போன்ற அறிவியலாளர்களின் வரலாறே சான்றாக இருக்கிறது.

குர்ஆனும் அதன் செயல்முறை வடிவான ஹதீஸும் பல விஞ்ஞான கண்டுபிடிப்புகளுக்கு உந்துதலாக இருக்கிறது. குர்ஆன் இறைவனால் அருளப்பெற்றது. அதில் இறைவன் தன் படைப்பை பற்றி முரண்பாடின்றி கூறுகிறான். ஆய்வு செய்ய ஆர்வமூட்டுகிறான். சந்திக்க சொல்கிறான். சிந்தனைக்கு தடைவிதிக்கவில்லை. ஆனால் வரம்புகளை விதிக்கிறான். மனித குலத்திற்கு பயன்தர வேண்டும் என்பதை அவ்வரம்பு.

பூமியின் சமநிலை இயக்கத்திற்கு குந்தகம் விளைவிக்காத, விஞ்ஞானத்தை வளர்த்தெடுப்பதே. அவ்வரம்பு. விஞ்ஞானத்தால் ஏற்படும் பொருள் உற்பத்தி நிலையிலும் மனித குலத்தில் உயர்நிலை எட்டியவர்களும், கீழ்படியில் உள்ளவர்களுக்கே இடையே மனிதன் என்கிற அடிப்படையில் சமத்துவத்தை பேண வேண்டும். நீதி ஒன்றாக இருக்க வேண்டும். போன்றவை பொருளாதார வளர்ச்சியின் வரம்புகளாகும்.

இவ்வரம்புகளை திருக்குர்ஆனின் வழி காட்டுதலால் சுயமாக பயிற்றுவிக்கப்பட்டவர்கள், எந்த காரியத்தை செய்தாலும் "இது சட்டப்பூர்வமானதா (Rule of Law)" என்று கவனித்ததை விட "இது ஒழுங்குமுறையானதா (Rule of Principle) நன்மை பயக்கக்கூடியதா" என்று கவர்ந்து கவனித்தே செய்தார்கள்.

ஏனெனில் சட்டம் எந்த ஒரு தவறான செயலையும் குற்றமாக கருதும். ஆனால் ஒழுங்குமுறையோ பாவம் என்று உபதேசிக்கும். இதனால் தீமைகள் ஆரம்பக்கட்டத்திலேயே தவிர்க்கப்படுகின்றன. எதையும் சட்டமாக பார்ப்பவர்கள் தவறான நிகழ்வுக்கு வழிகோலுகிறார்கள். சட்டத்தின் ஓட்டைகளை பற்றிப் பிடித்து முன்னேற திட்டமிடுகிறார்கள்.

இப்படி இஸ்லாம் மனிதனை தனக்கு தானே காவலராக பயிற்றுவிக்கிறது. இதனையும் மீறி வாழுபவர்களின் பாதிப்பிலிருந்து பொதுமக்களை காக்க கிரிமினல் சட்ட திட்டங்களை கொண்ட அரசை அமைத்திட முஸ்லிம்களை வலியுறுத்துகிறது இஸ்லாம்.

இப்படி அமைத்துக்கொண்ட காலக் கட்டங்களில் - கி.பி. 700 முதல் கி.பி. 1200 வரை இஸ்லாமிய உலகில் அறிவியல் தழைத்தோங்கியது.

அறிவியல் வளர்ச்சிக்கு இஸ்லாமிய மதமே வழிவகுத்தது தன் கொள்கையால்...

**உதாரணம்-1**

பசுவை புனிதமாக கருதுபவர்களால் அதற்கு முறையான விஞ்ஞானப்பூர்வ மருந்தை கண்டுபிடித்திட முடியாது. ஏனெனில் முதலில் உடல் கூறுயியல் பற்றி புரிதல் வேண்டும். இதற்கு கூறாய்வு (Disection)

செய்தல் வேண்டும். இந்த எளிய உண்மையை இஸ்லாம் புரிந்து வைத்திருந்தது.

இஸ்லாம் இறைவனின் படைப்புகளை மனிதனுக்காக என்கிறது. இதனால் படைப்பு களில் எதனையும் புனிதம் என்று முஸ்லிம்கள் ஒதுக்கி வைத்து அறிவை இழக்கவில்லை. அனைத்தையும் ஆராய்ந்தார்கள். படைப்பின் இலக்கையும், இயக்கத்தையும் ஆய்வு செய்து பதிவு செய்தார்கள். பதிவுகளை எளிதாக புரியவைத்து ஓவியமாக பல வண்ணங்களில் வரைந்தார்கள்.

**உதாரணம் - 2**

அல்ஜீப்ரா என்ற கணிதமுறை அரபு முஸ்லிம்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கு உந்துதலே இஸ்லாம் வலியுறுத்திய சொத்து பிரிவினை முறைதான். இம் முறையை எளிமைப்படுத்தவே அல்-ஜீப்ரா முறை கண்டுபிடிக்கப்பட்டு, சொத்து பிரிவினை வழக்குகள் விரைவாக பைசல் செய்யப்பட்டன.

சொத்து பிரிவினையில் பெண்களுக்கு தர மறுத்த, மௌனம் காத்த மாற்றுக் கொள்கை களுக்கு இக்கண்டுபிடிப்பில் கடுகு அளவும் பங்கில்லை.

**உதாணரம் - 3**

பிறை பார்க்கும் விஷயத்தில் ஏற்படும் பிரச்சனையைப் பற்றி தமிழ்நாடு முஸ்லிம்கள் அறிந்துள்ளார்கள். இப்பிரச்சனை முஸ்லிம் உலகிற்கு புரியதொன்றுமில்லை. இது ஆரம்ப கால முஸ்லிம்களிடத்தில் இருந்துள்ளது. அன்றைய இஸ்லாமிய நீதிமன்றங்களில் வழக் காடப்பட்டு வந்துள்ளது. இப்பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவர செய்த முயற்சிகளால் தான் வானியல் துறையில் புது வெளிச்சம் பாய்ந்தது. வானியல் துறையில் புது கண்டு பிடிப்புகள் கண்டு பிடிக்கப்பட்டன. இதனை சாதிக்க செய்ததும் இஸ்லாமிய கொள்கை வழி முயற்சிகள் தான்.

இவ்வாறு பல இஸ்லாமிய செயல்பாடுகள், கொள்கைகள் அறிவியலை வளர்த்தெடுத்தன. சிலுவை யுத்தங்கள் வழியாக இக்கண்டு பிடிப்புக்களை லத்தீன் மொழியில் மொழிப் பெயர்த்து அங்கரித்துக்கொண்டது கிறிஸ்தவ ஐரோப்பா.

உலகை ஆள வேண்டும், தேவ ராஜ்ஜியத்தை ஏற்படுத்த வேண்டும் என்கிற ஐரோப்பிய வெள்ளை கிறிஸ்தவர்களின் வேட்கையில், உலகத்தின் பல பகுதிகள் அவர்களின் கொடூர மான காலனியாதிக்கத்தின் கீழ் அமுக்கி கொண்டுவரப்பட்டன. இதனால் அவர்களின் மொழி அரசாங்க மொழியானது. பள்ளிகளில் பயிற்று மொழியாக்கப்பட்டது.

இம்மொழியின் ஊடாக பிற இமைக்கள் விஞ்ஞானத்தை கற்றார்கள். தன் இனத்தின் சொந்த வரலாற்றையும் ஐரோப்பிய மொழியின் ஊடாக கற்க நேரிட்டது. இதனால் அறிவியல் கண்டு பிடிப்புகள் அறிவியல் உண்மைகள் சூராப்பியர்களுடையது என்ற மலிவான எண்ணம் உலகின் பல பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டது.

விஞ்ஞானம் வளர வேண்டும் என்றால் வெப்ப ஆற்றல் (Heat Energy) அவசியம். வெப்ப மண்டல பகுதிகளில்தான் - நவீன கால உருக்காலை (Furnale) இல்லாத காலக் கட்டத்தில் - இரும்பை பிரித்தெடுத்து உருக்கி, பல பொருள்கள் செய்வதற்கு தேவையான தட்பவெப்ப நிலை நிலவுகிறது. இதற்கு பாறைகளான மலைகளை உருக்காலைகளாக பயன்படுத்தினான் அக்கால மனிதன்.

குளிர் பிரதேசங்களும், மழை பிரதேசங் களும் இதற்கு உகந்தது அல்ல ; இப்பகுதியின் பாறைகள் குளிர்ச்சியாக இருக்க இரும்பை உருக்குவது இயலாத ஒன்று. இரும்பு தான் நவீன விஞ்ஞானத்தின் அடிப்படை.

இதை அறியாத நமது அறியாமை ஆசிய - ஆப்பிரிக்க விஞ்ஞான நாகரிகங்களை குறைத்து மதிப்பிட்டும், ஐரோப்பியர்களின் வார்த்தை

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.